# கொல்லிமலை சித்தர்கள்

## மலை விசிட் அனுபவம்!

சித்தர்களின் சிறப்பும்
மருத்துவ மகிமைகளும்

கே.ராஜாதிருவேங்கடம்

விகடன் பிரசுரம்



## கே.ராஜாதிருவேங்கடம்

**சே**லம் மாவட்டம், ஜலகண்டபுரம் அருகே உள்ள காப்பரத்தாம்பட்டி என்ற கிராமத்தில் பிறந்தவர்.

இவரது பெற்றோர் கண்ணன் - ஜெயா.

பரமத்தி வேலூர் கந்தசாமி கண்டர் கல்லூரியில் படித்த காலத்தில் விகடன் மாணவப் பத்திரிகையாளர் திட்டத்தில் தேர்வானவர்.

மாணவப் பத்திரிகையாளராகப் பணிபுரிந்த காலத்தில், மிகச் சிறந்த மாணவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர். கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே பல சிறுகதைகளையும் எழுதி இருக்கிறார்.

கடந்த பத்து வருட காலமாக சேலம் மாவட்டத்தில் ஜூனியர் விகடன் நிருபராக பணிபுரிந்தவர்.

தற்போது, ஜூனியர் விகடனில் உதவிப் பொறுப்பாசிரியராக பணிபுரிகிறார்.

# கொல்லிமலை சித்தர்கள்

கே.ராஜாதிருவேங்கடம்

விகடன்
பிரசுரம்

Title :
KOLLIMALAI SITHARGAL
© K. RAJA THIRUVENGADAM

ISBN : 978-81-8476-406-2

விகடன் பிரசுரம்: **640**

நூல் தலைப்பு:
**கொல்லிமலை சித்தர்கள்**

நூல் ஆசிரியர்:
© கே.ராஜாதிருவேங்கடம்

புகைப்படங்கள்:
க.தனசேகரன்

முதற்பதிப்பு : **ஜனவரி, 2012**

விலை : **₹ 75**

பதிப்பாளர்:
பா.சீனிவாசன்

ஆசிரியர்:
இரா.சரவணன்

முதன்மை பொறுப்பாசிரியர்:
பொன்ஸீ

தலைமை உதவி ஆசிரியர்கள்:
எஸ்.கோபால், எம்.நாகமணி, கே.பாசுமணி

உதவி ஆசிரியர்:
சிவராஜ்

முதன்மை வடிவமைப்பு:
மு.ராம்குமார்

தலைமை வடிவமைப்பு:
அ.அன்பழகன்

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமை சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமர்சனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

**விகடன் பிரசுரம்**
757, அண்ணா சாலை, சென்னை-600 002.

எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: publications@vikatan.com

# சித்தர்களின் சொர்க்க பூமி!

மனிதனின் இறைவழிபாட்டில், மலைகளுக்கு எப்போதுமே சிறப்பிடம் உண்டு. அதிலும், கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் பச்சைப் போர்வையைப் போத்திக்கொண்டு, பார்ப்பவர்களுக்குள் பரவசத்தை ஏற்படுத்தும் கொல்லிமலையை ‘சித்தர்களின் சொர்க்க பூமி!’ என்றால், அது மிகையல்ல.

உலக வாழ்க்கையை, ஏழு வகையான கோட்பாடுகளின் அடிப்படையில் வாழ்ந்து, மனித வாழ்வின் பல்வேறு நிலைகளிலும் தன் நிலையை மறவாது, அறத்தோடு வாழும் கலையை எளிய பாடல்களில் விளக்கி, மண்ணுலக உயிர்களுக்கு உதவிகள் பல புரிபவர்கள்தான் சித்தர்கள்.

கொல்லிமலையை இறுக தழுவியபடி காட்சி அளிக்கும் வனத்தில் வாழ்ந்த அகத்திய சித்தர், பாம்பாட்டிச் சித்தர், கடுவெளி சித்தர்... போன்ற பல்வேறு சித்தர்களின் வரலாறு, அவர்களின் ரசவாத சிறப்புகள், அற்புத நிகழ்வுகள், மக்கள், இயற்கை சக்திகளின் வழியில் வாழ்வதற்கான நெறிமுறைகள்... என சித்தர்களின் பல்வேறு சிறப்புகளும் இந்த நூலில் காட்சிகளாக விரிகின்றன. மேலும், கொல்லிமலைக்குச் செல்வோர் அங்கு காண வேண்டிய இடங்கள், கோயில்கள், படகுத் துறை, அதற்கான பயணக் குறிப்புகள், மலைவாழ் மக்களின் பழக்கவழக்கங்கள்... என கொல்லிமலையின் அற்புத அமைப்பையும் எளிமையான நடையில் தொகுத்துள்ளார் நூலாசிரியர் ராஜாதிருவேங்கடம்.

அற்பத்தனமான செயல்களுக்காக ஆத்ம அமைதியை விற்றுவிட்டு, அனுதினமும் ஆண்டவனை தேடுகிறது இன்றைய உலகம். ஆம்! புறத்தூய்மையை மட்டும் பொலிவுடன் வைத்துக்கொண்டு பொக்கிஷ வாழ்க்கையைத் தொலைத்தபடி நிற்கும் மக்களை, தெளிவான பாதையில் அழைத்துச் செல்கிறது இந்த நூல்.

சித்தர்கள், ஆராய்ச்சி அடிப்படையில் அனுபவபூர்வமாக உணர்ந்த விஷயங்களையே மருத்துவக் குறிப்புகளாக கொடுத்திருப்பது, இந்த நூலுக்கே உரிய தனிச்சிறப்பு.

- ஆசிரியர்

# சத்து, சித்து, அனந்தம்...

செந்தமிழ் நாட்டில் இயற்கை அளித்த வரமாக நிற்பது கொல்லிமலை. கிழக்குத் தொடர்ச்சி மலையும் மேற்குத் தொடர்ச்சி மலையும் சேரும் இடத்தில் நல்ல உயரத்தோடும், அடர்த்தியான வனங்களோடும் திகழும் மலை. ஊட்டி, கொடைக்கானல் போல சொகுசு சுற்றுலாத்தலமாக இல்லாது, குளிர் மட்டுமே வரப்பிரசாதமாக இல்லாது, அரிய விஷயங்கள் பலதும் உள்ளடக்கியது 'கொல்லிமலை.'

இந்த மலை அறிமுகமும் விரிவாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. குகைகளைப் பற்றிய படங்களும், விவரங்களும், வழித்தடங்களும் நேர்த்தியாக எழுதப்பட்டு இருக்கின்றன. அந்தக் குகைப் படங்களைப் பார்க்கும்போதே உள்ளே போய் சிறிது நேரம் அமர்ந்து, தியானம் செய்ய தோன்றுகிறது.

தமிழ்நாட்டில் பதினெட்டு சித்தர்களில் பலர் இருந்துள்ளனர். அவர்களில் சிலரை இந்த நூல் விவரிக்கிறது.

யார் சித்தர்கள்?

சத்து, சித்து, அனந்தம் என்று தவ வழியை மேற்கொண்டு, சில தன்மைகளை இனம் பிரித்துச் சொல்லும் வல்லமையுடன் உலகத்தை அறத்தின் வழியில் காக்க வேண்டிய அனைத்தையும் அறிந்தவர்களே சித்தர்கள்.

'சத்து' என்பது, ஒழுக்கமான, நேர்மையான கடவுள் தேடலும், அதற்கான பக்தியும்கொண்ட மனிதனின் நிலை. 'சத் புருஷன்' என்று சொல்லிக்கொள்வதில்லையா... 'சத் விஷயம்' என்று உயர்ந்த ஒழுக்க விஷயங்களைச் சொல்வதில்லையா... அதை ஒட்டிய விஷயம்தான் இந்தச் சத்து.

'சித்து' என்பது ஒழுக்கமான வாழ்க்கை மட்டுமல்லாது உள்ளும் புறமும் தேடி, தான் யார் என்று தன்னைத் தெளிவாகக் கண்டுகொண்டவர். சத்திலிருந்துதான் சித்து வரும். ஒழுக்கமான வாழ்வுதான் 'தான் யார்' என்பதைத் தெரிவிக்கும். அப்படித்

தெளிந்தவர்கள் உலகத்தின் படைப்புகளைப் பற்றி, அவற்றின் குணங்களைப் பற்றி, உபயோகம் பற்றி தெரிந்திருப்பார்கள். தன்னை அறிந்தவனே எல்லாம் அறிகிறான்.

தங்களுடைய அறிவு, மக்களுக்கு உபயோகப்படும்படி மாற்றினர் சித்தர்கள். வாழ்க்கையை வாழும் முறை பற்றிய சுவாரஸ்ய தகவல்களை, வரும் சந்ததியரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று கொல்லிமலையின் பல்வேறு இடங்களில் எழுதியும் வைத்துள்ளனர். மேலும், உடலின் நோய் நீக்கும் முறை மட்டுமல்லாது, மனச்சிக்கல் போக்கும் வழி மட்டும் அல்லாது, தன்னை அறிவது எப்படி என்றும் சொல்லி இருக்கிறார்கள்.

இந்த நூல், கொல்லிமலையில் வாழ்ந்த சித்தர்கள் பற்றிய விரிவான விஷயங்களைத் திரட்டிச் சொல்கிறது; அவர்கள் செய்த அற்புதங்கள், காட்டிய மூலிகைகள், கீரை, பழ வகைகளில் மருத்துவ குணங்கள் என எளிமையாக விளக்குகிறது; பாம்புக் கடிக்கு என்ன மருந்து, தேமலுக்கு என்ன தீர்வு, சளி, சொறி சிரங்கு போக என்ன வழி என்பதை சித்தர் விளக்கிய வண்ணமாக விளக்குகிறது. இந்த நூலை படிக்கப் படிக்க, கொல்லிமலைக்கு போய்வர வேண்டும் என்கிற ஆவல் மேலெழுகிறது. மேலும், போகும்தடங்களையும் வழிமுறைகளையும் சொல்லி உதவுகிறது.

தமிழ்நாட்டு மக்கள் அதிகம் போகாத உன்னதமான ஓர் இடத்துக்குப் போகும் ஆவலை அதிகப்படுத்துகிறது. சித்தர்களின் அறிமுகம் தெரிந்து இன்னமும் புரிந்துகொள்ள வேண்டும் என்கிற ஏக்கத்தையும் உருவாக்கும் இந்த நூல், மக்களுக்கான மிக நல்ல வழிகாட்டி.

சினிமா, அரசியல், நடிகர்களை மட்டுமே தெரிந்துகொள்ளும் நாம், சித்தர்களைப் பற்றியும் தெரிந்துகொள்வோமே! உண்மையான பழந்தமிழர் பண்பட்டைப் புரிந்துகொள்வோமே!

நல்ல புத்தகங்கள் பல தரும் விகடன் பிரசுரம் வாழ்க!

என்றென்றும் அன்புடன்,

பாலகுமாரன்

புது எண்: 80/4, வாரன் சாலை,

மயிலை, சென்னை - 600 004.

# திகில் கிளப்பிய இரவு!

இயற்கை நமக்கு கொடுத்த பிரமிக்க வைக்கும் கொடைகளில் மலைகளும் அடங்கும். இவற்றுள் ஒளிந்திருக்கும் அதிசயங்களை, முழுவதுமாக எவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. 'எத்தனையோ மலைகள் இருக்க, சித்தர்களும் ஞானிகளும் எதற்காக கொல்லிமலையைத் தேடி ஓடினார்கள்?' என்ற கேள்வி, உங்களைப் போலவே எனக்குள்ளும் எழுந்தது. கொல்லிமலைக்கு ஒரு முறை போய் வந்தால், இந்தக் கேள்விக்கான விடை உங்களுக்குக் கிடைத்துவிடும்.

சித்தர்களை, 'கடவுள்' என்று சொல்வதில் எனக்கு உடன்பாடு இல்லை. மகா புருஷர்களான சித்தர்கள், உடலில் உள்ள எல்லா நோய்களையும் கண்டறிந்து அதற்கு தகுந்த சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள்; வானத்தில் உள்ள கோள்களை ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானிகள்; தட்பவெப்ப நிலையை அறிந்த வானிலை ஆராய்ச்சியாளர்கள்.

சித்தர்கள் சொல்லிக் கொடுத்த மருத்துவ முறைகளும் வாழ்க்கைத் தத்துவங்களும், கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து வருகின்றன. பரம்பரை பரம்பரையாக அதைக் கற்றுத் தேர்ந்த பெரியவர்கள், கிராமங்களில் இன்னும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் சொல்லும் பொக்கிஷ தகவல்களையும், அடுத்த தலைமுறைக்குப் பாதுகாத்து வைக்க வேண்டிய பல விஷயங்களையும் காது கொடுத்துக் கேட்கக்கூட இன்றைய இளைய தலைமுறைக்கு நேரம் இல்லை.

நான், ஜூனியர் விகடனுக்காக சேலம், நாமக்கல் ஆகிய பகுதிகளில் கடந்த பத்து ஆண்டுகாலம் நிருபராகப் பணிபுரிந்தேன். அந்தச் சமயங்களில், நாமக்கல் மாவட்டத்திலிருந்த கொல்லிமலைக்கு செல்லும் வாய்ப்பு, எனக்கு அடிக்கடிக் கிடைத்தது. கொல்லிமலையைப் பற்றியும், சித்தர்களைப் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் எனக்குள் பிறந்தது அந்த நாட்களில்தான்! சித்தர்கள் வாழ்ந்த குகைகளைத் தேடி, கொல்லிமலை காடுகளில் பயணித்தேன். ஒரு நாள், திடீரென மழை வந்து காட்டுக்குள்ளேயே மாட்டிக்கொண்டேன். இரவு நேரமானதால் ஊருக்குள் திரும்ப முடியாமல், சித்தர்கள் வாழ்ந்த குகையிலேயே இரவு பொழுதைக் கழித்தேன். அந்த நாட்களை

இப்போது நினைத்தாலும் திகிலாகத்தான் இருக்கிறது.

எழுத்துலகில் என்னை பிரவேசிக்க வைத்த அத்தனை பேருக்கும், எப்போதும் என் நன்றிகளை சொல்லிக்கொண்டே இருப்பேன்; இப்போதும் சொல்லிக்கொள்கிறேன்.

நன்றி!

- கே.ராஜாதிருவேங்கடம்

*இந்த நூல்...*

*என்னை அடையாளம் காட்டிய*

*விகடனுக்கு..*

# 1

# கொள்ளை அழகு கொல்லிமலை!

ஓங்கி வளர்ந்த மலைகள், உலகம் முழுக்க ஏராளமாக உண்டு. அந்த மலைகள் எப்படி உருவானது? மலைகளுக்குள் ஒளிந்திருக்கும் ரகசியம் என்பதெல்லாம், இதுவரை எவராலுமே முழுமையாக அறிந்துகொள்ள முடியவில்லை. மலைகளின் தோற்றம், காலம் ஆகியவற்றை சரியாக கணக்கிட்டதாக தெரியவில்லை. எப்படிக் கூட்டிக் கழித்து பார்த்தாலும், லட்சக்கணக்கான ஆண்டுகளை கடந்து இருக்கலாம்.

மனிதனின் இறைவழிபாட்டில், மலைகளுக்கு மகத்தான முக்கியத்துவம் உண்டு. ‘குன்று இருக்கும் இடந்தோறும் குமரன் இருப்பான்’ என்று சொல்வார்கள். புனிதமும் புண்ணியமும் நிறைந்தது தான், மலைகள்.

சாதாரண நிலப்பரப்பில் செய்யும் விவசாயம் அத்தனையும் மலைகளிலும் நடக்கிறது. அதையும் தாண்டி, சிறப்பான சில செடிகளும் இங்கே வளரும் தன்மையை தன்னகத்தே அடக்கிக்கொண்டு இருக்கின்றன. நீர், நிலம், காற்று, வானம், நெருப்பு என்ற பஞ்சபூதங்களை உள்ளடக்கியதுதான் மனித வாழ்க்கை. அந்தப் பஞ்சபூதங்களில் நிலத்தை தனக்குள்ளும், வானத்தை அருகிலும் கொண்டுள்ளன மலைகள். பஞ்சபூதங்களில் நிலம், நீர், வானம் என்ற மூன்றுக்கும் தொடர்புடையதாக இருக்கும் மலைகளுக்குள் மகத்தான சக்திகள் அடங்கியிருப்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.



கொல்லிமலை அடிவாரம்

மலைகள் என்றால், அமைதி இருக்கும்; சந்தோஷம் இருக்கும்; எளிமை இருக்கும்; இனிமை இருக்கும்; மாசு இல்லாத காற்று இருக்கும்; இயற்கையோடு இயைந்த உணவு இருக்கும்; நோய்கள் இருக்காது; நகரத்தின் நாசவேலைகள் கடுகளவும் இருக்காது. இதனால்தான் இறைவனுக்கும் மலைகளுக்கும் அத்தனை நெருக்கமான தொடர்போ என்னவோ?!

மலைகளில் இருக்கும் இறைவனும் எப்போதும் ஸ்பெஷல்தான். திருமலையில் உள்ள வெங்கடாசலபதியும் சரி.. பழனிமலையில் உள்ள முருகனும் சரி.. சபரிமலையில் உள்ள ஐயப்பனும் சரி.. கயிலாயத்தில் உள்ள ஈஸ்வரனும் சரி.. இப்படி மலை மீது உள்ள இறைவனுக்கெல்லாம் மகத்தான சக்தி இருப்பதாகவே மக்கள் இன்றளவும் நம்பிக்கையோடு மலை ஏறிக்கொண்டு இருக்கிறார்கள்.

மலைகளை பற்றிய ஏராளமான தகவல்களை, இலக்கியங்களும் புராணங்களும் அள்ளிக் கொட்டுகின்றன. ‘ருஸ்யமுகபர்வதம்’ என்கிற மலைக்கு வாலி வந்தால், அவன் கல்லாக மாறிவிடுவான் என்பது மதங்க மகரிஷியின் சாபம். ஒரு கட்டத்தில் வாலிக்குப் பயந்து வாழ்ந்த சுக்ரீவன், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் வாலியால் நுழையவே முடியாத இந்த மலையில் ஒளிந்து வாழ்ந்தாராம்.



கொல்லிமலை நுழைவாயில்

வனவாசம் ஏறத்தாழ முடிகின்ற தறுவாயில் இருந்த ராம - லட்சுமணர்கள், அனுமனையும் சுக்ரீவனையும் இங்குதான் சந்தித்தார்கள் என்கிறது ராமாயணம். அதே ராமாயணத்தில் மலையைப் பற்றி இன்னொரு தகவலும் உண்டு. இலங்கை மன்னன் ராவணனுடனான போரில் லட்சுமணனுக்கு காயம் ஏற்பட்டது. லட்சுமணனின் காயத்தை குணமாக்க, 'ஔஷதகிரி' என்னும் மலையைக் கொண்டுவருமாறு அனுமனுக்கு உத்தரவிடப்பட்டது. ராமர் சொல்லி அனுமன் சும்மா இருப்பாரா? ஔஷதகிரி மலையை அனுமன் எடுத்துக்கொண்டு வரும்போது, மலையின் சில பகுதிகள் பூமியில் கீழே விழுந்தன. இவைதான் இன்று தனித்தனி மலைகளாக இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அந்த மலையில் இருந்த சஞ்சீவி எனும் மூலிகைதான், எத்தகைய கொடிய நோயையும் குணப்படுத்தும் ஆற்றல் கொண்டதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

உமாதேவியுடன் ஈசன் உறைவது, கயிலைமலை. 'ஒவ்வோர் இந்துவும், தங்கள் வாழ்நாளில் அவசியம் தரிசிக்க வேண்டிய புனிதமான மலை, கயிலைமலை' என்கின்றனர் முன்னோர்கள். இப்படி, மலைகளின் சிறப்பு குறித்த கதைகள் ஏராளம் உண்டு. 'மலைகளுக்குள் இவ்வளவு சிறப்பா?!' என மலைக்கவைக்கும் மலைகளில் ஒன்றாக இன்றும் திகழ்ந்துகொண்டு இருக்கும் கொல்லிமலையைப் பற்றித்தான் நாம் பார்க்கப் போகிறோம்.

பயணத்தைத் தொடங்கலாமா?

கிழக்கு தொடர்ச்சி மலையும், மேற்கு தொடர்ச்சி மலையும் நெருங்கிவந்து தொட்டுத் தழுவி முத்தமிடும் இடம், இதுதான். மனித உருவம் ஒன்று, காலை நீட்டிப் படுத்திருப்பதைப்போல இருக்கிறது இந்த மலையின் அமைப்பு. வளைந்து நெளிந்து செல்லும் மலைப்பாதையில், 72 கொண்டை ஊசி வளைவுகளை கடக்க வேண்டும். 280 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை கொண்ட இந்த மலை, கடல் மட்டத்திலிருந்து சுமார் 1,300 மீட்டர் உயரத்தில் முழுவதும் மூலிகைகளால் நிரம்பி இருக்கிறது.

முகத்தில் ஜில்லென்றும் அறையும் பனிக் கலந்த சுத்தமான குளிர் காற்று; கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் பச்சைப் போர்வையை போத்திக்கொண்டு, பார்ப்பவருக்குள் பரவசத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருக்கிறது 'கொல்லிமலை.' இந்த மலை சதுரமாக காணப்படுவதால், இதை 'சதுரகிரி' என்றும் அழைக்கிறார்கள். அழியாமல் இருக்கும் சொற்ப இடங்களில், பூமத்திய ரேகை காடுகளான கொல்லிமலையும் ஒன்று.

மணிமேகலை, சிலப்பதிகாரம், புறநானூறு போன்ற தமிழ் காப்பியங்களில் கொல்லிமலையைப் பற்றியக் குறிப்புகள் நிறையவே இருக்கின்றன. கொல்லிமலையில் பூத்துக்குலுங்கும் 165 வகையான பூக்களைப் பற்றி, குறிஞ்சித்திணையில் கபிலர் வியந்து பாடி இருக்கிறார். 10-ம் நூற்றாண்டில், கொல்லிமலையில் இருந்துதான் கற்களை யானை மீது ஏற்றி தஞ்சாவூருக்கு கொண்டுபோய், பெரியகோயிலை கட்டியிருக்கிறார், ராஜராஜ சோழன். இப்படி, கொல்லிமலைக்கு பல வரலாற்று சிறப்புகள் உண்டு.

ராமாயணத்தில் சுக்ரீவன் ஆண்டதாக சொல்லப்படும் 'மதுவனம்' என்ற மலைப்பிரதேசம், இந்தக் கொல்லிமலையாக இருக்கக்கூடும் என்றும் சிலர் குறிப்பிட்டுள்ளனர்.

கொல்லிமலை மீது, தேவானூர் நாடு, திருப்புலி நாடு, சேலூர் நாடு, ஆலந்தூர் நாடு, தின்னனூர் நாடு, குண்டுணி நாடு, வாழவந்தி நாடு, இடப்புலி நாடு, அரியூர் நாடு, பைல் நாடு, வளப்பூர் நாடு, சித்தூர் நாடு, குண்டூர் நாடு, பிறகரை நாடு எனும் பதினான்கு பெரிய கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களைச் சார்ந்து 275 குக்கிராமங்கள் இருக்கின்றன. இத்தனை ஊர்களையும் தனக்குள்ளே அடக்கி இருக்கிறது என்பதை நினைத்துப் பார்க்கவே பிரமிப்பாக இருக்கிறது.

அரியூர், புலியஞ்சோலை, வாழவந்தி நாடு போன்ற இடங்களை அரசே ரிசர்வ் ஃபாரஸ்டாக அறிவித்திருக்கிறது. இங்கெல்லாம் யானை, புலிகளின் நடமாட்டம் அதிகமாகவே இருக்குமாம். கருப்புக்கரடி, முயல், காட்டு நாய்கள், காட்டு எருமைகள் போன்றவற்றை சர்வ சாதாரணமாக பார்க்கலாம்.

கொல்லிமலை பகுதிகளில், அன்னாசி, கொய்யா, மலை வாழை, பலா போன்ற பழ வகைகளும், காபி, மிளகு போன்ற பணப்பயிர்களும் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. கொல்லிமலைத் தேன் சுவை மிகுந்தது. இங்கு உள்ள வீடு தோறும் பலா மரம் தவறாமல் இருக்கிறது. கொல்லிமலை பலா பழத்தைப் பற்றி, சங்க இலக்கிய பாடல்களிலேயே பாடப்பட்டுள்ளன. இங்கு விளைவிக்கப்படும் பழங்களையும் காய்கறிகளையும், மலையிலிருந்து கீழே உள்ள ஊர்களுக்கு கொண்டுவந்துதான் விற்பனை செய்துவிட்டுப் போகிறார்கள், அந்த மலைவாசிகள்.

கொல்லிமலையை சுற்றி உள்ள கிராமங்களை சேர்ந்த மக்கள், இன்றும் ஒரு பழக்கத்தை தெய்வ நம்பிக்கையாக நினைத்து கடைப்பிடித்து வருகிறார்கள். இறைவனும் சித்தர்களும் நிறைந்த மலை கொல்லிமலை என்பதால், மக்கள் படுக்கும்போது கொல்லிமலை இருக்கும் திசையில் கால் நீட்டிப் படுப்பது கிடையாது. அந்த மலை இருக்கும் திசையில் காலை நீட்டினால், இறைவன் மீது கால் படும் என்ற நம்பிக்கையை அவர்கள் மனதுக்குள் பதித்து வைத்திருக்கிறார்கள்.

அற்புதங்களும் அதிசயங்களும் நிறைந்தது கொல்லிமலை! இங்கு நாம் விசாரித்த தகவல்கள் ஒவ்வொன்றும், ஆச்சர்யமானவை; அதிர்ச்சியானவை. இருப்பினும், ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டியவை.

# 2

# வல்வில் ஓரி..

'வருவா ரெவர்க்கு நிழலளிக்கும்;

மகிழ்ந்து குளிக்க நீரளிக்கும்;

முருகார் கனியாய் உவந்தளிக்கும்;

முடிக்க நறுமா மலரளிக்கும்;

மருவார் சாந்த நனியளிக்கும்;

மணியு முத்தும் பலவளிக்கும்;

தருவார் போலப் புலவோர்பால்

தமிழுங் கொள்ளுங் கொல்லிமலை.'

- சங்க காலத்தில் பாடப் பெற்ற பாடல் இது.

'வருபர்கள் எல்லோருக்கும் நிழல் கொடுக்கும். மகிழ்ச்சியோடு அவர்களை குளிர்வித்து நீர் கொடுக்கும். சுவையான கனிகளை பசியாற கொடுக்கும். பெண்கள் சூடிக்கொள்ள நறுமணம் மிக்க பூக்கள் கொடுக்கும். தன்னை புகழ்ந்து பாடுபவர்களுக்கு செல்வங்களையும் முத்துகளையும் அள்ளித்தரும் அரசனைப்போல, தன்னை நாடிவரும் எல்லோருக்கும் எல்லா செல்வங்களையும் அள்ளிக் கொடுத்து ஆதரிக்கவல்லது கொல்லிமலை' என்பதுதான் மேலே குறிப்பிட்டிருக்கும் பாடலின் பொருள். கொல்லிமலையை ஆண்ட மன்னன்கூட இந்தப் பாடலுக்கு பொருத்தமானவன்தான். கேட்டவர்களுக்கு அள்ளிக்கொடுத்தவன் கொல்லி வேந்தன்.



வல்வில் ஓரி

கி.பி.200-ம் ஆண்டு கடையேழு வள்ளல்களில் ஒருவரான வல்வில் ஓரிதான் கொல்லிமலையை ஆண்ட வேந்தன். ஆட்சித் திறனில் சிறந்து விளங்கும் மன்னர்களால், அவர்கள் ஆளும் நாட்டுக்குப் பெருமை. செழித்து விளங்கும் நாட்டினாலும், நாட்டு மக்களாலும் அந்த மன்னனுக்கு பெருமை. அத்தகைய பெருமை மிக்க ஓரி, வில்வித்தையில் ஈடு இணை இல்லாதவன் என்பதை புறநானூற்றுப் பாடல் அழகாக விளக்குகிறது.

‘வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி

பேழ்வாய் உழுவையைப் பெரும்பிரிது உறி

இப் புழற்றலைப் புகர்க்கலை உருட்டி,

உரற்றலைக் கேழற் பன்றி வீழ அயலது

ஆழற் புற்றத்து உடும்பிற் செற்றும்

வல்வில் வேட்டம் வலம்படுத்து இருந்தோன்’

- ஓரியின் வீரத்துக்கு இந்தப் பாடலே அடையாளம்.

ஓரி, தனது வில்லை நாணில் பூட்டி விலங்குகளை குறிவைத்து அம்பு விட்டால், அந்த அம்பு முதலில் ஒரு புலியை துளைத்து, அடுத்து ஒரு மானை துளைத்து, பிறகு ஒரு பன்றியை துளைத்து, இறுதியில் ஒரு முயலை துளைத்துதான் நிற்குமாம். அந்த அளவுக்கு வேகமும், வீரமும், விவேகமும் ஒன்று சேர்ந்தவன் ஓரி என்பது அந்தப் பாடலின் அர்த்தம்.

குதிரையேற்றத்திலும் ஓரியை மிஞ்ச ஆள் கிடையாதாம். குதிரை மீது ஏறினால் மின்னல் வேகத்தில் சீறிப்பாய்வானாம். குதிரையை விரட்டிக்கொண்டே வில்வித்தை செய்வானாம். கொல்லிமலையை, ஓரி போரிட்டு வென்றதாக வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன.

கொல்லிமலையை எத்தனையோ மன்னர்கள் ஆட்சி செய்திருந்தாலும், குறுநில மன்னனான வல்வில் ஓரியின் வளமான காலத்தையே சிறப்பாக சொல்லப்படுகிறது. எளியவர்களுக்கு உதவும் குணமும், பெரியவர்களை மதிக்கும் இயல்பும், ஈகை தன்மையும் நிறைந்த ஒருவனாக ஓரி விளங்கியதால்தான் அவனுக்கு இலக்கியங்கள் அத்தகைய சிறப்பு செய்கிறது.

கொல்லிமலை வேந்தனான ஓரியின் ஆளுகையில் சுமார் 18 நாடுகள் உட்பட்டிருந்தன. இவற்றுள் தற்போதைய ராசிபுரம், சேந்தமங்கலம் முதலான பகுதிகளும் அடக்கம். இவனது ஆட்சியின்போதுதான், கொல்லிமலை செழித்தது; வளம் கொழித்தது. முக்கனிகளான மா, பலா, வாழை மற்றும் நெல், ஏலம் முதலானவை பஞ்சமில்லாமல் விளைந்தன. எந்தக் குறையும் இல்லாமல் குடிமக்கள் வாழ்ந்தனர்.

குதிரை பயணம் ஓரிக்கு மிகவும் பிடித்தது. படை பலம் எதுவும் இல்லாமல் தனியாக குதிரை ஏறி அடிக்கடி வேட்டைக்குப் போவது ஓரியின் பொழுதுபோக்கு. குதிரைகள் பேசும் பாஷை ஓரிக்கு அத்துபடியாம். தன் பெயரைக் கொண்ட குதிரை ஒன்றை ஆசை ஆசையாக வளர்த்து வந்தான் ஓரி. நீண்ட தூரப் பயணம் மற்றும் யுத்தம் முதலானவற்றுக்கு ஓரியின் மேல் சவாரி செய்வான் வல்வில் ஓரி. இதனால் இவனுக்கு ‘ஓரிக் குதிரை வல்வில் ஓரி’ எனும் பெயரும் வழங்கப்பட்டதாம்! மன்னனுக்கு தரும் அத்தனை மரியாதையையும் கொல்லிமலை தேசத்து மக்கள் அந்தக் குதிரைக்கும் கொடுத்து வந்தார்கள்.

ஓரி, ஒரு நாள் வேட்டைக்குப் போகும்போது பல இடங்களில் தேடியும்

எந்த விலங்கும் கண்ணுக்குத் தெரியவில்லையாம். நீண்ட நேர தேடலில் களைத்துப்போன ஓரி, ஓர் இடத்தில் ஓய்வெடுக்கலாம் என உட்கார்ந்தாராம். அப்போது வெள்ளைப் பன்றி ஒன்று அந்த வழியாக துள்ளிக் குதித்து ஓடியதாம். இதைக் கண்ட ஓரி, தனது வில்லை வளைத்து பன்றி மீது பாய்ச்சினாராம். அம்பு பாய்ந்த பன்றி, ரத்தம் சொட்டச் சொட்ட ஒரு புதருக்குள் ஓடி மறைந்ததாம். ஓரியும் பன்றி மறைந்த இடத்திலிருந்த புதரை விலக்கி பார்த்தபோது, அங்கே சுயம்பு லிங்கத்தின் தலையில் ரத்தம் வழிந்துகொண்டு இருந்ததாம்.

‘சிவனே! என்னை மன்னித்துவிடு..’ என்று அந்த இடத்தில் விழுந்து வணங்கினானாம் ஓரி. சிவபெருமானும் தனது சுயரூபத்தில் ஓரிக்கு காட்சியளித்து ஆசி வழங்கிவிட்டு மறைந்தாராம். உடனடியாக அந்த இடத்தில் ஒரு கோயிலை கட்டினான் ஓரி. புராண காலத்தில் ‘ராஜபுரம்’ என்று அழைக்கப்பட்ட இன்றைய ராசிபுரத்தில் உள்ள கயிலாசநாதர் கோயில்தான் ஓரி எழுப்பிய அந்தக் கோயில்.

பிராகாரத்தில் உள்ள வன்னி மரத்தடியில், கையில் வில்லுடன் நிற்கும் ஓரியின் சிலை இருக்கிறது. கஷ்டம் என்று நாடி வருபவர்கள் வன்னிமரத்தடியில் உள்ள ஓரியை வணங்கிவிட்டு சிவபெருமானை தரிசனம் செய்தால், மலைபோல வந்த துன்பங்கள் யாவும் பனிபோல விலகிடும் என்று சொல்வார்கள். இந்தக் கோயிலில் ஒரு சுரங்கப்பாதை இருக்கிறது. அந்தப் பாதை கொல்லிமலைக்கு செல்வதாகவும், கோயிலை கட்டிய பிறகு ஓரி வழக்கமாக வந்து செல்வதற்காக இந்தப் பாதையை உருவாக்கியதாகவும் சொல்கிறார்கள்.

ஓரியின் மனைவி பெயர் வேண்மாள். இவர்களது மகள் பாவை. ஓரி இறந்த பிறகு மனைவி, மகள் இருவருமே உடன்கட்டை ஏறினார்களாம். ஓரியின் மகளான பாவையைத்தான், ‘கொங்கலாயி அம்மன்’ என்ற பெயரில் கொல்லிமலைவாழ் மக்கள் தங்களது குலதெய்வமாக வழிபட்டு வருகிறார்கள்.

‘அடுப்போர் ஆனாஅதன் ஓரி

மாரி வண்கொடை காணிய நன்றும்

சென்றது மன் எம்கண்ணுளங் கடும்பே’

- ஓரியை புகழ்ந்து பாடி புலவர்கள் பரிசு பெற்றதற்கு இந்தப் புறநானூற்று பாடலே சான்றாக அமைந்திருக்கிறது. வன்பரணர்,

கழைதின் யானையார் ஆகிய புலவர்கள் ஓரியைப் பாடி பரிசில் பெற்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். இவரை தவிர, கபிலர், பெருஞ்சித்திரனார், இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார், கல்லாடனார், பரணர் ஆகியோரும் ஓரியின் புகழைப் பாடி இருக்கிறார்கள்.


காட்டு வழி பயணம் என்பது, ஓரிக்கு மிகவும் பிடித்தமான விஷயம். அப்படி பயணிக்கும்போது வழியில் தென்படும் எளியவர்களுக்கு பொன்னையும் பொருளையும் வாரி வழங்குவான். கூத்துக்கட்டும் கலைஞர்கள் என்றால், ஓரிக்கு அவ்வளவு பிரியம். தனது ஆளுகைக்கு உட்பட்ட நாடுகளில் எங்கே கூத்து நடந்தாலும் ஓரி கிளம்பிவிடுவான். அந்த அளவுக்கு கூத்து மீது அளவு கடந்த ஆசை வைத்திருந்தான். கூத்தாடும் கலைஞர்களுக்கு தேவையான இருப்பிடம், பொருள் என அனைத்தையும் வாரி வழங்கினான்.

'ஓரி' என்ற சொல்லுக்கு, 'ஒப்புமை அற்றவன்' எனும் பொருள் உண்டு. வள்ளல் தன்மை, வீரம் ஆகியவற்றில் ஒப்பற்று விளங்கியதால் இவனுக்கு இந்தப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். ஓரியின் இயற்பெயர் 'ஆதன்.' அதனால் 'ஆதனோரி' என்றும் இவனை சொல்வதுண்டு.இத்தகைய சிறப்பு மிக்க வல்வில் ஓரி, நயவஞ்சகமாகக் கொல்லப் பட்டதுதான் பெரும் சோகம்!

வளம் நிறைந்த கொல்லிமலையை வல்வில் ஓரி ஆண்டு வந்ததால், அவனையும் அவனது தேசத்தையும் பல அரசர்கள் பொறாமையோடு பார்த்தார்கள். எப்படியாவது கொல்லிமலையை தங்கள் வசமாக்கிக்கொள்ள வேண்டும் என்ற வெறி, ஒவ்வோர் அரசனுக்குள்ளும் தகதகத்துக்கொண்டே இருந்தது. அதற்கான தருணத்தை எதிர்பார்த்து, கண்கொத்திப் பாம்பாக காத்துக்கொண்டு இருந்தார்கள்.

கடையெழு வள்ளல்களில் ஒருவனான காரி, முல்லைக் கொடிகளின் வாசம் வீசும் நாடான மலையமா நாட்டை ஆண்டு வந்தான். இதன் தலைநகரம் கோவலூர். வீரத்திலும் கொடையிலும் சிறந்தவன் காரி. காரியைப் பற்றி பாடி பரிசில் பெற்ற புலவர்கள் ஏராளம். காரியின் நாட்டு மீது வட நாட்டு அரசர்கள் சிலர் பெரும் படைகளுடன் வந்து போர் தொடுத்தனர். காரியின் ஆளுகைக்கு உட்பட்ட 'முள்ளூர்' என்ற ஊரை கைப்பற்றுவதுதான் அவர்களின் முதல் நோக்கம். ஆனால் அதற்கு கொஞ்சமும் அஞ்சாமல், தன் படை பலத்தோடு முள்ளூரை நோக்கிப் போனான் காரி. தன்னுடன் போரிட வந்த வடநாட்டு அரசர்களுடன்

ஆக்ரோஷமாகப் போரிட்டான். காரியின் தாக்குதலை வடநாட்டு அரசர்கள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவனது வீரத்தையும் ஆற்றலையும் பார்த்து நிலைகுலைந்து போனார்கள். தலை தப்பினால் போதும் என புறமுதுகு காட்டி ஓட ஆரம்பித்தார்கள். 'என்னை எதிர்க்க வேண்டும் என யாராவது மனதில் நினைத்தால்கூட அவர்களை விரட்டி அடிப்பேன்' என்று சொல்லியபடியே தன் தலைநகரத்துக்கு திரும்பினான் காரி.



நெடிந்துயர்ந்த கொல்லிமலை..

தற்போது தர்மபுரியாக இருக்கும் ஊருக்கு அப்போது 'தகடூர்' என்று பெயர். தகடூரை ஆண்ட மன்னன் அதியமான். தமிழை வாழவைக்க வேண்டும் என்பதற்காக ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்தாரே.. அதே அதியமான்தான்..! காரி மன்னன், தன்னை விரோதித்துக் கொண்டதால் அவன்மீது தீராத கோபத்தில் இருந்தான் அதியமான். காரியை வெல்ல வேண்டும் என்பதற்கு நேரம் பார்த்திருந்தான். ஒரு நாள், கோவலூர் மீது படையெடுத்து புறப்பட்டான் அதியமான்.

அதியமானுக்கும் காரிக்கும் கோவலூரில் மிகப்பெரிய போர் உண்டானது. இரு தரப்பிலும் கடுமையான சேதம் உண்டானது. இறுதியில் காரியை புறமுதுகு காட்டி ஓடவைத்து கோவலூரை சொந்தமாக்கிக் கொண்டான் அதியமான். அடிபட்டவன் சும்மா இருப்பானா?

பலம் பொருந்திய சேர மன்னன் பெருஞ்சேரல் இரும்பொறையை சந்தித்து உதவி கேட்டான். சேர மன்னனுக்கோ கொல்லிமலை மீது நீண்ட நாளாக ஓர் ஆசை இருந்துகொண்டே இருந்தது. அதற்கு காரியை பயன்படுத்திக்கொள்ள சேரனின் மனது கணக்கு போட்டது. காரிக்கு

ஆறுதல் வார்த்தைகளை சொல்லி, அவனை அரண்மனையில் தங்கவைத்தான். ‘களங்காதே.. உனக்கு ஏற்பட்ட களங்கத்தை நான் போக்குகிறேன். உனது தேசத்தை நாம் போரிட்டு மீட்போம். அதற்கு முன்பு அவனது நண்பன் ஓரியை போரிட்டு வெல்ல வேண்டும். கொல்லிமலையை நம்முடைய நாடாக்கி கொள்ள வேண்டும்’ என்று சொன்னான். அதற்கு காரியும் சம்மதம் சொன்னான். திட்டம் தயாரானது.

சேரனும் காரியும் சேர்ந்து ஓரி மீது படை எடுத்து சென்றனர். இந்த விஷயம் ஓரிக்கும் தெரிய வர, தனது நண்பன் அதியமானின் உதவியை நாடினான் ஓரி. அதியமானும், தனது நண்பனுக்காக சோழர் மற்றும் பாண்டிய நாட்டுப் படைகளை திரட்டிக்கொண்டு கொல்லிமலைக்குச் சென்றான். அங்கே கடுமையான போர் நடந்தது. யாரும் எதிர்பாராத நேரத்தில் எதிரியின் அம்பு ஒன்று ஓரியை பதம் பார்த்தது. நெஞ்சில் பாய்ந்த அம்பை, சிரித்தபடியே பிடுங்கி எரிந்துவிட்டு உயிரை விட்டான் ஓரி.

ஓரி இறந்துபோனதும், தனது படைகளை திரும்பப் பெற்றுக் கொண்டு தகடூருக்கு பறந்தான் அதியமான். ஆனாலும் காரியின் கோபம் தீரவில்லை. சேரனோடு தகடூருக்கும் படை எடுத்து சென்றான். அங்கே நடந்த போரில் அதியமானை கொன்று தகடூரையும் தன் வசமாக்கிகொண்டான் காரி.

பச்சை பசுமையாக இருந்த கொல்லிமலை ரத்தக்காடாக மாறியது. ஓரியின் மரணச் செய்தி அந்த நாட்டு மக்களிடம் தீராத சோகத்தை உண்டாக்கியது. வல்வில் ஓரி கொல்லப்பட்ட இடத்தில்தான் அவன் குதிரை மேல் கம்பீரமாக அமர்ந்திருப்பது போன்ற முழு உருவச்சிலையை, 1975-ம் ஆண்டு தமிழக அரசால் நிறுவப்பட்டது. கொல்லிமலைக்குள் நுழைந்ததுமே இந்தக் கம்பீரமான சிலைதான் நம்மை வரவேற்கும். இதை கொல்லிமலை மக்கள் சிலையாக பார்ப்பதில்லை. காவல் தெய்வமாகத்தான் பார்க்கிறார்கள். வல்வில் ஓரியின் வில்வித்தையை நினைவுகூரும் வகையில், கொல்லிமலையில் உள்ள பள்ளிக்குழந்தைகளுக்கான வில்வித்தை போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன.

# 3

# அறப்பளீஸ்வரர் கோயில்

கொல்லிமலை மக்களின் காவல் தெய்வம், அறப்பளீஸ்வரர். பரந்து விரிந்திருக்கும் கொல்லிமலையின் இதயப் பகுதி என்று, அறப்பளீஸ்வரர் கோயில் இருக்கும் பகுதியைச் சொல்லலாம். வளப்பூர் நாடு என்ற இடத்தில்தான் அறப்பளீஸ்வரர் கோயில் அமைந்திருக்கிறது. இந்த இடத்தைதான் ‘சதுரகிரி மலை’ என்று சொல்கிறார்கள்.

கோயில் உள்ளே நுழைந்ததும் கொடிமரம், பலிபீடம், நந்தி. பிராகார வலத்தின்போது, சூரியன், சந்திரன், ஸ்ரீ காலபைரவர், வள்ளி-தெய்வானை சமேத ஸ்ரீஆறுமுகர், ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ காசிவிஸ்வநாதர்--விசாலாட்சி, லட்சுமி தேவி, சரஸ்வதி தேவி, ஸ்ரீ சண்டிகேஸ்வரர் முதலானவர்களுக்கு சந்நிதிகள் உள்ளன. உற்சவ வாகனங்களையும் காணலாம். ஸ்தல விருட்சம் வில்வம்! கருவறை கோஷ்டத்தில் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், மகாவிஷ்ணு, பிரம்மா, ஸ்ரீவிஷ்ணுதுர்கை ஆகிய தெய்வங்களை தரிசிக்கலாம். சைவ நால்வர், நவக்கிரகங்கள் சந்நிதியும் உண்டு.

முன்மண்டபம், மகா மண்டபம், அர்த்த மண்டபத்துடன் அமைந்திருக்கிறது ஸ்வாமி சந்நிதி. லிங்கத் திருமேனியராக அருள்கிறார் ஸ்ரீஅறப்பளீஸ்வரர். அறம் பள்ளிகொண்ட இடம் என்பதால், சிவனாருக்கு ‘அறப்பளீஸ்வரர்’ எனும் திருநாமம். அம்பாள்- ‘தாயம்மை’ எனப்படும் அறம் வளர்த்த நாயகி!

தற்போது ஆலயம் அமைந்திருக்கும் இடம், முற்காலத்தில் விளைநிலமாக இருந்ததாம். ஒரு நாள், விவசாயி ஒருவர் இந்த நிலத்தை உழுதபோது, பூமியில் ஏதோ இடறியதாம். தொடர்ந்து அந்த இடத்திலிருந்து ரத்தம் பீறிடுவது கண்டு அதிர்ச்சியடைந்த விவசாயி, விஷயத்தை ஊர் மக்களிடம் தெரிவித்தார். அனைவரும் சேர்ந்து இந்த இடத்தைத் தோண்டியபோது, அழகிய லிங்கம் கிடைத்ததாம். அந்த லிங்கத்தை பிரதிஷ்டை செய்து வழிபடத் துவங்கினர். கலப்பை மோதியதால் ஏற்பட்ட தழும்பை, ஸ்வாமியின் லிங்கபாணத்தில்

இன்றும் காணலாம்! கோயிலுக்கு அருகே, பஞ்சநதி தீர்த்தம் என்ற ஓர் இடம் இருக்கிறது. அங்கிருக்கும் தண்ணீரில் ஏராளமான மீன்கள் துள்ளி விளையாடிக்கொண்டு இருக்கிறது. ஆனால், எவருமே மீனைப் பிடிப்பதில்லை.

காரணம் கேட்டால் வருகிறது ஒரு வரலாறு.. ஒரு காலத்தில் இங்கே கோயிலுக்கு வந்த பக்தர்களில் ஒருவர், இந்தத் தீர்த்தத்தில் உள்ள மீன்களைப் பிடித்து அறுத்து சமைக்க ஆரம்பித்தார். குழம்பில் மீன் கொதித்துக்கொண்டு இருந்த அந்த மீன்கள், திடீரென பாத்திரத்திலிருந்து துள்ளிக் குதித்து வெளியே வந்து தண்ணீருக்குள்ளேயே ஓடிவிட்டது. தன் தவறை உணர்ந்த ஈஸ்வரனின் பக்தன், அறப்பளீஸ்வரரிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு போய்விட்டான். இதனால், அந்த ஈஸ்வரனை, ‘இறந்த மீன்களுக்கே உயிர் கொடுத்த ஈஸ்வரன்’ என்று சொல்வார்கள். அறப்பளீஸ்வரர் கோயிலுக்கு ‘மீன் கோயில்’ என்ற பெயரும் உண்டு.

பக்தர்கள், இங்குள்ள மீன்கள் ஒவ்வொன்றையுமே சிவ பெருமானின் இன்னோர் உருவமாகத்தான் பார்க்கிறார்கள். அதனால்தான் கோயிலுக்குப் போவதற்கு முன்பே மீன்களுக்கு பொறி, சோறு போன்ற உணவுகளை போட்டுவிட்டுப் போகிறார்கள். மழையே இல்லாத காலத்தில்கூட இங்கே தண்ணீர் வற்றாமல் இருக்கும்.

தஞ்சையை ஆண்ட ராஜராஜ சோழனின் பெரிய பாட்டி மாதேவி என்பவர், இந்தக் கோயிலின் சிறப்பை அறிந்து இங்கே வந்து அறப்பளீஸ்வரரை தரிசனம் செய்துவிட்டு, ஏராளமான நகைகளை சுவாமிக்கு அணிவித்துச் சென்றதாக கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.



அறப்பளீஸ்வரர் கோயில்

காலையில் இருந்து இரவு எட்டு மணி வரை இந்தக் கோயில் திறந்து இருக்கிறது. எந்த நேரத்தில் போனாலும் அறப்பளீஸ்வரரை தரிசனம் செய்யலாம்.

அறப்பளீஸ்வரர் கோயிலே கதி என வாழ்ந்து வந்த மாணிக்கம் என்பவரின் கதையை, இங்கு சொல்லியே ஆக வேண்டும்.

அறப்பளீஸ்வரர் கோயிலின் அர்ச்சகருக்குச் சொந்தமான மாடுகளை, வனப்பகுதிக்கு ஓட்டிச்சென்று மேய்த்து வந்தவர்தான் இந்த மாணிக்கம். காலையில், மாடுகளை மேய்த்துக்கொண்டு ஆகாய கங்கை என்ற அருவிப் பக்கம் போவார். அருவியின் ஓரத்தில் எங்காவது படுத்துக்கொள்வார். பசிக்கு, மாடுகளின் கோமியத்தைக் குடிப்பார். மாட்டுச் சாணத்தை தனது தலையில் பூசிக்கொள்வார். வாயில் வந்ததை பேசுவார்; பாடுவார். யாருக்கும் எந்தத் தொல்லையும் கொடுக்கமாட்டார். யார் எந்தக் கேள்வி கேட்டாலும் பதில் சொல்லமாட்டார். இவரும் யாரிடமும் கேள்வி கேட்கமாட்டார். பொழுது சாய்ந்ததும் மாடுகளை அர்ச்சகர் வீட்டில் கொண்டுபோய் கட்டிவிட்டு, அவர் கொடுக்கும் சாப்பாட்டை சாப்பிட்டுவிட்டு கோயில் வாசலில் படுத்து உறங்கி விடுவார். இவருக்கு சித்தர்கள் அருளாசி செய்திருப்பதாக அந்தக் கிராமத்து மக்கள் நம்பினார்கள்.

சேலத்தை சேர்ந்த ஒருவர், துணி வியாபாரம் செய்துவந்தார். அதில் அவருக்கு நஷ்டம் உண்டானது. ‘இனி வாழ்ந்துதான் ஆக வேண்டுமா?’ என்ற முடிவுக்கு வந்தவர், தற்கொலை செய்து கொள்ளும் நோக்கத்தோடு சேலத்திலிருந்து கொல்லிமலைக்கு வந்தார். இங்கு வந்தவர், நேராக ஆகாய கங்கை நீர்வீழ்ச்சிக்குப் போனார். ‘அந்த அருவியில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளலாம்!’ என்ற மனநிலையில், அருவியை நோக்கி நடக்க ஆரம்பித்தார். அந்த வழியில் வழக்கம்போல படுத்து பாட்டுப் பாடிக்கொண்டு இருந்தார், மாணிக்கம். யாரிடமும் பேசாத மாணிக்கம், தன்னை கடந்துபோன அந்த வியாபாரியை பேர் சொல்லி அழைத்தார். ‘இவருக்கு எப்படி நம்முடைய பெயர் தெரியும்?!’ என்ற அதிர்ச்சியோடு திரும்பிப் பார்த்தார் அந்த வியாபாரி.

"என்னப்பா... கூப்பிட கூப்பிட வேகமா போய்க்கிட்டிருக்கே? செத்துடாலம்னு முடிவு பண்ணிட்ட போல.." என்று மாணிக்கம் கேட்கவும், அதிர்ச்சியின் உச்சத்துக்கே போனார் அந்த வியாபாரி. ‘என்னோட மனசுக்குள் இருப்பது எப்படி இந்த மாடு மேய்க்கிறவனுக்குத் தெரியும்?!’ என்று அதிர்ச்சியோடு அவரை நெருங்கினார். "நான் நினைச்சது உங்களுக்கு எப்படி தெரியும்?" என்று கேட்டார். "அது கிடக்கட்டும்.. எனக்கு ரொம்ப பசியா இருக்கு. ஏதாவது சாப்பிட வாங்கித்தா" என்று கேட்டார். வியாபாரியும் கடைக்குப் போய் சாப்பாடு வாங்கிக் கொடுத்தார். அதை சாப்பிட்டு முடித்த மாணிக்கம், "என் பசி தீர்ந்துடுச்சி. உன் பசியை நான் தீர்க்குறேன் வா.." என்று அவரது கைகளைப் பற்றி இழுத்துக்கொண்டு போனார்.

மாணிக்கம் வழக்கமாக தங்கும் கோயில் வாசலில் அந்த வியாபாரியை உட்காரவைத்துவிட்டு, ஒரு பொட்டலத்தை கொண்டுவந்து கொடுத்து சாப்பிடச் சொன்னார். பொட்டலத்தை பிரித்த வியாபாரி, வாந்தி எடுத்துவிட்டார். பழைய சாப்பாட்டில் புழுக்கள் நெளிந்துகொண்டு இருந்தன.

"எப்படியும் இன்னும் கொஞ்ச நேரத்துல நீ சாக்போற.. அப்புறம் என்ன சாப்பாடா இருந்தால் என்ன? இதை சாப்பிட்டாலே நீ செத்துடலாம். சாப்பிடு..’’ என்று மாணிக்கம் சொல்ல, "முடியாது..." என்று மறுத்துவிட்டார் வியாபாரி.

"இந்த உடம்பில் இருக்கும் உயிர், கடவுள் கொடுத்தது. அதை எடுக்கும் உரிமை நம் எவருக்கும் கிடையாது. கொடுத்தவனுக்கு மட்டும்தான் எடுக்கும் உரிமை உண்டு. உங்க வீட்டுல உன்னை காணோம்னு எல்லோரும் தவிச்சி போயிருக்காங்க. வயசு புள்ளைங்களையும், தாலிக்

கடின பொண்டாட்டியையும் தவிக்க விட்டுட்டு போக உனக்கு எப்படிடா மனசு வந்துச்சி. கஷ்டம் இல்லாத மனுஷனை இந்த உலகத்துல நீ காட்டு பார்க்கலாம். கஷ்டம் இல்லனா அவன் மனுஷனே கிடையாதுடா. நல்லது என்று இருந்தா, கெட்டதும் இருக்கத்தான் செய்யும். எப்பவும் இன்பம் மட்டுமே இருந்தால் வாழ்க்கை வாழ்க்கையா இருக்காது. நீ இப்பவே ஊருக்கு கிளம்பிப் போ.. உன் கஷ்டம் எல்லாம் தீர்ந்திடும்" என்றார் மாணிக்கம். இதை கேட்ட வியாபாரி, உடனே மாணிக்கம் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கிக்கொண்டு ஊருக்குத் திரும்பினார். அவரது கஷ்டங்கள் ஒவ்வொன்றாக விலகி, தொழிலில் பெரும் முன்னேற்றத்தைக் கண்டார். ஊரே அவரை மெச்சியது. அதற்கு பிறகு, ஒவ்வொரு மாதமும் தவறாமல் கொல்லிமலைக்கு வந்து மாணிக்கத்தை பார்த்து ஆசிர்வாதம் வாங்கிக்கொண்டு போவார். அந்த அறப்பளீஸ்வரரின் இன்னோர் உருவமாகத்தான் மாணிக்கத்தை பார்த்தோம்.

இதேபோல முடியாது என்று நினைத்த பல காரியங்களை சர்வ சாதாரணமாக செய்து முடித்திருக்கிறார் மாணிக்கம். தீர்க்கவே முடியாது என்று மருத்துவர்கள் கைவிட்ட பல நோய்களையும் மாணிக்கம் தீர்த்து வைத்திருக்கிறார். குழந்தைகளுக்கு ஏதாவது பிரச்னை என்றால், மாணிக்கத்தை பார்த்து அவர் கையால் விபூதி வாங்கி பூசினால் நோய்கள் தீரும் என்று மக்கள் நம்புகிறார்கள்.


# 4

# ஆகாய கங்கையும் மாசில்லா அருவியும்

அறப்பளீஸ்வரர் கோயிலுக்கு நேர்எதிரே கீழ் நோக்கி இறங்குகிறது படிகள். சுமார் 1000 படிகள் இறங்கினால், கொல்லிமலையின் ஒட்டுமொத்த அழகுக்கும் கண்முன் வந்து நிற்கும் ஒரே சாட்சி ஆகாய கங்கை நீர்வீழ்ச்சிதான். அப்பப்ப்பா..! காண கண்கள் இரண்டு போதாது. வற்றாத ஜீவநதிகள் ஐந்தும் ஒன்றுசேர்ந்து வானத்திலிருந்து மல்லிகைப் பூக்களை தூவுவதை போல கொட்டுகிறது.


வல்வில் ஓரி, கொல்லிமலையை ஆண்ட காலத்தில் ஆகாய கங்கையில் குளிப்பதற்காக தினமும் தனது படைபலத்தோடு வருவாராம். அந்தக் காலத்தில் படிகட்டுகள் கிடையாது. காட்டு வழிப் பாதையில் சர்வ சாதாரணமாக இறங்கி-ஏறுவாராம் ஓரி.

ஏராளமான மூலிகைகளால் சூழப்பட்ட மலை, கொல்லிமலை. இந்த மலையின் ஒவ்வொரு திக்கிலிருந்தும் கிளம்பிவரும் தண்ணீர், மலையில் உள்ள மூலிகைகளின் மீதும் பட்டு மூலிகை கலந்த தீர்த்தமாக கொட்டுகிறது. அப்படிப்பட்ட இந்த அபூர்வ அருவியில் குளித்தால், உடம்பில் உள்ள வியாதிகள் அனைத்தும் காணாமல் போகும் என்பது ஐதீகம். கொல்லிமலையில் வாழ்ந்த சித்தர்கள், துறவிகள் என எல்லோருமே இந்த ஆகாய கங்கையில்தான் குளித்திருக்கிறார்கள். ‘ஆகாய கங்கையில் குளித்தால், கங்கையில் புனித நீராடியதற்கு சமம்!’ என்று சொல்கிறார்கள். ஆடிப்பெருக்கு சமயங்களில் ஆகாய கங்கையில் நீராட, கூட்டம் அலைமோதும்.



ஆகாய கங்கை..

அறப்பளீஸ்வரர் கோயிலில் இருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்தில், 'மாசில்லா அருவி' என்ற ஓர் அருவி இருக்கிறது. மலை பகுதியில் ஊற்றெடுக்கும் தண்ணீர், மனிதனின் வாசம்கூட படாமல் அருவியாக வந்து கொட்டுகிறது. அள்ளிக் குடித்தால் அத்தனை சுவை. ஒரு முறை குளித்தால் புதிதாக பிறந்தது போல ஓர் உணர்வு ஏற்படும். மாசு இல்லாத அருவி என்பதுதான், மாசில்லா அருவி என மாறி இருக்கிறது. ஆகாய கங்கையில் இறங்கிக் குளிக்க முடியாதவர்கள்கூட மாசில்லா அருவியில் குளிக்க வருகிறார்கள். மாசில்லா அருவியில் குளித்தால், உடம்பிலும் மனதிலும் உள்ள அழுக்குகள் நீங்கும் என்பதும் ஐதீகம். 'மாசில்லா அருவியில் குளித்து முடித்துவிட்டு, அங்கிருந்து நேராக ஆகாய கங்கைக்கு போய் குளித்து ஈரம் காயாமல் அறப்பளீஸ்வரரை வணங்கினால், உடலில் உள்ள பிணிகள் நீங்கும்' என்கிறார்கள் இங்குள்ள கிராம மக்கள்.



மாசில்லா அருவி...

வாசலூர்பட்டி என்ற இடத்தில் அரசு சார்பில் அமைக்கப் பட்டுள்ளது பரிசல் துறை. நான்கு பக்கமும் மலைகள் சூழ்ந்து பார்க்கவே படு ரம்மியமாக இருக்கும் ஏரிக்குள், பரிசல் பயணம் செய்வது கொள்ளை அழகு.



வாசலூர்பட்டி பரிசல் துறை

படகு இல்லத்துக்கு அருகே மண்ணில் புதைந்துபோன, கி.பி. 9-ம் நூற்றாண்டைச் சேர்ந்த சிவாலயம் ஒன்றை அண்மையில் கண்டறிந்தனர். இந்தப் பகுதியின் அந்தக் காலப்பெயர் ‘வாயிலூர்’. கொல்லிமலையின் நுழைவாயில் என்பதால் இந்தப் பெயராம்! கருவறையில் லிங்கம் இல்லை. பாதுகாப்பு கருதி வேறு எங்கோ வைத்திருக்கிறார்களாம். கிழக்குப் பார்த்த ஆலயம் இது! மகா மண்டபம், அர்த்த மண்டபம், கருவறை ஆகிய அமைப்பை இப்போதும் காண முடிகிறது. கருவறைக்குள் பிரமாண்டமாக வளர்ந்து நிற்கும் மரம் ஒன்று, கருவறையையே இரண்டாகப் பிளந்து வைத்துள்ளது. ‘இந்த ஆலயத்துக்குள் இன்னும் அரிய பல சிலைகள் கிடைக்கலாம்!’ என்று சொல்கிறார்கள் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள்.

அத்தகைய சிறப்பு வாய்ந்த சிவாலயத்துக்கு செல்லும் வழியில், சுமார் 2000 ஆண்டுகளுக்கு முந்தைய முதுமக்கள்தாழி ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாழி, அந்தக்கால மக்களின் நாகரிக வளர்ச்சியை பிரதிபலிக்கிறது.

# 5

# காமப் பார்வை வீசும் கொல்லிப்பாவை

அறப்பளீஸ்வரர் கோயிலில் இருந்து வடக்கே நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது கொல்லிப்பாவை கோயில். தென்னை ஓலையில் வேயப்பட்ட குடிசைக்குள் இருக்கிறாள் கொல்லிப்பாவை.

யார் இந்த கொல்லிப்பாவை?

‘திவளும்வெண் மதிபோல் திருமுகத் தரிவை

செழுங்கட லமுதினிற் பிறந்த

அவளும், நின் னாகத் திருப்பது மறிந்தும்

ஆகிலு மாசைவி டாளால்,

குவிளையங் கண்ணி கொல்லியம் பாவை

சொல்லுநின் தாள்நயந் திருந்த

இவளை, உன் மனத்தா லென்னினைந் திருந்தாய்

இடவெந்தை யெந்தை பிரானே! ’

- நாலாயிர திவ்வியப்பிரபந்தத்தில் கொல்லிப்பாவை பற்றி சொல்லப்பட்டிருக்கும் பாடல் இது.



ஒரு காலத்தில் அசுரர்கள், கொல்லிமலைக்கு அடிக்கடி வந்து மக்களுக்கு தீராத தொல்லைகளைக் கொடுத்துக்கொண்டு இருந்தார்கள். அசுரர்களிடமிருந்து தங்களை காப்பாற்றுமாறு மக்கள் அறப்பளீஸ்வரரிடம் மன்றாடினார்கள். மக்களை காக்க, 'மாயன்' என்ற தெய்வ சிற்பியை கொல்லிமலைக்கு அனுப்பி வைத்தான் ஈஸ்வரன். அந்த தெய்வ சிற்பி, அழகிய பெண் சிலை ஒன்றை வடித்தார். அந்தச் சிலைக்குக் 'கொல்லிப்பாவை' எனப் பெயர் வைத்தார். பார்க்கும் அனைவருக்கும் காமத்தை உண்டாக்கக்கூடிய அழகிய சிலைதான் கொல்லிப்பாவை.

இந்த விக்கிரகத்தை பார்த்து, தேவர்களே பிரமித்தார்கள். அதுவரை இப்படிப்பட்ட தத்ரூபமான ஒரு விக்கிரகத்தை அவர்கள் பார்த்ததே இல்லை. உயிரோட்டமுள்ள அந்தக் கொல்லிப்பாவையின் கண்கள் மெல்ல அசைந்து, எதிராளியைத் தன் அருகே அழைப்பதுபோல் இருக்கும். கொல்லிமலைக்கு வரும் அசுரர்கள் இந்தக் கொல்லிப்பாவையை பார்த்து காமம் கொண்டு அருகில் நெருங்கும்போது, அவர்களை அழிக்கும் ஆற்றல் கொண்டது இந்தச் சிலை. கொல்லிப்பாவை வந்த பிறகு, அசுரர்களின் வருகை

தடுக்கப்பட்டது. மக்கள் மகிழ்ச்சியோடு வாழ ஆரம்பித்தார்கள் என்று ஒரு தரப்பில் சொல்கிறார்கள்.

ஒரு கட்டத்தில், கொல்லிமலையில் இருந்த மொத்த அசுரர் கூட்டமும் காணாமல் போனது. இப்படி, அசுரர்கள் கூட்டத்தை சகட்டுமேனிக்குக் கொன்று குவித்ததால், இந்த அம்மனுக்குக் 'கொல்லிப்பாவை' என்ற பெயர் வந்ததாகக்கூடச் சொல்வார்கள்.

இன்னொரு தரப்பினரோ, கொல்லிமலையில் வாழ்ந்த சித்தர்கள் ஏராளமான மூலிகை மருந்துகளை தயாரித்து, குகைகளிலும் பாறை இடுக்குகளிலும் வைத்திருந்தனர். சித்தர்கள், மூலிகைகளைத் தேடி காட்டுக்குள் சென்ற சமயத்தில், மருந்துகளை யாரும் அழித்தோ.. திருடிச் சென்றுவிடவோ கூடாது என்பதற்காக கொல்லிப்பாவையை காவலுக்கு வைத்துவிட்டு போவார்கள். அதேபோல சித்தர்கள் தவம் இருக்கும்போது, தீய சக்திகள் சில அவர்களது தவத்தை களைக்க முயற்சிகள் செய்யும். அந்தத் தீய சக்திகளை திசைத் திருப்பி அழிப்பதற்காக உருவாக்கப்பட்டதுதான் கொல்லிப்பாவை என்றும் சொல்கிறார்கள்.

யாராவது தப்பு செய்துவிட்டோ, தவறு செய்யும் நோக்கத்தோடோ கொல்லிமலைக்கு வந்தால், அவர்களை கொல்லிப்பாவை கொல்லும் என்பது மக்களின் நம்பிக்கை. கொல்லிமலையில் நடக்கும் விபத்துகளோ கொலைகளோ எதுவானாலும், இயற்கைக்கு மாறாக எந்த மரணம் சம்பவித்தாலும் அது கொல்லிப்பாவையின் கைவரிசைதான் என்பதை மக்கள் அடித்துச் சொல்கிறார்கள். எது எப்படி இருந்தாலும், 'தப்பு செய்பவர்களுக்கு கொல்லிப்பாவை தண்டனை கொடுக்கும்' என்ற பயம் இருக்கிறது. அந்த பயமே தவறுகளை தடுத்துக்கொண்டு இருக்கிறது.

மொத்தத்தில், கொல்லிப்பாவை என்பவள் சாதாரணமானவள் அல்ல! நன்மக்களை அழிக்க நினைத்த அசுரர் கூட்டத்தையே கபளீகரம் செய்தவள். கெட்ட எண்ணம் கொண்ட கூட்டத்தை அவள் என்றைக்குமே விட்டுவைக்க மாட்டாள். பொய்-புரட்டு பேசி மக்களை ஏமாற்றும் எவரும், அவளுடைய அருளாட்சியில் இருக்கும் இந்த மலையில் அரை விநாடிகூட தாக்குப்பிடிக்க முடியாது. எனவே, தவறான எண்ணத்துடனும், மோசமான திட்டங்களுடனும் யார் இங்கே வந்தாலும் அவர்களை ஓட ஓட விரட்டி அடித்துவிடுவாள் என்பது மக்களின் நம்பிக்கை.

'எட்டுக்கை அம்மன்' என்று பெயர் கொண்ட அவளை, கொல்லிமலை

மக்கள் இன்றும் வணங்கி வருகிறார்கள். தென்னை ஓலை குடிசைக்குள் இருக்கும் எட்டுக்கை அம்மன், எப்போதும் சந்தனக்காப்பு அலங்காரத்தில்தான் காட்சியளிக்கிறாள். தினமும் காலை எட்டு மணிக்கு அபிஷேகம் செய்யப்பட்டு, சந்தனக்காப்பு அலங்காரம் நடக்கிறது. அதன்பிறகு அம்மனுக்கு ஆராதனை நடக்கிறது.

இவை அனைத்தும் முடிந்த பிறகு, எட்டுக்கை அம்மனான கொல்லிப்பாவையிடம் குறி கேட்க மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து குவிகிறார்கள். கூர்மையான ஆணிகள் மீது ஏறி நின்று கோயில் பூசாரி அருள்வாக்கு சொல்கிறார். பேய் பிடித்திருப்பதாக நம்புபவர்கள், இரவில் அழும் குழந்தைகள், பயந்த சுவாபம் உள்ளவர்கள்... அனைவரும் இந்தக் கோயிலுக்கு வந்து பூசாரியிடம் விபூதி வாங்கிக்கொண்டு போனால், அத்தனைப் பிரச்னைகளும் தீர்ந்துவிடுமாம். இதற்காகவே அமாவாசை தினங்களில் மட்டும் கொல்லிப்பாவை கோயிலில் கூட்டம் முட்டி மோதும்.

சிலர் கொல்லிப்பாவை கோயிலுக்கு வந்ததுமே, மிரட்சியோடு உடலை முறுக்கி ஆடுகிறார்கள்.

நல்லது நினைப்பவர்களும், நல்லது செய்வபர்களும் மட்டுமே கொல்லிமலையில் இருக்க முடியும். அத்தகைய சக்தி வாய்ந்த ‘கொல்லிப்பாவை’ என்கிற பெண் தெய்வம், இங்கே குடி கொண்டதால்தான் இந்த மலைக்குக் ‘கொல்லிமலை’ என்கிற பெயர் வந்திருக்க வேண்டும் என்று சொல்கிறவர்களும் உண்டு.

கொல்லிப்பாவையின் சக்திக்கு சவால்விடும் வகையில் இப்போதும் சிலர் ஏதாவது சில காரியங்களை செய்து, மூக்குடைத்துக்கொள்வதும் உண்டு. அப்படி ஒரு சம்பமாக அந்தப் பகுதியில் வசிப்பவர்கள் சொல்லும் கதை இதோ..

கோவையை சேர்ந்த சாமியார் ஒருவர், கொல்லிமலையைப் பற்றி நன்கு அறிந்தவர். இவர், சில வருடங்களுக்கு முன் கொல்லிமலைக்கு வந்திருந்தார். கொல்லிப்பாவை கோயிலுக்கு வந்த அவர், கோயில் வாசலில் நின்று கொல்லிப்பாவையை வெறித்தபடி பார்த்துக்கொண்டு இருந்தார். கோயில் பூசாரியிடம் போன சாமியார், ‘எட்டுக்கை அம்மனுக்கு கோயில் இல்லாமல், வெறும் ஓலைக்குடிசையில் அவள் இருப்பது என் மனதுக்கு கஷ்டமாக இருக்கிறது. அவளுக்கு நான் கோயில் கட்டலாம் என முடிவு செய்துள்ளேன். அந்த அம்மனே என் கனவில் வந்து கோயில் கட்ட உத்தரவிட்டிருக்கிறாள்’ என்று சொல்லி,

கோயிலுக்கு பக்கத்திலேயே ஒரு குடிசை போட்டு அமர்ந்துவிட்டார்.

ஆனால் பூசாரியோ, 'தனக்கு ஆடம்பரமான கோயில் கட்டக் கூடாது என்பதை, எடுக்கை அம்மன் தன் பக்தர்களுக்கு பல முறை உணர்த்தி இருக்கிறாள். இது நல்லதுக்கு அல்ல.. வேண்டாம்' என தடுத்துப் பார்த்தார், முடியவில்லை. கோயிலுக்கு அருகே குடிசை போட்ட சாமியார், கோயில் கட்ட நன்கொடை வசூலில் இறங்கினார்.

இந்த நேரத்தில் அங்கு வந்த சித்தர் ஒருவர், 'ஐயா! இந்த மலையின் நாயகியான அவளுக்கு கோயில் வேண்டும் என நினைத்திருந்தால் அந்த நல்ல காரியத்தை எந்த நேரத்தில் யாரைக் கொண்டு எப்படி முடிக்க முடியும் என அவளுக்கு தெரியும். இப்படி நடுத்தெருவில் உட்கார்ந்து கையேந்த வைக்கமாட்டாள். நீங்கள் இந்த விஷயத்தை இத்தோடு நிறுத்திக்கொள்ளுங்கள். இல்லை என்றால், அம்மனின் கோபத்துக்கு ஆளாக நேரிடும்' என எச்சரித்தார். ஆனால் அந்தப் போலியான சாமியாரோ அதை கண்டுகொள்ளவில்லை.

நல்லது சொன்ன சித்தர் மீது, கெட்ட சக்திகள் சிலவற்றை ஏவி விட்டார் சாமியார். ஆனால் அவையெல்லாம் சித்தரை கண்டு தவிடுபொடியாகிப் போனது. சரி.. பட்டு திருந்தட்டும் என சித்தரும் அங்கிருந்து கிளம்பிவிட்டார். கோயில் கட்டுவதற்காக தொடர்ந்து பண வசூல் செய்துவந்த சாமியார், கோயில் கட்டுவதற்காக பூஜைகளை செய்தார். அஸ்திவாரம் தோண்டுவதற்காக ஆட்களை வரவழைத்து தோண்ட ஆரம்பித்தால், எந்த இடத்திலும் மண்வெட்டியோ கடப்பாறையோ பூமிக்குள் இறங்கவே இல்லை. சாமியாரும் ஒரு கட்டம் வரை முயற்சி செய்து தோற்று போனார். அந்த நேரத்தில் அங்கு வந்த சிறுமி ஒருத்தி, 'முட்டாள் சாமியாரே.. எனக்கு கோயில் வேண்டும் என்றால் அதை கட்டிக்கொள்ள எனக்கு இத்தனை வருடங்களா ஆகி இருக்கும். என்னை வைத்து நீ பணம் சம்பாதிக்க பார்க்கிறாய். இன்றைக்கு பொழுது சாய்வதற்குள் என் மலையைவிட்டு இறங்கிவிடு. இல்லையென்றால் நீ உயிரோடு இருக்கமாட்டாய்' என்று சொல்லிவிட்டு மறைந்து போனாள். பயந்துபோன சாமியார், வசூல் செய்த பணத்தையெல்லாம் எட்டுக்கை அம்மன் காலடியில் வைத்துவிட்டு கொல்லிமலையை விட்டு ஓட்டம் பிடித்தார். அசுரர்களை கொன்று குவித்தவளுக்கு இந்த ஆள் எம்மாத்திரம்?

அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த கொல்லிப்பாவையை சிறப்பித்து பாடாத தமிழ் இலக்கியங்கள் இல்லை.

அகநானூற்று பாடல் ஒன்றில்,

‘செல்வேர்ப் பலவின் பயங்கொழு கொல்லி

நிலைபெறு கடவுள் ஆக்கிய

பலர்புகழ் பாவை அன்னநின் நலனே’

- என்று பாடப் பெற்றிருக்கிறது.

‘உரைசால் உயர்வரைக் கொல்லிக் குடவயின்

அகல்இலைக் காந்தள் அலங்குலைப் பாய்ந்து

பறவை இழைத்த பல்கண் இறாஅல்

தேனுடைய நெடுவரைத் தெய்வம் எழுதிய

வினைமாண் பாவை அன்னோள்

கொலைசூழ்ந் தனளால், நோகோ யானே’

- இது நற்றிணையில் குறிப்பிடப்பட்டுள்ள கொல்லிப்பாவை பற்றிய பாடல். இது மட்டும் அல்ல..

‘பெரும்பூட் பொறையன் பேஎமுதிர் கொல்லி

கருங்கண் தெய்வம் குடவரை எழுதிய

நல்லியற் பாவை அன்னஎம்

மெல்லியற் குறுமகள் பாடினாள் குறினே’

- என்று குறுந்தொகையும் கொல்லிப்பாவையை சிறப்பித்திருக்கிறது.

எப்படிப் பார்த்தாலும், ‘கொல்லிப்பாவை’ கொல்லிமலையின் தவிர்க்க முடியாத பாவை!

# 6

# மலை முழுங்கியும் தலை வணங்கியும்!

கொல்லிமலையில் வசிக்கும் பெரும்பாலான மக்களின் வீடுகளில், 'மலை முழுங்கி வேர்' என்ற வேரை வீட்டுக்குள் வைத்து பூஜை செய்கிறார்கள். இந்த வேரை யார் கொடுத்தார்கள்? எப்படி வந்தது? என்ற எந்தக் கேள்விக்கும் அவர்களிடமிருந்து பதில் இல்லை. 'இந்த வேர், எங்க தாத்தா காலத்துல இருந்து வீட்டுல இருக்குது' என்று மட்டுமே சொல்கிறார்கள்.

இந்த வேரை வீட்டில் வைத்திருந்தால், எவ்வளவு சங்கடங்கள் வந்தாலும் அதிலிருந்து எளிதாக வெளியில் வர முடியுமாம். யாராலும் செய்து முடிக்க முடியாத காரியங்களையும் நினைத்தபடி செய்து முடிக்க முடியுமாம்.

அதேபோல 'தலை வணங்கி வேர்' என்ற ஒரு வேரும் இருக்கிறது. இந்த வேர் சற்று வளைந்தபடிதான் இருக்கிறது. இந்த வேரை வைத்திருப்பவர்களை யாரும் எதிர்க்கமாட்டார்கள். எதிரிகள்கூட இவர்களைக் கண்டால் பணிந்துதான் போவார்கள் என்பதை இன்றுவரை மக்கள் நம்பிகையாகவே கொண்டு இருக்கிறார்கள். மக்கள், இந்த இரண்டு வேர்களை வாங்குவதற்காக பல பகுதிகளில் இருந்தும் கொல்லிமலைக்கு வருவார்கள். ஆனால் இந்த வேர் எங்கு கிடைக்கும், எவ்வளவு விலை... போன்ற விவரத்தை எவருமே சொல்வதில்லை.



கொல்லிமலைக் காடு...

இதேபோலத்தான் கொல்லிமலை குள்ளன். கொல்லிமலையில் உள்ள குள்ளன், அரை அடி உயரம் கொண்டவன். அவனை கொண்டுபோய் வீட்டில் வளர்த்தால் செல்வம் பெருகும். நினைக்கிற காரியம் அனைத்தும் நிறைவேறும் என்று சொல்வதுண்டு. கொல்லிமலை குள்ளனை தேடி அங்கே வருபவர்கள் இன்றும் ஏராளம். அவர்கள், கொல்லிமலை குள்ளனை தேடிக் காட்டுக்குள் அலைந்துகொண்டு இருக்கிறார்கள். ஆனால், இதுவரை யாருக்கும் குள்ளன் கிடைக்கவில்லை. கொல்லிமலை குள்ளனை காட்டுகிறேன்; குள்ளனை விலைக்கு வாங்கி தருகிறேன் என்று ஏமாற்றும் கூட்டமும் இங்கே உண்டு. அவர்களிடம் பணத்தைக் கொடுத்து ஏமாறாமல் இருக்க வேண்டியது அவசியம்.

காதலிக்காத பெண்ணை காதலிக்க வைக்கிறோம், ஆட்டம் போடும் பொண்டாட்டியை அடக்கி வைக்கிறோம், எதிர்த்து நிற்கும் எதிராளியை மண்டியிட வைக்கிறோம் - எங்களிடம் இருக்கும் ஒரு மை டப்பாவை வாங்கிக்கொண்டு போய், நீங்கள் நினைப்பவர் தலையில் தடவிவிட்டால் போதும்.. நீங்கள் சொல்வதை அவர்கள் கேட்பார்கள்..' என்று போர்டு போட்டும் உட்கார்ந்திருக்கிறார்கள். இவர்களிடம் நீங்கள் உஷாராக இருக்க வேண்டியது அவசியம். இல்லையென்றால், உங்கள் பர்ஸை பதம் பார்த்துவிடுவார்கள்.

# 7

# கல்யாண மாலை கொண்டாடும் பெண்ணே..!

கொல்லிமலைக்கு நான் சென்றிருந்தபோது அங்கே ஒரு வீட்டில் திருமணம் நடந்துகொண்டு இருந்தது. விடிய விடிய திருமண சடங்குகளை நடத்திக்கொண்டு இருந்தார்கள். 'ஊர் கவுண்டர்' என்று சொல்லப்படும் பெரியவர் ஒருவர், திருமணம் நடக்கும் வீட்டு வாசலிலேயே கம்பீரமாக உட்கார்ந்திருந்தார். கொல்லிமலை மக்களின் திருமண சடங்குகள் பற்றி அவர் சொன்ன தகவல்கள் இதோ..

''காஞ்சிபுரத்துல இருந்த அண்ணன் தம்பிங்க மூனு பேர், கொல்லிமலைக்கு வேட்டையாட வந்தாங்க. ரொம்ப நாளாக வீடு திரும்பாமல் இருந்ததால், 'மூனு பேரும் விலங்குகள் அடிச்சி செத்துபோயிட்டாங்கன்னு' நினைச்சி, அவுங்களோட பொண்டாட்டிங்க மூனு பேரும் தீ வச்சிகிட்டு உசிர விட்டுட்டாங்க. வேட்டையாடி முடிச்சிட்டு ஊருக்கு திரும்புன மூனு பேரும், அங்கே போய் பார்த்து கதறி அழுதாங்க. இனி நமக்கு இந்த ஊரே வேண்டாம்னு கிளம்பிட்டாங்க. மூனு பேரும் மறுமணம் செஞ்சிக்க முடிவு செய்து, பொண்ணு பார்த்தாங்க. மூத்தவர், பெரியமலையில் இருக்கும் கைக்கோல சாதி பொண்ணை கட்டிகிட்டாரு. அடுத்தவரு பச்சமலையில் இருந்த வேட்டுவ சாதி பொண்ணை கட்டிகிட்டாரு. கடைசி ஆளுதான் எங்க கொல்லிமலையில தேவேந்திர சாதி பொண்ணை கட்டிகிட்டாரு. கடைசியா மூனு பேருமே கொல்லிமலையிலதான் குடியேறினாங்க. இவங்களைதான் பெரியமலையாளி, பச்சைமலையாளி, கொல்லிமலையாளின்னு சொல்லுவாங்க. இதுல கொல்லிமலையாளி வம்சத்தை சேர்ந்தவங்கதான் ஊர் கவுண்டர்களாக இருப்பார்கள். எங்க ஊருல மட்டும் பதினைஞ்சு பேரு ஊர் கவுண்டனுங்களா இருக்கோம்.



கொல்லிமலை மக்களின் திருமண வைபோகம்...

முதல்ல பொண்ணு கேட்டு போவோம். பொண்ணு புடிச்சிருந்தா அன்னைக்கே நிச்சயம் செய்திடுவோம். பதினொன்னே கால் ரூவாய வெத்தல பாக்குல வச்சி, 'பால் படிகாசுன்னு' பொண்ணோட அம்மா கையில கொடுக்கணும். பொண்ணுக்கு அம்மா பால் கொடுத்து வளர்த்ததுக்காக அந்தப் பணத்தை கொடுக்கணும். கல்யாணத்துக்கு மொத நாள் ராத்திரி, மாப்பிள்ளை வீட்டுல இருந்து மூனு ஆம்பளைங்க வெல்லம், பச்சரிசி, நெய், தீப்பந்தம் எடுத்துகிட்டு பொண்ணு வீட்டுக்கு வரணும். அவுங்கக்கூட பொண்ணை அனுப்பி வச்சிடுவாங்க. அவுங்க, பொண்ணை கூட்டிகிட்டு ஊருக்கு மத்தியில இருக்கிற கோயிலுக்கு வந்துடணும். மாப்பிள்ளையும் கோயிலுக்கு வந்துடுவாரு.

காலையில ரெண்டு பேரும் கோயில்லயிருந்து வீட்டுக்கு போவாங்க. பூசாரிக்கு முன்னாடி நல்லெண்ணெய் விளக்கு ஏத்தி வச்சி இருபத்திரெண்டு பேரு தாலியைத் தொட்டுக் கொடுத்த பிறகுதான் மாப்பிள்ளை, பொண்ணு கழுத்துல தாலியைக் கட்டுவாரு. கல்யாணத்து அன்னைக்கு மாப்பிள்ளை வீட்டுல விருந்து நடக்கும். மத்த சடங்கு எல்லாம் ராத்திரி பொழுது சாஞ்சதும் நடக்கும். பொண்ணையும், மாப்பிள்ளையையும் மட்டும் தனியா விட்டுட்டு எல்லாரும் வெளியில

கிளம்பி வந்துடுவாங்க. கல்யாணம் முடிஞ்சி ஒரு வாரத்துக்கு ரெண்டு வீட்டுலயும் தனித்தனியா கெடா விருந்து நடக்கும். கல்யாணம்னாவே இங்க ஒரு வாரத்துக்கு கொண்டாட்டம்தான்'' என்றார்.

பெண் அழைப்புக்கு முன்பாக, புருஷன் வீட்டில் போய் எப்படியெல்லாம் வாழ வேண்டும் எனக் கல்யாண பெண்ணுக்கு பாட்டுப்பாடி சடங்கு நடத்துகிறார்கள். அந்தப் பாடலில், கணவனிடம் நடந்துகொள்ள வேண்டிய முறை, புகுந்த வீட்டில் உள்ள மாமியார், மாமனார், நாத்தனார் போன்றவர்களிடம் எப்படி அனுசரித்து போகவேண்டும் என்பதை அத்தனை அழகாக சொல்கிறார்கள்.

# 8

# சித்தர்களின் பூமி..!

கொல்லிமலையை இப்படி சொல்வதுதான் சரியாக இருக்கும். மரங்களாலும் மூலிகைகளாலும் மூடப்பட்ட இந்த மலைக்குள் எத்தனையோ ஞானிகள் வாழ்ந்திருக்கிறார்கள்! எத்தனையோ அரிய பொக்கிஷங்களை தேடிக் கண்டுபிடித்து அடுத்த தலைமுறைக்கு அர்பணித்து உள்ளனர்.

சரி, சித்தர்கள் என்று யாரை குறிப்பிடுகிறார்கள்?

எல்லோரும் செய்வதை செய்யாமல் தங்களுக்கென ஒரு தனிப்பதையை வகுத்துக்கொண்டு சமூகத்தோடு முரண்பாடான ஓர் உறவு வைத்திருப்பவர்கள். அறிவு ஞானம் பெற்றவர்கள். நீர், நிலம், காற்று, ஆகாயம், நெருப்பு என பஞ்சபூதங்களையும் அடக்கி ஆள்பவர்கள்.

இவர்களுக்கு தெரியாத கலைகளே இல்லை என்று சொல்லலாம். மருத்துவம், ஆன்மிகம், விஞ்ஞானம், ஓவியம், சிற்பம், மொழியாற்றல் என அத்தனை துறைகளையும் தங்களது கட்டுக்குள் வைத்து இருப்பவர்கள்.

நீரில் மிதப்பது, காற்றில் நடப்பது... என சித்தர்கள் சித்து விளையாட்டுகள் பலவற்றை நடத்திக் காட்டியுள்ளனர். சாஸ்திர-சம்பிரதாயங்களை எல்லாம் உடைத்து எரிந்துவிட்டு, ‘உள்ளமே கோயில்! உலகமே எல்லை!’ என வாழ்பவர்கள். இந்த உலகத்தை தெளிவாக புரிந்துகொண்டு வாழ்பவர்கள். மொத்தத்தில் சூப்பர்மேன் பவர் கொண்டவர்கள் சித்தர்கள்.

மனித சக்திக்கு அப்பாற்பட்டவர்கள்! மனிதர்களிலேயே நல்லவர் யார், கெட்டவர் யார் என்பதை நம்மால் அறிந்துகொள்ள முடிவதில்லை. கூட இருந்தே குழி பறிக்கும் கூட்டம் நிறைந்த உலகத்தில், சித்தர்களை தேடி கண்டுபிடிப்பது என்பது அவ்வளவு எளிதல்ல. சித்தர்களது சொல்லும் செயலும், மனிதர்களால் கண்டறிய முடியாது. இவர்களது தவ

வாழ்க்கை நம் கண்களுக்குப் புலப்படாது. யாருக்கு எந்த நேரத்தில் என்ன உதவி செய்ய வேண்டும் என்பது சித்தர்களுக்கு தெரியும். அவர்களுக்கு தேவையான நேரத்தில் தேவையான உதவிகளை தேடி வந்து கொடுப்பார்கள். சித்தர்களை பற்றிய எண்ணங்களை மட்டுமே மனதுக்குள் வைத்து நல்ல எண்ணத்தோடு சித்தர்களை தேடிப் போகும் ஒவ்வொருக்குமே சித்தர்கள் இன்றும் தரிசனம் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

சித்தர்களைத் தேடிச் செல்லும்போது, எதிர்பார்ப்புகள் இருக்கக் கூடாது. இறை வழிபாட்டிலேயேகூட பக்தனுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை தீர்மானிப்பது இறைவன் மட்டும்தான். இறைவனுக்கு அடுத்த ஸ்தானத்தில் சித்தர்கள் இருக்கிறார்கள்.

காற்றில் உள்ள அலைக்கற்றைகளின் வழியாக இன்று நாம் செல்போனில் பேசுகிறோம். எஸ்.எம்.எஸ். அனுப்புகிறோம். ஆனால் இவை எதுவுமே இல்லாத காலத்தில் பிரபஞ்சத்துடன் கலந்து, எந்த இடத்துக்கு தங்களது எனர்ஜி தேவைப்படுகிறதோ அங்கே போய் நிற்பார்கள் சித்தர்கள். அல்லது காற்றின் வழியே எனர்ஜியை அனுப்பி வைப்பார்கள். ஓரிடத்தில்தான் இருப்பார்கள் என்று சித்தர்களை கட்டிப்போட்டு வைத்துவிட முடியாது. பல இடங்களில் பரிணமிப்பவர்கள். கிடைத்த இடத்தில் இருப்பார்கள். கிடைத்ததை சாப்பிடுவார்கள்.

சமீபத்திய உதாரணம் சொல்ல வேண்டும் என்றால், 'ஏழாம் அறிவு' படத்தில் வரும் போதி தர்மன். அனைத்து கலைகளையும் கற்றுக்கொண்டு சரித்திரம் படைத்த போதி தர்மன்கூட ஒரு வகையில் சித்தர்தான். சிலர் குறிப்பிடுவதைப் போல சித்தர்கள் 18 பேர்... 108 பேர் என்றெல்லாம் கணக்கிட்டு சொல்லிவிட முடியாது. பெயர் குறிப்பிட முடியாத.. கணக்கில் அடங்காத சித்தர்கள் இந்த பூமியில் வாழ்ந்திருக்கிறார்கள். சித்தர்கள் என்பவர்கள், வேப்ப மரத்தை போன்றவர்கள். எல்லா ஊரிலும் இருப்பார்கள். எந்த சித்தரும் தனக்கென்று ஒரு பெயரை சூட்டிக்கொண்டு வியாபாரம் செய்ததாக வரலாறு இல்லை.



கொல்லிமலையின் எல்லைச்சாமி

*'உனக்குள் இருப்பான் எனக்குள்ளும் இருப்பான்*

*உருவம் இல்லா உண்மை அவன்.*

*இதை உணர்ந்தவர் இங்கே உலவுவது இல்லை*

*தானும் அடைவார் அந்நிலை தன்னை'*

- என்கிறது சித்தர் பாடல் ஒன்று. 'கடவுள் என்பவர் எங்கும் தனியாக இல்லை. உனக்குள்ளும் எனக்குள்ளும்தான் இருக்கிறான். உடம்பை பேணுவதே கடவுளை தேடும் வழி!' என்பதே சித்தர்களின் கோட்பாடு.

இயற்கையை வெல்லும் ஆற்றல் படைத்த சித்தர்களுக்கு, ஐந்து தகுதிகளை அவர்களுக்குள்ளே வகுத்து வைத்திருக்கிறார்கள்.

¤ சித்தத்தை அடக்கக்கூடியவர்களே சித்தர்கள் என்பது முதல் தகுதி.

¤ எட்டுவகையான சித்து விளையாட்டுகளில் தேர்ச்சி பெற்றிருப்பார்கள்.

¤ முற்றும் துறந்தவர்கள்.

¤ இந்தப் பிறவியில் பிறப்பு எடுத்ததற்கான காரணத்தை அறிந்திருப்பார்கள். இதன்மூலம் ஐம்புலன்களையும் அடக்கி தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருப்பார்கள்.

¤ ஆயகலைகள் அறுபத்து நான்கையும் கற்றுத் தேர்ந்து, அதன்மூலம் இந்த உலகுக்கு நன்மைகளை செய்வார்கள்.

இந்த ஐந்து தகுதிகளையும் அடைப்படையாக வைத்து, எதிர்பார்ப்புகள் இல்லாத வாழ்க்கையில்தான், இனிமையும் ஏகாந்தமும் இருக்கும் என்பது சித்தர்களின் வாக்கு. உண்மையான பக்தியில் எதிர்பார்ப்பு இருக்காது. சித்தர்கள் எதையும் எதிர்பார்க்காதவர்கள்.

சித்தர்கள் காலத்து செய்திகளுக்கு ஆவணங்களோ ஆதாரங்களோ பெரிய அளவில் கிடைக்கப் பெறவில்லை. ஆனாலும், வழி வழியாக சொல்லப்பட்டு வரும் தகவல்களே இன்று ஆதாரமாக.. ஆவணங்களாக இருக்கின்றன.

# 9

# மருத்துவர்களும்.. ஞானிகளும்..!

அந்த காலத்தில் மக்களை நோய்களிலிருந்து காக்க, ஊர் ஊருக்கு டாக்டர்களோ அறுவைசிகிச்சை நிபுணர்களோ கிடையாது. சித்தர்கள்தான் அந்தப் பணியைச் சிறப்பாக செய்திருக்கிறார்கள். மனித குலத்தை காப்பதற்காக காடுமேடுகளில் அலைந்து திரிந்து எந்த வியாதிக்கு எந்த மூலிகையை சாப்பிடலாம் என்பதை கண்டுபிடித்திருக்கிறார்கள். அத்துடன் அந்த மூலிகைகளின் ரகசியங்களையும் மக்களுக்கு கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். இதை வைத்து எந்த ஆதாயமும் சித்தர்கள் தேடிக்கொள்ளவில்லை. மக்களுக்கு வரும் வியாதிகளிலிருந்து அவர்களை காப்பாற்றுவதை ஒரு கடமையாகவே நினைத்து செய்து முடித்தனர்.

சித்தர்களின் வைத்திய முறைகளில் தீர்க்க முடியாத நோய்களே இல்லை என்று சொல்லும் அளவுக்கு, அனைத்து நோய்களுக்குமே மருந்து கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

மனிதனின் உடலுக்குள் இருக்கும் ஆற்றலை தட்டி எழுப்பக்கூடிய இருபது மூலிகைகளை, சித்தர்கள் பட்டியல் போட்டுள்ளனர்.

1. வல்லாரை

2. ஓமம்

3. பொற்சிந்தில்

4. விழுதி

5. பேய்ச்சுரை

6. கஞ்சா

7. கருநெல்லி

8. வேம்பு

9. தூதுவிளை

10. நத்தைச் சுரை

11. அழுக்கண்ணி

12. கத்தாழை

13. சஞ்சீவி மூலிகை

14. நாக தாளி

15. ஜோதி விருட்சம்

16. சாயா விருட்சம்

17. சுணங்கி விருட்சம்

18. கிளிமூக்கு பழம்

19. அமுரி உப்பு

20. சக்தி சாரணை

'எப்படிப்பட்ட சோம்பலாக இருந்தாலும் இந்த இருபது மூலிகைகளில் ஒன்றை உண்டால், உடலும் உள்ளமும் ஆற்றல் பெறும்' என்கிறார்கள் சித்தர்கள். கொல்லிமலையில் இந்த இருபது மூலிகைகளுமே கிடைக்கும் என்பதுதான் அந்த மலையின் தனிச்சிறப்பு. சாதாரண ஒரு மனிதன், எந்த வசதியும் இல்லாமல் இத்தகைய அரிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு மருந்துகளை கண்டுபிடித்தது, வியக்கவைக்கும் ஆச்சர்யம்தான்! மனிதனால் உணர்ந்துகொள்ள முடியாத ஆச்சர்யங்களில் சித்தர்களும் நிச்சயம் அடங்குவார்கள்.


எப்படியும் வாழலாம் என்பது வாழ்க்கையும் கிடையாது; அப்படி வாழ்பவன் மனிதனும் கிடையாது. இப்படித்தான் வாழ வேண்டும் என தனக்குள் சில கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டு வாழ்பவன்தான் மனிதன். அப்படி மனிதர்கள் வாழ்வதற்கான வாழ்க்கை கோட்பாடுகளையும் சித்தர்கள் வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். 'பொய், சூது, கொலை, குடி, கூடா ஒழுக்கம், விபசாரம் ஆகியவை

உடலுக்கும் வாழ்க்கைக்கும் கேடு விளைவிப்பன. இவற்றை தவிர்த்துவிட்டு வாழ்ந்தால் நோயின்றி.. சிறப்பான வாழ்க்கையை வாழலாம்' என்கிறார்கள்.



மூலிகைகள் சூழ்ந்த மலை

இன்று இருப்பதைப் போல லேப் வசதிகள் அன்று கிடையாது. வேண்டிய விஷயத்தைத் தேட, இன்டர்நெட் வசதிகளும் இல்லை; மின்சார வசதியும் கிடையாது. இப்படி எந்த வசதியும் இல்லாமல் குகைகளிலும் பாறை இடுக்குகளிலும் வாழ்ந்த சித்தர்கள், பல ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் அன்று நிகழ்த்திய ஆராய்ச்சி, இன்றைய ஆராய்ச்சிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மெய் சிலிர்க்கிறது.



சித்தர் குகைக்குள் வழிபாடு

பூமிப் பந்தை ஆட்டி வைப்பது, ஒன்பது வகையான கோள்கள். அதைத்தான் சித்தர்கள் 'நவகிரகங்கள்' என அன்றே பெயரிட்டு அழைத்தார்கள். கோள்களின் அமைப்பை வைத்து வாழ்க்கையை கணித்தார்கள். மழை வருவதையும், புயல் வரப்போவதையும் முன்கூட்டியே தெரிந்துகொண்டு எச்சரித்தார்கள்.

# 10

# கந்தங்களை ஆளும் சித்தர்கள்!

*உலக வாழ்க்கையை, ஏழு வகையான கோட்பாடுகளின் அடிப்படையில் வாழ்பவர்கள்தான் 'சித்தர்கள்'. வாழ்க்கையின் பல்வேறு நிலைகளிலும் தன் நிலையை மறவாது, மண்ணுலக மனிதர்களுக்கு உதவிகள் பல புரிபவர்கள்தான் சித்தர்கள்.*

*நாக கந்தம்*

*மனிதன், பரிபூரணமான பக்குவ நிலையை அடைய, இறைவனின் திருவடிகளை வணங்குவது மட்டுமே ஒரே வழி. மனிதனை மனிதனாக மாற்றக்கூடியதுதான் இந்த நாக கந்தம். மனிதன் மனிதனாக இருந்தால்தான் வாழ்க்கை வாழ்க்கையாக இருக்கும்.*

*பூரி கந்தம்*

*ஒருவனுக்கு தேவையான நியாமான விருப்பங்களை நிறைவேற்றக்கூடிய சக்தி இது. மந்திரத்தால் மாங்காய் வரவழைப்பது என்பார்களே.. கிட்டத்தட்ட அதைப் போலத்தான் இதுவும். முழுமனதோடு மற்ற யாருக்கும் தீங்கு இல்லாத நியாயமான விஷயத்தைக் கேட்டு பெறக்கூடிய சக்தி இது.*



சித்தர் போன பாதையில் நாமும் போவோமா..!

பிரவேச கந்தம்

இது, ஜீவன்களின் உணர்வை கட்டுக்குள் கொண்டுவந்து ஐம்புலன்களையும் அடக்கி ஆளும் சக்தி பெற்றது. மனித சக்தியால் செய்து முடிக்க முடியாத காரியங்களையும் சர்வ சாதாரணமாக செய்து முடிக்கும் வல்லமை படைத்தது.

அந்தர் சுஷும்ணா கந்தம்

மனித உள்ளத்தில், ஏழு வகையான ஆசைகள் உள்ளன. உள்ளத்தில் எழக்கூடிய இந்த ஏழு ஆசைகளையும் முறைப்படுத்தி, இது தேவையா? தேவையற்றதா? என ஆராய்ந்து, மனதை ஒழுங்கு படுத்தும் ஆற்றல்.

கிரக பதார்த்த கந்தம்

ஊழ்வினையால் மனிதனுக்குப் பல பிரச்னைகள் வரும். ஊழ்வினையின் பயன்களையும் பிரச்னைகளையும் கண்டறிந்து தீர்ப்பதற்கு பயன்படுவது கிரக பதார்த்தம்.

அபிலாட்ச சங்கம கந்தம்

மனிதனின் மனம், மதில் மேல் இருக்கும் பூனையைப் போன்றது. ஒரு பக்கம் நல்லவையும், இன்னொரு பக்கம் தீயவையும் நிரம்பி இருக்கும். மனதை நல்வழியில் நல்ல காரியங்கள் செய்வதற்கு பயன்படுத்துவதுதான் இது.

அனலேஷி சுத்த கந்தம்

பகைமை, விரோதம், குரோதம், பொறாமை ஆகியவற்றின் காரணமாகவே வாழ்க்கை பாதிக்கும். லட்சியங்கள் அலட்சியமாகும். அவ்வாறு நடக்காமல், மனிதனை சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப பக்குவமாக செயல்பட வைக்கும் சக்தி இது.

இந்த ஏழு கந்தங்களையும் தங்களது கட்டுக்குள் வைத்திருந்து, மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தி கொண்டவர்கள் சித்தர்கள். கொல்லிமலையில் வாழ்ந்து மறைந்த சித்தர்கள் சிலரை, கொல்லி மலை மக்கள் இன்றும் கடவுளாக வணங்கி வருகிறார்கள்.அவர்கள் சொன்ன மருத்துவ முறைகளையும், வாழ்க்கை தத்துவங்களையும் மக்கள் இன்றளவும் கடைப்பிடித்து வருகிறார்கள்.

# 11

# பாம்பாட்டிச் சித்தர்

*கொல்லிமலையில் வாழ்ந்த சித்தர்களில் மிக முக்கியமானவர், பாம்பாட்டிச் சித்தர். அறப்பளீஸ்வரர் கோயிலில் இருந்து கீழ் நோக்கிய அடந்த காட்டுக்குள், ஒத்தையடிப் பாதையில் சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரம் நடக்க வேண்டும். ஒரு பாறைக்கு அடியில், எவ்வளவு வெயில் அடித்தாலும் சரி.. மழை பொழிந்தாலும் சரி.. அது உள்ளே நுழையாத அளவுக்கு பாதுகாப்பாக இருக்கிறது அந்த இடம். அதுதான் பாம்பாட்டிச் சித்தர் வாழ்ந்த குகை.*

*மலையும் மலை சார்ந்த ஊர் கொல்லிமலை. இந்த மலைப்பகுதிக்குள், ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன. ஒரு காலத்தில், இந்த மலைப்பகுதியில் பாம்புகளின் நடமாட்டத்துக்கு அளவே இல்லை. விஷப்பாம்புகள் மக்களைத் அடிக்கடித் தீண்டுவதால் மரணங்கள் நிகழ்வது தொடர்கதையாகவே இருந்தது.*

*கொல்லிமலையில் இருந்த வைத்தியர்கள், பாம்பு தீண்டிய மக்களைக் காப்பாற்ற முடியாமல் அல்லாடினர். கொல்லிமலையில் இருக்கும் அறப்பளீஸ்வரனிடம், பாம்புகளிடமிருந்து தங்களை காப்பாற்றுமாறு மக்கள் வேண்டுதல் வைத்தனர்.*

*இந்தச் சூழ்நிலையில்தான் அந்த ஊருக்கு நடுத்தர வயதுக்காரர் ஒருவர் வந்தார். இடுப்பில் அழுக்கு துண்டு ஒன்று; ஜடா முடி; முகம் முழுக்க தாடி; கழுத்தில் ருத்திராட்ச மாலைகள்... என மக்களின் பார்வையிலிருந்து வித்தியாசமான கோலத்தில் இருந்தார். ஊர் மக்களோ, அவரைப் பைத்தியம் என நினைத்து கண்டு கொள்ளவே இல்லை.*

*ஒரு நாள், அறப்பளீஸ்வரர் கோயில் வாசலில் அவர் படுத்து உறங்கிக்கொண்டு இருந்தார். அப்போது, அவருக்கு அருகில் இரண்டு நாகப்பாம்புகள் படமெடுத்து நின்றுகொண்டிருந்தன. அந்த வழியாகப் போன மக்கள், இதை பார்த்து மிரண்டுபோய் சத்தம் போட்டனர்.*

பாம்பைப் பற்றி கவலைப்படாத சித்தர், சர்வ சாதாரணமாக எழுந்து, படமெடுத்து நின்றுகொண்டிருந்த பாம்புகளை கையில் பிடித்துத் தடவிக்கொடுத்தார். பாம்புகளும் அவரை எதுவும் செய்யவில்லை. பாம்புகளைத் தேடி அலைந்த பாம்பாட்டிச் சித்தர் இவர்தான்.

அதற்குள் இந்தத் தகவல் ஊர் முழுவதும் பரவி, ஊர் ஒன்றுகூடிவிட்டது. இவரை, மக்கள் அனைவரும் வணங்கினர்; கடவுளின் அவதாரமாகவே நினைத்தனர்.

''சுவாமி.. எங்க ஊருல பாம்புகளோட நடமாட்டம் அளவுக்கு அதிகமாவே இருக்குது. இங்குள்ள மக்கள் பலரும் பாம்பு தீண்டி இறந்துகொண்டே இருக்கிறார்கள். நீங்கள்தான் பாம்புகளிடமிருந்து எங்களைக் காப்பாற்ற வேண்டும்'' என்று சொல்லி ஒட்டுமொத்த மக்களும் அவரது காலில் விழுந்தனர்.

''பாம்பு, யாருக்கும் எப்போதும் எந்தத் தொந்தரவும் கொடுக்காது. நீங்கள் அதற்கு தொந்தரவு கொடுக்காத வரையில் அது உங்களை எதுவும் செய்யாது. பாம்பினால் உங்களுக்கு எந்தத் தீங்கு வந்தாலும் என்னிடம் வாருங்கள்..'' என்று சொல்லி, சிரித்துக்கொண்டே கோயிலின் பின்பக்கமுள்ள காட்டுப்பகுதிக்குள் நடக்க ஆரம்பித்தார் பாம்பாட்டிச் சித்தர்.

அதன்பிறகு, கொல்லிமலையில் உள்ள வைத்தியர்கள் பலரும் பாம்பாட்டிச் சித்தரை சந்திக்கப் போனார்கள். பாம்புக் கடித்தால் உடனே செய்ய வேண்டிய சிகிச்சை முறை ரகசியத்தை, பாம்பாட்டிச் சித்தர் வைத்தியர்களுக்கு கற்றுக்கொடுத்தார். 'இந்த வைத்தியத்தை நீங்கள் மக்களுக்கு எந்தக் கைமாறும் எதிர்பார்க்காமல் செய்ய வேண்டும். அப்படி அவர்களிடம் எதையாவது எதிர்பார்த்து நீங்கள் செய்தால், அந்த வைத்தியம் பலிக்காது' என்றும் சொல்லி அனுப்பினார்.

பாம்பாட்டிச் சித்தர், கொல்லிமலைக்கு வந்த பிறகு ஊர் மக்கள் பாம்பு பயமின்றி சந்தோஷமாக இருந்தனர். பாம்பாட்டிச் சித்தர், எப்போதாவதுதான் ஊருக்குள் வருவார். நேராக அறப்பளீஸ்வரர் கோயில் வாசலில் வந்து நிற்பார். யாரிடமும் பேசாமல், ஈஸ்வரனை நோக்கி கண்களை மூடி சில மணி நேரம் தவம் இருப்பார். பிறகு, அங்கிருந்து நேராக காட்டுக்குள் சென்றுவிடுவார்.


கொல்லிமலையில் இருந்த வைத்தியர் சிலர், நாக மாணிக்க பாம்பை தேடிக் காட்டுக்குள் அலைந்துகொண்டிருந்தனர். அவர்களிடம்

பாம்பாட்டிச் சித்தர் என்னவென்று விசாரித்தார். "நாக மாணிக்க பாம்பிலிருந்து உயிர் காக்கக்கூடிய சில அதிசய மருந்துகளை தயாரிக்க முடியும். அதற்காகதான் அந்தப் பாம்பை தேடுகிறோம். உங்களால் முடிந்தால் எங்களுக்கு உதவுங்கள்" என்று வேண்டுகோள் வைத்தனர். அவர்களின் வேண்டுகோளை ஏற்று பாம்பாட்டிச் சித்தரும் நாக மாணிக்க பாம்பை தேடிக் காட்டுக்குள் அலைந்தார்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு அவர் முன்தோன்றிய ஓர் உருவம், ‘பாம்பாட்டி! இந்த உலகத்தில் உள்ள பாம்புகளை எல்லாம் அடக்கி ஆளும் ஆற்றல் பெற்றவன் நீ. ஆனால், உனக்குள் இருக்கும் பாம்பை உன்னால் இதுவரை உணர முடியவில்லையா? அதை உணர்ந்தால்தான் நீ சித்தனாக இருக்க முடியும்’ என்று சொல்லிவிட்டு மறைந்ததாம். அதன்பிறகு நீண்ட நாட்கள் தவம் இருந்து தன் உடலுக்குள் இருக்கும் சக்தியை உணர்ந்தாராம் பாம்பாட்டிச் சித்தர்.

பாம்பாட்டிச் சித்தர் சொன்ன வாழ்க்கை தத்துவம்..

பாம்பாட்டிச் சித்தர், கொல்லிமலையில் மட்டுமில்லாமல் தான் சந்திக்கும் மக்களிடமெல்லாம், வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்ற உபதேசங்களை செய்ய தவறவில்லை. ‘வாழ்க்கையை, இப்படித்தான் வாழ வேண்டும் என்று வரையறுத்துக்கொள்ள வேண்டும். உன்னால் நான்கு பேருக்கு நன்மை செய்ய முடியவில்லை என்றாலும், தீமை செய்யாமல் இரு. உனக்குத் தேவையானப் பொருட்களை, நல்வழியில் சேர்க்க முயற்சி செய். தீய வழியில் சேர்க்கும் பொருட்கள் நிலைக்காது. அது உன்னையும் உன் சுற்றத்தாரையும் அழித்துவிடும். வயிற்றுப் பசிக்கும், வாழ்க்கை பசிக்கும் வழி தேடுவதைவிட, உனக்குள் இருக்கும் ஆன்ம பசிக்கு வழி தேடு. அதுதான் உன் வாழ்க்கை முழுவதுக்கும் துணையாக வரும். தீய சேர்க்கையும், செய்யக்கூடாத தவறுகளும் வாழ்க்கை பாதையை மாற்றிவிடும். கடைசியில் அது உன்னையே அழித்துவிடும். யாருடன் பழகினாலும் அவரிடம் உள்ள நல்ல பழக்கங்களை மட்டும் கிரகித்துக்கொள்’ என்ற அருளுரை மூலம் மக்களை நல்வழிப்படுத்தினார் பாம்பாட்டிச் சித்தர்.



இதற்காக ஒரு கதையையும் சொன்னார்...

‘‘மிகப் பெரிய செல்வந்தன் ஒருவனுக்கு, நிறைய நண்பர்கள் இருந்தனர். அவர்கள் அனைவரும் அவனுடைய செல்வத்துக்காக மட்டுமே அவனுடன் பழகுபவர்களாக இருந்தனர். இதை உணராத அவனுக்கு, உண்மையான நண்பர்கள் என்று எவரும் இல்லை. ஒருவன், எந்த நேரமும் குடிக்க வேண்டும் என்பதை மட்டுமே கொள்கையாக கொண்டவன். இன்னொருவன், பெண் பித்தன். இவர்கள் இரண்டு பேரோடு சேர்ந்த அந்தச் செல்வந்தன், அவர்களிடமிருந்து குடியையும், பெண்களிடத்திலான தகாத உறவையும் கற்றுக்கொண்டான்.

செல்வந்தனின் கையிலிருந்த செல்வங்கள் கரைய ஆரம்பித்தன. இருக்கும் பணத்தையெல்லாம் மதுவுக்கும் மாதுவுக்கும் செலவழித்துவிட்டு, கடைசியில் சாப்பாட்டுக்கே வழி இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டான். செல்வம் இருக்கும்போது உடனிருந்த நண்பர்கள் எவருமே இப்போது அவனோடு இல்லை. வீடு வீடாக போய் பிச்சையும் எடுத்தான். ஒரு கட்டத்தில் அதுவும் முடியாமல் போகவே, பசியால் துடித் துடித்து இறந்துபோனான். தீய பழக்கம் உள்ள நண்பர்களோடு சேர்வது, நமக்கு நாமே சூனியம் வைத்துக்கொள்வதற்கு சமமானது.

எனவே, நீ பழகக்கூடியவன் எப்படிப்பட்டவன் என்பதை பார்த்து பழக வேண்டும். சந்தோஷமான நேரத்தில் மட்டும் உடனிருந்துவிட்டு, ஒரு பிரச்னை என்று வரும்போது ஓடிவிடுபவன் நண்பனும் அல்ல; நல்லவனும் அல்ல..!’’ என்றார்.

# 12

# கோரக்க சித்தர்!

**கோ** என்றால் பசு, பசுபதி. ஆன்மாக்களை காப்பாற்ற அவதரித்தவர் என்பது பொருள். துன்பங்களில் வாடிக்கிடந்த மக்களை காப்பாற்ற பிறப்பெடுத்து வந்தவர் என்று கோரக்க சித்தரை சொல்வார்கள். விபூதியில் இருந்து பிறந்ததாகவும் கோரக்கருக்கு ஒரு வரலாறு உண்டு.

இவர் வட இந்தியாவில் பிறந்தவர் என்று, ஒரு சாரார் சொல்கிறார்கள். ஆனால், கோரக்கர் கொல்லிமலையில் வாழ்ந்ததற்கான ஏராளமான குறிப்புகள் உண்டு. அத்துடன், கோரக்கர் வாழ்ந்த குகை இன்றும் கொல்லிமலையில் மக்களால் வழிபட்டு வரப்படுகிறது.

ஆகாய கங்கை நீர்வீழ்ச்சிக்கு போகும் வழியிலிருந்து ஒத்தையடி பாதை ஒன்று பிரிகிறது. கல்லும் முள்ளும் நிறைந்த அந்தப் பாதையில் எவ்வளவு வேகமாக நடந்தாலும் மூன்று மணி நேரம் நடக்க வேண்டும். வழியில் சிறிய ஆறு ஒன்று ஓடுகிறது. இடுப்பளவு ஆழம் இருக்கும். அதில் இறங்கி நடந்து ஆற்றை கடந்து மீண்டும் காட்டுக்குள் நடக்க வேண்டும். உயர்ந்த மரங்களுக்கு மத்தியில் இருக்கிறது கோரக்க சித்தர் குகை. கோரக்கரை வழிபடுவதற்கு மக்கள் இங்கு வந்து போய்க்கொண்டுதான் இருக்கிறார்கள். இந்தக் குகை, கால்களை ஆசனம் போட்டு உட்காரும் அளவுக்கு உயரம் இருக்கிறது. பாறையிலான ஒரு படுக்கையும் இருக்கிறது. இதற்குள் பதுங்கி கொண்டால், மழை, காற்று, வெயில், குளிர்... என எந்தப் பிரச்னையும் இருக்காது.



கோரக்கர் குகை

கஞ்சா செடிக்கு, ‘கோரக்க மூலிகை’ என்று ஒரு பெயர் உண்டு. கஞ்சா செடியை அதிகமாக சாப்பிட்டு வாழ்ந்து வந்ததால் இவருக்கு ‘கோரக்க சித்தர்’ என்று பெயர் வந்ததாக சொல்கிறார்கள்.

கொல்லிமலை சாரலில், கஞ்சா செடிகள் ஏராளமாக வளர்ந்திருக்கும். அதுவே இவரது உணவாக இருந்திருக்கிறது. கஞ்சா மூலிகையை மருந்தாக பயன்படுத்தும் சூத்திரத்தை கண்டுபிடித்தது கோரக்கர்தான். போகர், சட்டை முனி, கொங்கணர் போன்ற சித்தர்களுக்கு நெருக்கமான நண்பர் கோரக்கர்தானாம். கோரக்கரின் குருநாதர் மச்சேந்திரர்.

ஒரு நாள், கோரக்கர் ஒரு வீட்டுக்குச் சென்று பிச்சை கேட்டார். அந்த வீட்டிலிருந்த பெண்மணி, வீட்டில் சுட்ட வடைகளை கொண்டுவந்து கோரக்கருக்கு பிச்சை போட்டார். கோரக்கரோ அந்த வடைகளை சாப்பிடாமல் தனது குருநாதர் மச்சேந்திரருக்கு கொண்டுபோய் கொடுத்தார். வடை மிகவும் சுவையாக இருக்க.. மறுநாளும் அதேபோல வடை வேண்டும் என மச்சேந்திரர் கேட்டார். முதல் நாள் பிச்சை எடுத்த வீட்டுக்கே போய் கோரக்கர் மீண்டும் வடை கேட்க, வீட்டிலிருந்த பெண்மணியோ, ‘வடை எல்லாம் கிடையாது. பழைய சோறுதான் இருக்கு’ என்று கொண்டுவந்து போட்டாராம். கோரக்கர், வடைதான் வேண்டும் என அடம் பிடிக்க, ‘நான் வடை கொடுத்தால் எனக்கு நீ என்ன தருவாய்?’ என்று பெண்மணி கேட்க, ‘வடைக்காக என் இரண்டு கண்களையும் தருகிறேன்!’ என்று தனது கண்களை பிடுங்கி

கொடுத்தாராம். மிரண்டுபோன பெண்மணி, உடனடியாக வடைகளைச் சுட்டு கோரக்கரிடம் கொடுத்து அனுப்பினாராம்.

வடைகளை கொண்டுபோய் தனது குருநாதரிடம் கொடுத்தார். உடனே அவர், கண்கள் இல்லாத கோரக்கரின் குரு பக்தியை மெச்சி, உடனடியாக அவருக்கு கண்களை கொடுத்தாராம். கோரக்கரின் குரு பக்திக்கு இந்தக் கதையை உதாரணமாக சொல்வார்கள்.

'கோபம், துக்கம், சந்தோஷம் ஆகிய மூன்றையும் துறந்தவன்தான் சித்தனாக முடியும்!' என்ற கருத்தை தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர் கோரக்கர். சொன்னபடியே வாழ்ந்தும் காட்டினார்.

புதுச்சேரி அருகில் உள்ள கோர்க்காடு என்ற இடத்தில் சித்தியடைந்ததாக ஒரு சிலரும், கோவை அருகே உள்ள பேரூரில் சித்தியடைந்ததாக இன்னும் சிலரும் குறிப்பிடுகிறார்கள்.

கோரக்கர் எழுதிய மருத்துவக் குறிப்பு ஓலைச்சுவடிகளை அழிந்துபோகாதபடி பாதுகாத்து, 'கோரக்கர் குண்டம்' என்ற இடத்தில் புதைத்து வைத்துள்ளனர். கோரக்கர் குண்டம் எங்கே இருக்கிறது என்பதை இதுவரை யாரும் கண்டுபிடிக்கவில்லை.

இப்படித்தான் வாழ வேண்டும்..

சித்தர்கள், காரணம் இல்லாமல் எதையும் சொல்லக்கூடியர்கள் அல்ல. அவர்கள் சொல்லும் ஒவ்வொரு தத்துவமும் அனுபவத்தால் உணர்ந்து சொல்லப்பட்டவை. கோரக்கர் சொன்ன வாழ்க்கை தத்துவங்கள்கூட அப்படிதான்!

'தன்னைவிட வயது மூத்த பெண்களோடு தூங்குவதோ உறவு கொள்வதோ கூடாது. பகலில் தூங்குவதையும் உறவு கொள்வதையும் தவிர்க்க வேண்டும். மாதத்துக்கு இரு முறை உறவு கொண்டால் உடலும் மனமும் புத்துணர்ச்சியாக இருக்கும். மித மிஞ்சிய உடல் உறவு உடலுக்கு நல்லது அல்ல. பேராசையையும் பெண் ஆசையையும் அடக்கி ஆள கற்றுக்கொள்ள வேண்டும்.



கோரக்கர் குகைக்குள்...

சாப்பிட்டதும் உறவு கொள்ளுதல் நல்லதல்ல. இரவு சாப்பிட்டு முடித்ததும் சற்று தூரம் நடக்க வேண்டும். பெண்கள், இறைவனுக்கு சமமானவர்கள். அவர்களை இழிப்பதும் அவதூறாக பேசுவதும் பெருங்குற்றம். இதை செய்வபனுக்கு தீர்க்க முடியாத நோய்கள் வரும்' என்று எச்சரிக்கிறார்.

மேலும், 'உங்கள் உடல் எப்போது வேண்டுமானாலும் சாம்பலாகலாம். நீ உயிர் வாழும் காலத்திலாவது பிற உயிர்களுக்கு இன்பத்தை கொடுக்க கற்றுக்கொள். உன்னால் மற்றவர்கள் சந்தோஷப்படுவதை தூரத்தில் இருந்து பார். அதைவிட இந்த உலகத்தில் உனக்கு வேறு பெரிய சந்தோஷம் எதுவும் கிடைக்காது' என்று அறிவுறுத்துகிறார்.

# 13

# அகத்திய சித்தர்

தமிழகத்தில் தோன்றிய சித்தர்களில் முதன்மையானவர் அகத்திய சித்தர்தான். மிகவும் குள்ளமான உருவத்தைக் கொண்டவர். மனிதர்களின் மனதை படிப்பதில் வித்தகர்.

'நீ நினைத்த நேரத்தில்.. நினைத்த இடத்தில் உனக்கு நான் காட்சி தருவேன்' என்று சிவபெருமானே அகத்தியருக்கு உறுதி கொடுத்திருந்தாராம். எந்த ஊருக்கு போகிறாரோ அந்த ஊரை சொந்த ஊராக்கி கொள்ளக்கூடியவர். கோபக்கார முனிவர் என்றுகூட அகத்தியரை சொல்வார்கள். அவர் சொல்வது நடக்கவில்லை என்றால் அகத்தியருக்கு கோபம் வந்துவிடுமாம். சிவபெருமானிடமே பல முறை அகத்தியர் கோபம்கொண்டதாக சொல்வார்கள்.

கொல்லிமலையில் ஆகாய கங்கை நீர்வீழ்ச்சிக்கு செல்லும் படிகளில் பாதி தூரம் இறங்கும்போது இடையில் ஒரு வழி பிரிகிறது. அதில் சிறிது தூரம் காட்டுக்குள் சென்றால், அகத்தியர் தவம் இருந்ததாக சொல்லப்படும் பாறையும், அவர் தங்கி இருந்த குகையும் இருக்கிறது.

ஒரு விஷயம் மட்டும் எனக்கு புரியவில்லை. ஒவ்வொரு சித்தர்களும் தங்கியதாக சொல்லப்படும் குகைகள் எல்லாமே மனிதன் தங்குவதற்கு ஏற்ப அழகாக வடிவமைக்கப் பட்டுள்ளது. இவை, இயற்கையாகவே உருவானதா? சித்தர்களால் உருவாக்கப்பட்டதா என்பதற்கு எந்தத் தகவல்களும் இல்லை.

கொல்லிமலை மக்களுக்கு பல தருணங்களில் மருத்துவராக சேவை புரிந்திருக்கிறார், அகத்தியர். சித்த மருத்துவத்தில் அகத்தியரின் கண்டுபிடிப்புகள் ஏராளம். உடம்பில் ஓடும் நரம்புகளை பிடித்துப் பார்த்தே என்ன பிரச்னை என்பதை கண்டுபிடிக்கும் சக்தி மிக்கவர். மனித மனத்துள் ஏற்படும் பதினெட்டு வகையான நோய்களுக்கான மருந்துகளை, அகத்தியர் தனது குறிப்பில் தெளிவாக எழுதி இருக்கிறார்.

'ஒரு மனிதனுக்கு உடலில் ஏற்படும் வியாதிகளைவிட மனதில் ஏற்படும் வியாதிகள்தான் கொடுமையானது. மனதில் ஏற்படும் வியாதியை கண்டுபிடித்து தீர்த்துவிட்டால், உடம்பில் ஏற்பட்ட வியாதி தானாக பறந்துவிடும்' என்பது அகத்தியர் வாக்கு. அதேபோல, பிறந்து பத்து மாதம் வரை ஆன குழந்தைகளுக்கு வரும் பிரச்னைகள், தோஷங்கள் பற்றியும் அகத்தியரின் ஓலைச்சுவடிகளில் இருக்கிறது.

நினைத்ததை எல்லாம் சாதிக்கக்கூடிய ஆற்றல் பெற்றவர் அகத்திய சித்தர் என்பதற்கு, ஒரு கதை சொல்வார்கள்.

கொல்லிப்பாவை கோயிலுக்கு பக்கத்தில் எப்போதும் ஒரு பெண் சுற்றிக்கொண்டு இருப்பாள். அவளுக்கு, சொந்தம் என்று யாரும் கிடையாது. கோயிலுக்கு வருபவர்கள் கொடுக்கும் உணவை சாப்பிட்டுவிட்டு அங்கேயே தூங்குவாள். பக்கத்தில் உள்ள அருவியில் குளிப்பாள். அம்மனை வணங்குவாள். இதை தாண்டி எதையும் அவள் செய்தது கிடையாது.

ஒரு நாள், கொல்லிப்பாவை கோயிலுக்கு அகத்திய சித்தர் வந்தார். கோயில் வாசலில் நீண்ட நேரம் உட்கார்ந்து இருந்தார். எப்போதும் கோயில் வாசலில் நின்றுகொண்டு இருக்கும் அந்தப் பெண், அன்று தனக்கு கிடைத்த உணவை சாப்பிடாமல் வைத்திருந்தாள். கோயிலில் கூட்டம் குறைந்த பிறகு, தனக்கு கிடைத்த சாப்பாட்டை எடுத்துக்கொண்டு அகத்திய சித்தரிடம் சென்றாள்.

"வந்ததுல இருந்து நீங்க எதுவுமே சாப்பிடாம உட்கார்ந்து இருக்கீங்க. நான் பார்த்துட்டுதான் இருந்தேன். இதை சாப்பிடுங்க சாமி.." என்று தனது சாப்பாட்டை அகத்திய சித்தருக்கு கொடுத்தாள். சற்று நேரம் அந்தப் பெண்ணை உற்றுப் பார்த்த அகத்திய சித்தர், கல கலவென சிரித்தார். அந்தப் பெண் ஒன்றும் புரியாமல், "எதற்காக சாமி சிரிக்கிறீங்க?" என்று கேட்டாள்.

"அம்மையே! எப்போதும் உலகுக்கே படியளக்கக்கூடியவள் நீ. இன்று அடியேனுக்கு படியளந்து இருக்கிறாய் தாயே! நீ தந்த உணவின் மனம் என்னை சாப்பிட தூண்டுகிறது. ஆனால், உனக்கு சாப்பிட கொடுத்தவர்கள் எல்லாம் நல்ல எண்ணத்தோடுதான் உணவை கொடுத்தார்களா? அப்படி அவர்கள் நல்ல எண்ணத்தோடு கொடுத்திருந்தால், உன் முகத்தில் நான் சிரிப்பைப் பார்த்திருப்பேன். ஆனால் நீயோ, வாடிய முகத்தோடு இருக்கிறாய். உன் மனதில் ஏதோ கவலை இருக்கிறது. என்னவென்று சொல்.." என்று கேட்டார் அகத்திய

சித்தர்.

"சாமி.. நான் யாருகிட்டயும் இதுவரைக்கும் எதுவும் கேட்டது இல்ல. உங்களை பார்த்தா எனக்கு அந்த ஈசனையே பார்க்கிற மாதிரி இருக்குது. எனக்கு ஓர் அம்மா தினமும் சோறு போடுவாங்க. 'எதுக்கும்மா எனக்கு சோறு போடுறீங்கன்னு?' கேட்டேன். அந்தம்மாவுக்கு கல்யாணமாகி பல வருடங்கள் ஆகியும் இதுவரைக்கும் குழந்தை பாக்கியம் இல்லையாம். அது நிவர்த்தி ஆக வேண்டும் என்றால், மூன்று மண்டலம் ஏழைகளுக்கு அன்னதானம் செய்ய சொல்லி சொன்னார்களாம். அதற்காகத்தான் எனக்கு சோறு போடுவதாக சொன்னார். இன்றோடு மூன்று மண்டலம் முடியபோகிறது. அந்தம்மா வயிற்றில் குழந்தை உண்டாக வேண்டும். இல்லையென்றால், இத்தனை நாளாக அந்தம்மா கையில் சோறு வாங்கி சாப்பிட்டதற்கே அர்த்தம் இல்லாமல் போய்விடும்" என்று கண் கலங்கினாள்.

சற்று நேரம் கண்களை மூடி யோசித்த அகத்திய சித்தர், அந்த பெண் கொண்டுவந்த சாப்பாட்டை ஒரு கவளம் எடுத்து சாப்பிட்டார். மீதி சாப்பாட்டை அந்தப் பெண்ணிடம் கொடுத்து சாப்பிட சொன்னார். "என்ன சாமி நான் எவ்வளவு கவலையோட சொல்லிட்டு இருக்கேன். நீங்க என்னை சாப்பிட சொல்றீங்களே.." என்று வேதனைப்பட்டாள் அந்தப் பெண்.

"இதை நீ சாப்பிடு.. நாளை காலை நடப்பதை பொறுத்து இருந்து பார்" என்று சொல்லிவிட்டு கிளம்பினார் அகத்திய சித்தர். அப்படியே அந்தப் பெண்ணும் சாப்பிட்டுவிட்டு கவலையோடு தூங்கிவிட்டாள். மறுநாள் காலையில், சாப்பாடு போடும் பெண்மணி மிகுந்த உற்சாகத்தோடு கையில் தூக்க முடியாத அளவுக்கு சாப்பாடு, பழங்கள், பலகாரங்கள் கொண்டு வந்தார். "நான் கர்ப்பம் தரிச்சிருக்கேம்மா.. ரொம்ப சந்தோஷமா இருக்கேன். சாப்பிடு.." என்று சொல்லி அந்தப் பெண்ணுக்கு சாதம் ஊட்டிவிட்டாள்.



அகத்திய சித்தர் குகை

வந்த முனிவர் யார் என்று, அந்தப் பெண்ணுக்குத் தெரியவில்லை. வந்தது ஈசனாகத்தான் இருக்கும் என அகத்திய சித்தரை மனம் உருகி வேண்டினாள்.

நல்லதொரு வாழ்க்கைக்கு நல்லதொரு வழிகாட்டி!

அகத்திய சித்தர் சொன்ன வார்த்தைகள் ஒவ்வொன்றும், சிவபெருமானின் வாயில் இருந்து வந்த வாக்காகவே மக்கள் நம்பினார்கள். பரம்பொருளான இறைவன், நம் ஒவ்வொருவரின் இதயத்திலும் ஆத்மாவாக நிரம்பி இருக்கிறான். நீ நல்லது செய்தாலும் சரி.. தவறு செய்தாலும் சரி.. உனக்குள் இருக்கும் இறைவன் அதை பார்த்துக்கொண்டு இருக்கிறான் என்பதை உணர்ந்தாலே போதும். கெட்டது எதுவும் நடக்காது; யாருக்கும் தெரியாது என நீ செய்யும் தவறுகள் அனைத்துமே, உனக்குள் இருக்கும் இறைவனுக்கு தெரியும். சாட்சி இல்லாமல் செய்யும் தவறுகளுக்கும் தண்டனை உண்டு.

‘நீ எதற்காக பிறந்தாய் என்பதை உன் மனதுக்குள்ளேயே தேடிப்பார். ஏனென்றால், நீ எடுத்திருப்பது மறுபிறவி. சாதாரணமாக, ஒரு

வாழ்க்கையை வாழ யாரும் மறுபிறவி எடுக்கமாட்டார்கள். பேரும் புகழும் உன்னை தேடி வர வேண்டும். நீ அவற்றைத் தேடிப் போகாதே! இனிப்பு, கசப்பு, இன்பம், துன்பம் எல்லாம் கலந்ததுதான் வாழ்க்கை. இன்பத்தை மட்டுமே தேடிக்கொண்டு இருந்தால் அது வாழ்க்கையாக இருக்காது.

ஒழுக்கம் என்பதை குழந்தைப் பருவத்திலேயே கற்றுக்கொடுக்க வேண்டும். இது சரி.. இது தவறு எனச் சுட்டிக்காட்டி வளர்க்க வேண்டும். பொய் சொல்லக்கூடாது. ‘பொய் சொன்னவர்களுக்கு போஜனம் கிடைக்காது’ என்பது குழந்தைகள் மனதில் பதிய வேண்டும்.

அளவுக்கு மீறிய பொருட்களை கையில் வைத்துக்கொண்டு அதில் சிலவற்றை பிறருக்கு கொடுப்பது தானம் ஆகாது. நீ சாப்பிட வாய்க்கு எடுத்துக்கொண்டு போகும்போது அருகில் நிற்பவன், ‘அதை எனக்கு கொடு’ என்று கேட்டால், அதில் பாதியைக் கேட்டவனுக்கு கொடுப்பதே சிறந்த தானம்.

ஒரு விஷயத்தில் தான் கெட்டது தெரிந்த பின்னும், அதே விஷயத்தில் மீண்டும் கவனத்தை செலுத்துவதோடு, உடன் இருப்பவர்களையும் சேர்த்துக் கெடுப்பவன், ஞானியாக முடியாது.’

இப்படி அகத்திய சித்தரின் வாயிலிருந்து வந்த வாக்கு ஒவ்வொன்றும் மனிதனின் வாழ்க்கையோடு கலந்துள்ளன. இவையே நல்ல வாழ்க்கைக்கான வழிகாட்டி.

# 14

# மச்சமுனி சித்தர்

மச்சம் என்பதற்கு, மீன் என்பது பொருளாம். இந்தச் சித்தர், மீனவர்களின் குலத்தில் தோன்றியதால் 'மச்சமுனி சித்தர்' என்று அழைக்கப்பட்டார். மக்களுக்குப் பயன்படக்கூடிய மருத்துவம், ஞானம்... என பல நூல்களை தந்த சித்தர் இவர், அகத்தியர் காலத்தில் வாழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது.

கொல்லிமலை அறப்பளீஸ்வரர், மீன் உருவத்தில் அருகே உள்ள ஆற்றில் இருக்கிறார் என்பது ஐதீகம். மச்சமுனிக்கும் மீனுக்கும் தொடர்பு இருப்பதால், இவரையும் கடவுளாகத்தான் மக்கள் மதித்தார்கள். கொல்லிமலையில் வந்து தங்கி, அறப்பளீஸ்வரரை தினமும் வணங்கி வந்தார் மச்சமுனி சித்தர்.

ஒரு நாட்டின் மன்னன் எப்படி இருக்க வேண்டும், பெண்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு மச்சமுனி சித்தர் கொடுத்திருக்கும் விளக்கங்களை பார்த்தால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

ஒரு நாட்டின் மன்னன், சூரியனுக்கு முன்பாக விழிக்க வேண்டும். காலை கடன்களை முடிக்க வேண்டும். குளித்து முடித்ததும் கடவுளை வணங்கி விட்டு, உணவு உட்கொண்டதும் சபை மண்டபத்துக்கு வந்து சேர வேண்டும். அங்கிருப்பவர்கள் கொடுக்கும் மரியாதையை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு பதில் மரியாதை செய்ய வேண்டும். ஆகம சாஸ்திரங்களையும், நீதி விதிகளையும் அவையில் இருக்கும் பெரியோர்களிடமும், சான்றோர்களிடமும் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். உயிர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும். தர்ம காரியங்களில் ஈடுபட்டு நல்லாட்சி வழங்குவதே ஒரு மன்னனுக்கு அழகு. அப்படி செய்யும் மன்னனைத்தான் மக்கள் போற்றுவார்கள்.



சித்தர்கள் வாழ்ந்த குகைகளைத் தேடி...

எதிரிக்கு எந்தச் சூழ்நிலையிலும் இடம் கொடுக்கக்கூடாது. எதிர்த்து வந்தவனை கண்டு புறமுதுகு காட்டி ஓடுதல் கூடாது. சான்றோர்களிடமும் பெரியோர்களிடமும் கலந்து ஆலோசிக்காமல் எதையும் செய்யக் கூடாது. நாட்டில் யார் துன்பப்பட்டாலும் அதைக் கண்டு வருந்துதல் வேண்டும். அந்தத் துன்பத்தை போக்க முயற்சிக்க வேண்டும். எல்லோருக்கும் கோபம் வருவது இயல்பு. ஆனால், மன்னன் கோபம் கொள்ளக் கூடாது. வரும் கோபத்தை அடக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

இரவு நேரத்தில் வெளியே செல்லும்போது துணைக்கு யாரையாவது அழைத்துச் செல்ல வேண்டும். அதிக நேரம் விழித்திருக்கவும் கூடாது. அதிகமாக வருந்தவும் கூடாது. வழி போக்கர்களின் களைப்பு தீர வழியெங்கும் மரங்களை வைக்க வேண்டும். தர்ம வைத்தியசாலைகளை தொடங்கி மக்களின் பிணி போக்க வேண்டும். இப்படியெல்லாம் ஒரு மன்னன் செய்தால் அவன்தான் மன்னர்களுக்கெல்லாம் மன்னன் என்று ஏற்றுக் கொள்ளப்படுவான்.



மச்சமுனி சித்தர் தங்கிய கோயில்

மன்னிக்கும் குணம் மச்சமுனி சித்தருக்கு நிறைய உண்டு. ‘எவன் ஒருவன், தான் செய்த தவறை உணர்ந்து வருந்துகிறானோ அப்போதே அவனை மன்னிக்க வேண்டும்’ என்று சொல்வார். அதற்கு உதாரணமாக ஒரு கதையையும் சொல்கிறார்கள் கொல்லிமலைவாசிகள்.

மச்சமுனி சித்தர், கொல்லிமலை அடிவாரத்தில் உள்ள ஒரு கிராமத்துக்குப் போனார். அந்தக் கிராமத்தில் உள்ள ஒவ்வொருவரும் அவரை வரவேற்று, தங்களின் வீட்டுக்கு வரும்படி உபசரித்தார்கள். ஆனால் மச்சமுனி சித்தரோ, யார் வீட்டிலும் எதுவும் சாப்பிடவில்லை.

கடைசியாக ஒரு வீட்டுக்குப் போனார். அந்த வீட்டுக்காரர் பல பாவங்களை செய்தவர். ஊருக்குள் எவருமே அந்த வீட்டுக்காரரோடு பேச மாட்டார்கள். கடுமையான நோய்வாய்ப்பட்டுப் படுத்தப் படுக்கையாக இருந்தார். அவருக்கு அருகில் அவரது மனைவி உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தார்.

மச்சமுனி சித்தரைக் கண்ட அந்தப் பெண், "யார் நீங்கள்..?" என்று கேட்டாள்.

"நான் சாதாரண ஒரு மனிதனம்மா.. உன் கணவனுக்கு என்ன பிரச்னை?" என்று கேட்டார். "எங்க வீட்டுக்காரரும் நானும் செய்யாத தப்பு இல்ல. பணம் இருக்கும் அகந்தையில ஊர்க்காரங்க அத்தனை பேரையும் கொடுமைப்படுத்தினோம். அதுக்கு ஆண்டவன்

கொடுத்திருக்கும் பரிசுதான் இந்த வியாதி. இப்போ அவரால நிற்கவும் முடியல, நடக்கவும் முடியல.." என்று சொல்லி அழுதாள்.

"செஞ்ச தவறுகளை இப்போதாவது உங்களால் உணர முடிகிறதா?" என்று கேட்டார் மச்சமுனி சித்தர்.

"நான் மட்டும் இல்லைங்க. என் வீட்டுக்காராரும் நல்லாவே உணர்ந்துட்டாரு. பிறரைத் துன்பப்படுத்திச் செய்யும் எந்த காரியமும் உருப்படாதுன்னு நாங்க நல்லாவே உணர்ந்துட்டோம். ஆனாலும், இந்த ஊருல யாரும் எங்ககிட்ட பேசுறது கிடையாது. நாளைக்கு நாங்க செத்தால், எங்களை தூக்கி அடக்கம் பண்ணகூட நாலு பேரு வரமாட்டாங்க. அந்த அளவுக்கு எங்க மேல வெறுப்பா இருக்காங்க.." என்று சொல்லி அழுதாள்.

அவளின் கணவனுக்கோ பேசவே வாய் வரவில்லை. கண்களில் நீர் மட்டும் வழிந்துகொண்டிருந்தது.

"எப்போ நீங்க இரண்டு பேரும் செய்த தவறுகளை உணர்ந்துட்டீங்களோ, அப்போதே நீங்கள் மன்னிக்கப்பட்டீர்கள். இந்த விபூதியை, தொடர்ந்து ஒரு வாரத்துக்கு உன் கணவனுக்கு உடல் முழுவதும் பூசிவிடு. இந்தப் பச்சிலையை தினமும் மூன்று வேளை அவனுக்கு கொடு. ஒரு வாரத்தில் பூரண குணமாகி விடுவான். உங்கள் ஊரில் உள்ள ஒவ்வொரு வீடாக நீங்கள் இரண்டு பேரும் போய் மன்னிப்புக் கேளுங்கள். அவர்கள் உங்களை மன்னிப்பார்கள். அதற்குப் பிறகு கொல்லிமலைக்கு வாருங்கள்.. நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை நான் சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டு கிளம்பினார் மச்சமுனி சித்தர்.

சொன்னபடியே எல்லாம் நடந்தது. ஊர்க்காரர்களும் அவர்களை மன்னித்து ஏற்றுக்கொண்டார்கள். பூரண குணமடைந்த பிறகு, கணவன்-மனைவி இருவரும் கொல்லிமலைக்குப் போனார்கள். அங்கே மச்சமுனி சித்தரை போய்ப் பார்த்தார்கள்.

''இது, உங்களுக்கு கிடைத்திருக்கும் இன்னொரு பிறவி. ஒரு பிறவியில் நீங்கள் செய்த பாவங்கள் ஏராளம். இந்தப் பிறவியிலாவது செய்த பாவங்களுக்கு பரிகாரத்தை தேடுங்கள். பசியில் வாடும் ஏழைகளுக்கு அன்னமிடுங்கள். வாரம் தோறும் கொல்லிமலையில் உள்ள அறப்பளீஸ்வரர் கோயிலுக்கு வந்து ஈசனை வழிபடுங்கள். அங்குள்ள மீனுக்கு உணவிடுங்கள். உங்கள் பாவங்கள் நீங்கும்..'' என்று

ஆசிர்வதித்து அனுப்பினார் மச்சமுனி சித்தர்.

## பெண்கள் இப்படித்தான் இருக்க வேண்டும்..!

மன்னனுக்கு அறிவுரை சொன்ன மச்சமுனி சித்தர், பெண்களுக்கு சொன்ன அறிவுரைகள் அத்தனையும் இந்தக் காலத்துப் பெண்கள் ஒவ்வொருவருக்கும் பொருந்தும்.

பெண்களை, குறைவானவர்களாகவோ தாழ்வானவர்களாகவோ யாரும் நினைப்பதில்லை. பெண்களை கடவுளாக வணங்குகிறோம். நாட்டில் உள்ள புண்ணிய நதிகளுக்கெல்லாம் பெண்களின் நாமகரணம்தான் சூட்டப்பட்டிருக்கிறது. பெண்களுக்கான ‘கற்பு’ என்பது, கடவுளுக்கு நிகரானது. குழந்தைப் பருவத்தில் பெற்றோராலும், இளமைப் பருவத்தில் கணவனாலும், மூப்படைந்த பருவத்தில் பெற்ற மகனாலும் காக்கப்பட வேண்டியவர்கள் பெண்கள். திருமணமான பெண்கள் காலையில் தூங்கி எழுந்ததும், கணவனின் கால்களைத் தொட்டு வணங்க வேண்டும். தொழில் நிமிர்த்தமாக கணவன் வெளியில் போய் வீடு திரும்பும்போது பெண்கள் தலைவிரி கோலமாக இருக்கக் கூடாது. சிரித்த முகத்தோடு வரவேற்று கணவனின் பசி போக்க வேண்டும்.

கணுக்கால் தெரிய உடை உடுத்துதல் கூடாது. உறக்கச் சிரிப்பதும், வேசிகள் போல அளவுக்கு அதிகமான அலங்காரமும் கூடாது. கணவனுக்கு கோபம் வந்தாலும் மனைவிக் கோபப்படாமல் சிரித்த முகத்தோடு இருந்தால், கணவனின் கோபம் குறைந்துவிடும். கணவனிடம் குறைகள் இருந்தாலும் அதை பிறந்த வீட்டில் சொல்வது அழகு அல்ல. கணவனை, மற்றவர்கள் முன்பு தரக்குறைவாக பேசக்கூடாது.

திருமாங்கல்யத்தை எந்தச் சூழ்நிலையிலும் கழட்டி வைக்கக் கூடாது. மனதால்கூட பிற ஆடவனை எண்ணுதல் கூடாது. இப்படிப்பட்ட பெண்கள் இருக்கும் வீட்டில்தான் லட்சுமி குடி புகுவாள். வரையறைகளை மீறும் பெண்கள், இறந்தபிறகு நரகத்துக்கு போவார்கள். மேலும், அடுத்தப் பிறவியில் நாய், எலி, ஓணான் போன்றவைகளாக பிறந்து, மனிதர்களால் துன்புறுத்தப் படுவார்கள்.

கொல்லிமலையில் உள்ள பெண்கள், மச்சமுனி சித்தர் சொன்ன அறிவுரைகளை இன்றளவும் தங்கள் வீட்டுப் பெண் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுத்து வருகிறார்கள்.

# 15

# நமசிவாய சித்தர்

கொல்லிமலை மக்களின் துயரங்களை நீக்க வந்தவர் நமசிவாய சித்தர். சாந்தமான முகத்துடன், எதற்கும் கோபத்தை காட்டாமல் சிரித்தபடியே இருப்பார்.

ஒரு நாள், கொல்லிமலையில் உள்ள அறப்பளீஸ் வரருக்கு பூஜைகளை முடித்துவிட்டு, காட்டுக்குள் இருந்த தனது இருப்பிடத்துக்கு நடந்துகொண்டு இருந்தார் நமசிவாய சித்தர். வழியில், ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் அழுதுகொண்டிருந்தான். "எதற்கு அழுகிறாய்?" என நமசிவாய சித்தர் கேட்டார். "நான் மேய்க்கிறதுக்காக ஓட்டிட்டுவந்த ஆட்டு மந்தையில இருந்த ஆட்டுக்குட்டி ஒன்றை பாம்பு கடிச்சிடுச்சி. அதனால அது செத்து போச்சி. சாய்ந்திரத்துக்குள்ள ஆட்டு மந்தையைப் பட்டிக்கு ஓட்டிட்டு போகலன்னா ஆட்டுக்கார முதலாளி என்னையும் எங்கஅம்மாவையும் சவுக்கால அடிப்பாரு.." என்று சொல்லி தேம்பித் தேம்பி அழுதான்.

'சரி.. நீ அழாதே..' என்று சொல்லிவிட்டு கண்களை மூடி பிரார்த்தனை செய்து, இறந்துபோன ஆட்டுக் குட்டியை உயிர்ப்பித்தார். புதரில் இறந்துகிடந்த ஆட்டுக்குட்டி, துள்ளிக் குதித்து ஓடிவந்தது. இதை கண்ட சிறுவனின் முகத்தில், அப்படி ஒரு சந்தோஷம். இந்த விஷயத்தை ஊரில் உள்ளவர்களிடமெல்லாம் சிறுவன் போய் சொல்ல, அனைவருக்கும் ஆச்சர்யம்.

கொல்லிமலை கிராமத்து மக்கள் பலரும், நமசிவாய சித்தரை தேடிக் காட்டுக்குள் அலைந்தனர். பாறை இடுக்கு ஒன்றில்கண்களை மூடி தவத்தில் ஆழ்ந்திருந்தார் நமசிவாய சித்தர். தவத்தை முடித்துக்கொண்டு, தன்னைத் தேடி வந்த மக்களுக்கு ஆசி வழங்கியபடி, "உங்களால் சமாளிக்க முடியாத துன்பங்களோ.. நீங்கள் எதிர்பார்க்காத தொல்லைகளோ வரும்போது என்னை தேடி வாருங்கள். அதுவரை உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள். என் வேலையை நான் பார்க்கிறேன்" என்று கூறி, அனைவருக்கும் விபூதி கொடுத்து அனுப்பி

வைத்தார்.

ஒரு முறை, அண்ணாமலையாரை தரிசிப்பதற்காக திருவண்ணா மலைக்கு போயிருந்தார் நமசிவாய சித்தர். சுவாமியை தரிசனம் செய்துவிட்டு கொல்லிமலைக்கு திரும்பும் வழியில், ஏழை ஒருவரின் வீட்டில் திருமணம் நடந்துகொண்டிருந்தது. அந்த வீட்டுக்குள் நுழைந்த நமசிவாயர், அங்கிருந்த அனைவருக்கும் விபூதி கொடுத்துவிட்டு, திருமணம் செய்துகொள்ளும் மணமக்களை ஆசிர்வதித்துவிட்டுக் கிளம்பினார்.

அவர் கிளம்பிய சில நிமிடங்களில் திருமண வீடு தீப்பிடித்து எரிந்தது. அலறல் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்த நமசிவாயர், மீண்டும் அந்த வீட்டுக்கு வந்தார். 'நமசிவாயர்தான் விபூதியின் மூலம் ஏதோ மாயம் செய்து வீட்டை எரிய வைத்துவிட்டார்' என நினைத்த மக்கள், அவரை கடுமையான வார்த்தைகளால் திட்டினார்கள். எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்ட நமசிவாயர், தனது தவவலிமையால் எரிந்துபோன வீட்டை புதுப்பித்துக் கொடுத்தார். அங்கிருந்தவர்கள் அனைவரும் அவரிடம் மன்னிப்பு கேட்டார்கள். அப்போதும் அவர்களுக்கு ஆசிர்வாதம் வழங்கிவிட்டு, அங்கிருந்து புறப்பட்டார்.

எப்படி இருக்கணும்?

இவர் கற்றுக்கொடுத்த வாழ்க்கைப் பாடத்தை, கொல்லிமலை மக்கள் இன்றுவரை கடைப்பிடித்து வருகிறார்கள். 'அவசரத்தில் எடுக்கும் எந்த முடிவும் சரியாக இருக்காது. கோபம், அவசரம் இரண்டையும் நீக்கிவிட்டு நிதானமாக வாழ கற்றுக்கொள். நிதானத்தால் எதையும் சாதிக்கலாம். யாரையும் கெடுக்க நினைக்காதே! இவற்றை உன் வாழ்க்கையில் கடைப்பிடித்தால், நீ ஞானியாக மாறவில்லை என்றாலும் மனிதனாக மாறுவாய்' என்பது நமசிவாயர் வாக்கு.

# 16

# அநாதி சித்தர்

அநாதி சித்தரை பற்றிய கதைகள், கொல்லிமலை மக்களால் ஏராளமாக சொல்லப்பட்டு வருகிறது. அநாதி சித்தரை, சிவபெருமானின் இன்னோர் உருவமாகத்தான் மக்கள் பார்க்கிறார்கள். கையில் ஒரு பால மரத்தின் குச்சி. இடுப்பில் அழுக்குப் படிந்த ஒரு வேட்டி. வெள்ளையும் கருப்புமாக வளர்ந்த தாடி. குள்ளமான உருவம். இவையே அநாதி சித்தரின் அடையாளமாக சொல்கிறார்கள்.

கொல்லிமலையில் பெரும்பாலானோர் மாடுகள் வளர்ப்பார்கள். மாடு மேய்க்கும் பெண்மணி ஒருவர், தினமும் தனது பசுமாட்டை மேய்ச்சலுக்கு விடுவதற்காக மலைப்பகுதிக்கு ஓட்டிச் செல்வார். அங்கேயே பால் கறந்து, வீட்டுக்குக் கொண்டு வருவார்.

அப்படி அவள் ஒரு நாள் வரும்போது, வழியில் எதிர்பட்டார் அநாதி சித்தர். அவர், "பெண்ணே! எனக்கு தாகமாக இருக்கிறது; குடிப்பதற்கு தண்ணீர் கிடைக்குமா?" எனக் கேட்டார். அந்தப் பெண்ணோ, "சுவாமி.. என்னிடம் தண்ணீர் இல்லை. பசும்பால்தான் இருக்கிறது குடியுங்கள்" என்று சொல்லி, கறந்த பாலை சித்தருக்கு கொடுத்தாள். சித்தரும் பாலைக் குடித்து இளைப்பாறினார். அந்தப் பெண்மணி, அன்றுமுதல் தினமும் வழியில் சந்திக்கும் அநாதி சித்தருக்குக் கறந்த பசும்பாலைக் கொடுத்து, பசி தீர்த்து வந்தாள்.

வீட்டுக்குக் கொண்டுவரும் பாலின் அளவு குறைகிறதே என சந்தேகப்பட்ட அந்தப் பெண்ணின் கணவன், ஒரு நாள் மனைவியைப் பின்தொடர்ந்து சென்றான். அங்கே, பசுமாட்டுப் பாலை சித்தருக்குக் கொடுப்பதை கண்டு அதிர்ச்சியானார். தனது மனைவியை அடித்து துன்புறுத்தினார். இதைக் கண்டு கோபமடைந்த சித்தர், "பசியில் வாடி தவித்தவரின் தாகம் தீர்த்தப் பெண்ணையா சந்தேகப்படுகிறாய்? உனக்கு மன்னிப்பே கிடையாது" என்று அவருடைய கைகளை செயலிழக்க வைத்தார். தன் தவற்றை உணர்ந்த பெண்ணின் கணவன், சித்தரிடம் மன்னிப்புக் கேட்டான். தாகம் தீர்த்தப் பெண்ணும், கணவருக்காக

சித்தரிடம் மன்னிப்புக் கேட்டாள். சித்தரும் மனம் இரங்கி, அவரை பழையபடி மாற்றினார். அத்துடன், இரண்டு பசு மாடுகளையும் அந்தப் பெண்ணுக்குக் கொடுத்து ஆசிர்வாதம் செய்துவிட்டு மறைந்தார் அநாதி சித்தர்.

அநாதி சித்தராக அவதாரம் எடுத்துக் கொல்லிமலைக்கு வந்தது சிவபெருமான்தான் என்று, அந்தப் பெண்ணும் அவளது கணவனும் நம்பினார்கள். அநாதி சித்தர் இருந்த இடத்தில் தினமும் பால் ஊற்றி அபிஷேகம் செய்து வந்தனர். அதன்பிறகு, கொல்லிமலையில் பசு மாடு வைத்திருக்கும் பலரும் அநாதி சித்தர் இருந்த இடத்தில் பால் ஊற்றுவதை வழக்கமாக வைத்துக்கொண்டனர்.

அநாதி சித்தர் எழுதி வைத்ததாக எந்த ஆவணங்களும் கிடைக்கப் பெறவில்லை. ஆனால், அவர் சொல்லிவிட்டுப்போன நெறிகளாக சில விஷயங்கள் சொல்லப்படுகிறது. கணவன் மனைவிக்குள்ளான குடும்ப வாழ்க்கைப் பற்றிய விஷயங்களைத்தான் அதிகம் கூறியுள்ளார் அநாதி சித்தர். அதைப் பற்றி பார்ப்போம்.

‘மனைவி என்பவள், பெற்ற அன்னைக்கு சமமானவள். மனைவியை, எந்தச் சூழ்நிலையிலும் கணவன் சந்தேகப்படக் கூடாது. சந்தேகம் என்பது, தன்னையும் தன்னை சுற்றி இருப்பவரையும் அழித்துவிடும் சக்தி கொண்டது. மனைவியை, மரியாதையோடு நடத்த வேண்டும்; கட்டாயப்படுத்தி உறவுகொள்ளக் கூடாது. மாலைப்பொழுதில் தனியாக வீட்டைவிட்டு வெளியே அனுப்பக்கூடாது. மருமகளாக வரும் பெண்ணுக்கு, இனி மாமனார்-மாமியார்தான் பெற்றோர் என்பதை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும்.

கர்ப்பிணிப் பெண்கள், மலை ஏறவோ, ஆறுகளை கடக்கவோ கூடாது. சூரியன் மறைந்ததும் வீட்டுக்குள் விளக்கு ஏற்ற வேண்டும். உண்ட உடன் உறங்குவதோ, இரவில் பெண்கள் தலை வாறவோ கூடாது’ என்று சொல்லி இருக்கிறார்.

# 17

# சட்டைமுனி சித்தர்

கொல்லிமலையில், நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சித்தர் இவர். இவரது தலைமுடி, சடைபோல நீண்டு காணப்படும். இடுப்பில் ஒரு கோவணம். சட்டை எதுவும் அணியாமல் கறுப்பு நிறத்திலான ஒரு கம்பளியைப் போத்தி இருப்பார். குளிர், வெயில் என எந்த காலத்திலும் கம்பளி அவர் உடலைவிட்டு அகலாது. அதனால்தான் அவரை ‘சட்டைமுனி சித்தர்’ என்று அழைத்தனர். இவர், கொல்லிமலையில் உள்ள ஒவ்வொரு கிராமமாக போவார். அவருக்கு எங்கே விருப்பமோ அந்த வீட்டு வாசலில் உட்கார்ந்துவிடுவார். அந்த வீட்டில் உள்ளவர்கள், அவருக்கு உணவு படைப்பார்கள். சாப்பிட்டு முடித்ததும், அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு ஆசி வழங்கிவிட்டு கிளம்பிவிடுவார்.

இவர் ஒரு வீட்டுக்கு வந்தால், அந்த வீட்டுக்கு சிவபெருமானே நேரில் வந்ததாக மக்கள் நினைத்தனர். அதனால், ‘இன்று நம்முடைய வீட்டுக்கு வரமாட்டாரா..’ என கிராமத்து மக்கள் ஏங்குவார்கள்.

இவர், ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டுமே உணவு எடுத்துக்கொள்வார்; அதிகம் பேசமாட்டார்; எந்த வீட்டிலும் தங்கமாட்டார்; சாப்பிட்டு முடித்ததும் அங்கிருந்து கிளம்பிவிடுவார். இவரிடம் எதைக் கேட்டாலும் ஒரு வார்த்தையில்தான் பதில் வரும். வெயில் காலத்தில் மரத்தடியிலும், மழைக் காலத்தில் பாறை இடுக்கிலும் தூங்குவார். பறவைகளின் சத்தத்தை வைத்தே மழை வருவதை சொல்லிவிடுவார்.



சட்டைமுனி சித்தர் தங்கிய மரக்குகை

கொல்லிமலை விவசாயிகள் சிலர் சட்டைமுனி சித்தரை சந்தித்து, ‘பருத்திக்கொட்டை விவசாயம் செய்யலாம்னு இருக்கோம். மழை வருமா? காத்து அதிகம் இருக்குமா?’ என்று கேட்பார்கள். பதில் எதுவும் சொல்லாமல் திருப்பி அனுப்பிவிடுவார். அடுத்த நாள் அந்த விவசாயிகளின் வீட்டுக்கே போய், ‘இப்போ பருத்திக் கொட்டை போடாதே. இன்னும் ரெண்டு வாரத்துல மழை கொட்டப் போகுது. போட்டதெல்லாம் வீணா போயிடும்’ என்று சொல்லிவிட்டு கிளம்பிவிடுவார். அவர் சொன்னபடியே மழை பெய்யும்.

காட்டில் உள்ள ஒவ்வொரு பறவைகளின் மொழியும் சட்டைமுனிக்கு அத்துபடி.

சில நேரங்களில், தனக்குப் போடும் உணவை ஒரு துணியில் முடிந்து எடுத்துக்கொள்வார். அதை பறவைகளுக்குக் கொடுத்துவிட்டு, அவை சாப்பிடும் அழகையே பார்த்துக்கொண்டு இருப்பார்.

கொல்லிமலையில் உள்ள ஒரு கிராமத்தில், ‘தான்’ என்ற கர்வம் பிடித்த பணக்காரர் ஒருவர் இருந்தார். அவருடைய வீட்டுக்கு மட்டும் சட்டைமுனி எப்போதும் போனது கிடையாது. அந்தப் பணக்காரன், வீட்டு தோட்டத்தில் நெல் சாகுபடி செய்திருந்தான். கதிர் தலை சாய்ந்து அறுவடைக்குத் தயாராக இருந்தது. எப்போதும் அந்தப் பணக்காரன் வீட்டுக்குப் போகாத சட்டைமுனி, அன்று அங்கே போய் நின்றார். பணக்காரனோ, "இங்கே எதுக்கு வந்திருக்க.. சோறு இல்ல போ.. போ.." என்று விரட்டினான். அதற்கு சட்டைமுனியோ, "நான் உன் வீட்டில்

விருந்து சாப்பிட வரவில்லை. உன் நிலத்தில் நெல் விளைந்திருக்கிறது. அதை உடனே அறுவடை செய்து பத்திரப்படுத்திக்கொள். இன்னும் மூன்று பொழுதில் அடைமழை வரப்போகிறது. அவ்வளவும் நாசமாகி விடும்.." என்று எச்சரித்தார்.

பணக்காரனோ, "அட முட்டாளே! இந்த வெயில் காலத்தில் மழையா? போடா.. போ.. பைத்தியக்காரா? உன்னையெல்லாம் எப்படிடா இந்த ஊர்க்காரங்க நம்பிட்டு இருக்காங்க?" என்று கேவலப்படுத்தி அனுப்பினான். சடைமுடி எதுவும் பேசாமல் திரும்பி வந்துவிட்டார். அடுத்த மூன்றாவது நாள், சட்டைமுனி சொன்னதைப் போலவே அடைமழை ஆரம்பித்தது. இரவு-பகல் நிற்காமல் மழை கொட்டி தீர்த்தது. காடு, கழனி எல்லாம் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. விளைந்திருந்த நெல் அத்தனையும் தண்ணீரில் அடித்துக்கொண்டு போனது. பெருத்த நஷ்டம் உண்டாகி, பணக்காரன் கையில் இருந்த பணம் மொத்தமும் கரைந்துபோனது. தன் தவறை உணர்ந்த பணக்காரன், சட்டைமுனியை தேடிப்போய் பார்த்து காலில் விழுந்து கதறி அழுதான்.

"எப்போ நீ உன் தவறை உணர்ந்தாயோ.. அப்போதே நீ மன்னிக்கப்பட்டுவிட்டாய்; போய் வேலையைப் பார். செல்வம் உன்னைத் தேடி வரும்" என்று சொல்லி அனுப்பினார் சட்டைமுனி. அதேபோல பணக்காரன் மீண்டும் செல்வங்களை சேர்த்தான்.

இப்படி மக்களை நல்வழிப்படுத்தி, அவர்களின் வாழ்க்கைக்கு நல்வழி வகுத்துக் கொடுத்தவர் சட்டைமுனி.

# 18

# இடைக்காடர் சித்தர்

மனதில் பட்ட எதையும் ஒளிவு மறைவு இல்லாமல் பேசக்கூடியவர் இடைக்காடர் சித்தர். பல்வேறு விதமான சித்து விளையாட்டுகளை நடத்திக் காட்டியவர். கூடு விட்டு கூடு பாயும் வித்தையைக் கற்றவர். என்னதான் வித்தைகளின் வித்தகனாக இருந்தாலும், அவரவர் வினையை அவரவர்தான் அனுபவித்தாக வேண்டும்.

விதியை வெல்லும் ஆற்றல் இறைவனுக்கு மட்டுமே உண்டு என்ற கருத்தில் உறுதியானவர். ஊருக்குள் இவர் செய்யும் காரியங்களைப் பார்த்து, மக்கள் இவரை 'பைத்தியக்காரன்' என்றனர். ஆனாலும் இடைக்காடர் சித்தர் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படவே இல்லை.

ஏராளமான பாடல்களையும் எழுதி இருக்கிறார் இடைக்காடர். உதாரணமாக, இங்குள்ள பாடலை ஒவ்வொரு வார்த்தையாக நிறுத்திப் படித்துப் பாருங்கள். எந்த அகராதியையும் தேடாமல் உங்களுக்கே விளக்கம் புரியும். அந்த அளவுக்கு எளிமையாக வாழ்க்கையின் யதார்த்தங்களை தனது பாடல்களில் பதிவு செய்திருந்தார் இடைக்காடர்.

எல்லா உலகமும் எல்லா உயிர்களும்

எல்லா பொருள்களும் எண்ணரிய

வல்லாளன் ஆதிபரம சிவனது

சொல்லால் ஆகுமே கோனாரே!

வானியல் போல் வயங்கும் பிரமமே

சூனியம் என்றறிந்து ஏத்தாக்கால்

ஊனியல் ஆவிக்கு ஒருகதி இல்லையென்று

ஓர்ந்து கொள்ளுவீர் நீர் கோனாரே!

முத்திக்கு வித்தான மூர்த்தியைத் தொழுது
முத்திக்கு உறுதிகள் செய்யாக்கால்
சித்தியும் பத்தியும் சத்தியும் முத்தியும்
சேரா வாகுமே கோனாரே!

தொல்லைப் பிறவியின் தொந்தமுற்ற அறவே
சோம்பலற்றுத் தவஞ் செய்யாக்கால்
எல்லையில் கடவுள் எய்தும் பலம் உமக்கு
இல்லையென்று எண்ணுவீர் கோனாரே!

ஆரண மூலத்தை அன்புட னேபர
மானந்தக் கோலத்தைப் பண்புடனே
பூரணமாகவே சிந்தித்து மெய்ஞ்ஞானப்
போதத்தைச் சார்ந்திரும் கோனாரே!

காலா காலங் கடந்திடும் சோதியைக்
கற்பனை கடந்த அற்புதத்தை
நூலார் பெரியவர் சொன்னநுண் பொருளை
நோக்கத்திற் காண்பது கோனாரே!

சொல்லருஞ் சகள நிட்களம் ஆனதைச்
சொல்லினாற் சொல்லாமல் கோனாரே
அல்லும் பகலும் அகத்தில் இருந்திடில்

அந்தகன் கிட்டுமோ கோனாரே!

சூரியன் வாள்பட்ட துய்ய பனிகெடும்

தோற்றம்போல் வெவ்வினை தூள்படவே

நாறி இடப்பாகன்தாள் நெஞ்சிற் போற்றியே

நற்பதி சேர்ந்திடும் கோனாரே!

மும்மலம் நீக்கிட முப்பொறிக்கு எட்டாத

முப்பாழ் கிடந்ததாம் அப்பாழைச்

செம்மறி யோட்டிய வேலை யமயத்தும்

சிந்தையில் வைப்பீரே கோனாரே!

பஞ்ச விதமாய்ச் சஞ்சலம் பறக்கப்

பற்றற்று நின்றதைப் பற்றி அன்பாய்

நெஞ்சத்து இருத்தி இரவு பகலுமே

நேசித்துக் கொள்ளுவீர் கோனாரே!.

சில மாதங்களில் ஊருக்குள் பெரும் பஞ்சம் வரப்போகிறது என்பதை அறிந்து, அதை மக்களுக்கு எடுத்துச் சொன்னார் இடைக்காடர் சித்தர். ஆனால், அவர்கள் யாரும் இடைக்காடர் சொல்வதை நம்பவில்லை. இருப்பினும், முன் எச்சரிக்கையாக சில விஷயங்களை செய்ய ஆரம்பித்தார் சித்தர்.

ஆடுகள் வளர்ப்பதில் இடைக்காடருக்கு ஆர்வம் அதிகம். அந்த ஆடுகள் குட்டியாக இருக்கும்போதே அவற்றுக்கு எருக்கம் செடிகளை மட்டுமே உணவாகக் கொடுத்து வளர்த்து வந்தார். எருக்கம் செடிகளை சாப்பிட்டால் உடலில் அரிப்பு ஏற்படும்.

அதே நேரத்தில், அவர் தங்கியிருந்த குடிசையின் சுவற்றில் வரகு அரிசியை சேற்றில் கலந்து பூசி வைத்திருந்தார். எருக்கம் செடிகளை

சாப்பிட்ட ஆடுகளுக்கு உடம்பில் அரிப்பு ஏற்பட்டு, அவை சுவற்றில் உரச.. வரகு மீது இருந்த உமி நீங்கி அரிசி மட்டும் கீழே விழுந்தது. அந்த அரிசியை அள்ளிச் சமைத்து பசியாறி வந்தார்.

சித்தர் குறிப்பிட்ட காலத்தில் கடுமையான வறட்சி ஏற்பட்டு, பஞ்சம் தலைவிரித்து ஆடியது. திரும்பிய பக்கமெல்லாம் காய்ந்து வறண்டுபோய் இருந்தது. ஊரில் இருந்த ஆடு-மாடுகள் அனைத்தும் தீவனம் இல்லாமல் பசியால் வாடின. பல ஆடுகள் இறந்துவிட்டன. ஆனால், வறட்சியிலும் வளரக்கூடிய எருக்கம் செடிகளை சாப்பிட்டு பழக்கப்பட்டுப்போன இடைக்காடரின் ஆடுகள் மட்டும் செழிப்பாக இருந்தன. வழக்கம்போல உடல் அரிப்புக்கு சுவரில் உரச.. வரகு அரிசி கொட்டியது. இடைக்காடரும் அதை உண்டு பசி போக்கிக்கொண்டு இருந்தார். ஊரே அவரை வியப்போடு பார்த்தது.

அப்போதுதான், ‘இன்றைக்கு கிடைக்கிறதை வச்சி இன்னைக்கு வாழ்ந்துட்டு போறது இல்லை, ‘வாழ்க்கை’; நாளைக்கு என்ன நடக்கப்போகுதுன்னு முன்கூட்டியே தெரிஞ்சுகிட்டு, அதுக்கு தகுந்த மாதிரி வாழக் கத்துக்கோங்க. அப்போதான் எந்தக் கஷ்டம் வந்தாலும் எதிர்த்து நிற்க முடியும். உன் முகத்துக்கு முன்னாடி உன்னைப் புகழ்ந்து பேசும் உறவுகள் எல்லாம் உதட்டளவில் மட்டுமே இருக்கும். உள்ளத்து அளவில் உனக்காக வாழும் உறவுகளைத் தேடு. அதுதான் காலம் முழுக்க நிலைத்து நிற்கும்.

இறைவனை வணங்குவதில் உங்களுக்குள்ளேயே பல வேறுபாடுகளும் வித்தியாசங்களும் இருக்கின்றன. இறைவன், எல்லோருக்கும் பொதுவானவன்; சமமானவன். யார் பெரியவன் என்கிற போட்டி உங்களுக்குள் வேண்டாம். நீங்கள் எந்த வழியில் இறைவனை வணங்கினாலும், அவன் உங்கள் எல்லோரையும் சமமாகத்தான் பார்ப்பான். உன் உடம்புதான் ஆலயம். அதற்குள்தான் இறைவன் இருப்பான் என்பதை நீ நம்ப வேண்டும். பரம்பொருளான இறைவன், ஆத்மஜோதியாக உங்கள் ஒவ்வொருவரின் இதயத்துள்ளும் நிரம்பி இருக்கிறான். அதனால் இறைவனை வெளியில் தேடுவதை தவிர்த்து உங்களுக்குள் தேடுங்கள்.

கடவுளை அடைவதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியை தேடுகிறார்கள். சிலர், பட்டினி இருக்கிறார்கள். சிலர், தங்கள் உடலை வருத்திக்கொள்கிறார்கள். சிலர், கோயில் கோயிலாக அலைகிறார்கள். இன்னும் பலர், உயிர் பலி கொடுக்கிறார்கள். இது எதுவுமே தேவையில்லை. உன்னை நீ தூய்மையாக வைத்துக் கொண்டால்

இறைவன் உன்னோடு உனக்குள்ளேயே இருப்பான். இதை நீங்கள் ஒவ்வொருவரும் உணர்ந்தால் மட்டுமே உங்கள் வாழ்க்கை உயரும்' என்று கூறியுள்ளார் இடைக்காடர் சித்தர்.

இவர், தன்னுடைய கடுமையான தவ பலத்தாலும் சித்து விளையாட்டுகளாலும் மக்களுக்கு நல்ல பல நிகழ்வுகளைச் செய்தவர்; மழை இல்லாமல் வறண்டுபோயிருந்த பூமியில், மாதம் மும்மாரி மழை பொழிய வைத்தவர்.

# 19

# கடுவெளி சித்தர்

கடுவெளி என்பதற்கு ‘வெட்டவெளி’ என்று பொருள். தங்குவதற்கு, தனக்கென்று தனி இடம் ஒன்று அமைத்துக்கொள்ளாமல் வெட்டவெளியில் சுற்றித் திரிந்ததால் ‘கடுவெளி சித்தர்’ என்று அழைக்கப்பட்டவர். இவர், கொல்லிமலையில் உள்ள காடுகளில் மூலிகைகளைத் தேடி அலைந்தவர். காடுகளில் கிடைக்கும் பழங்களையும் கிழங்குகளையும் சாப்பிட்டு பசியைப் போக்கி வாழ்ந்து வந்தவர்.

*நந்தவனத்திலோர் ஆண்டி - அவன்*

*நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி*

*கொண்டு வந்தான் ஒரு தோண்டி - மெத்தக்*

*கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி!*

அனைவருக்கும் தெரிந்த இந்தப் பாடலை இயற்றியது, கடுவெளி சித்தர்தான்.

வசிய மை வைக்கும் தொழில், கொல்லிமலையில் இன்று மிகவும் பிரபலம். ஒருவரை மயக்குவது, கோபத்தில் இருக்கும் ஆட்களை அடக்குவது... என விதவிதமான காரணங்களுக்காக மை தயாரிக்கும் சாமியார்கள் இங்கே ஏராளம். இவர்களுக்கெல்லாம் கடுவெளி சித்தர்தான் குருநாதர். வீடுகளில் உள்ள துஷ்ட சக்தியை விரட்ட வேண்டும் என பலரும் கடுவெளி சித்தரிடம் வருவர். கொல்லிமலையில் உள்ள சில மூலிகைகளை வைத்து, தனது மந்திர சக்தியால் துஷ்ட சக்திகளை விரட்டி, வீட்டுக்குள் தெய்வீக மணம் கமழ வைத்தவர் கடுவெளி சித்தர்.

ஒரு நாள், கடுவெளி சித்தரைப் பார்க்க வெளியூரைச் சேர்ந்த வழிப்போக்கர் இருவர் வந்திருந்தார்கள். "உங்களுக்கு என்ன பிரச்னை

சொல்லுங்கள்?" என்று சித்தர் கேட்டார். ‘‘நாங்க ரெண்டு பேரும் தோப்பூர் கிராமத்தை சேர்ந்தவுங்க. ரெண்டு பேரும் ஒன்றாக விவசாயம் செய்துகிட்டு இருக்கோம். பக்கத்து தோட்டத்தைச் சேர்ந்தவன் எங்களுக்குத் தொல்லை கொடுத்துகிட்டே இருக்கான். அவனோட ஆடு, மாடுகள் எங்களோட விவசாய நிலத்துக்கு வந்து மேய்ஞ்சிடுது. நாங்க பல தடவை சொல்லியும் அவன் கேட்க மாட்டேங்குறான். அதனால, அவனோட குடும்பத்தை ஒழிச்சிக்கட்டணும். அவன் வீட்டில் உள்ள அத்தனை பேரும் நாசமாக போகணும். அதற்கு நீங்கள்தான் வசிய மை தரணும்’’ என்றனர்.

கண்களை மூடியபடி, அவர்கள் சொல்வதை கேட்டுக்கொண்டு இருந்த கடுவெளி சித்தர், கோபத்தோடு கண்களை திறந்தார். அவரது கண்களில் கோபக்கனல் வீசியது. ‘‘பக்கத்து நிலத்துக்காரனோட மாடு வந்து உன் நிலத்துல மேய்ஞ்சதுக்கு அவன் என்ன செய்வான்? வாய் இல்லாத ஜீவன் பசிக்கு மேய்ஞ்சிருக்கும். ஆடும் மாடும் நாலு வாய் உங்க நிலத்துல வந்து மேய்ஞ்சிட்டு போறதால நீங்க ஒண்ணும் குறைஞ்சிட மாட்டீங்க. உங்களுக்கு பசி எடுத்தா நீங்க சாப்பிடாம இருந்துடுவீங்களா? ஒரு நாள் சாப்பிடாம இருந்து பாருங்க, பசியோட கொடுமை புரியும். இந்த மாதிரி யாரையாவது அழிக்கணும்னு சொல்லி என்கிட்ட வந்தீங்கன்னா, உங்களையே அழிச்சிடுவேன். நல்லது நடக்கணும்; நல்லது செய்யணும்னா மட்டும் என்கிட்ட வாங்க. கெட்டது செய்யணும்னு மனசாலகூட நினைக்காதீங்க. ஏழேழு ஜென்மத்துக்கும் அந்தப் பாவம் உங்களையே தொடர்ந்து வரும்.

வாயில்லா ஜீவனோட பசியைத் தீர்ப்பது, அந்த ஈசனோட பசியைத் தீர்ப்பதற்கு சமமாகும். இனி இப்படி செய்யாதீங்க.. பத்திரமா ஊரு போய் சேருங்க..’’ என்று எச்சரித்தார்.

வந்தவர்களோ, ‘‘எங்களை மன்னிச்சிடுங்க. இனி அப்படி ஒரு பாவத்தை நாங்க செய்யமாட்டோம். சுற்றத்தாருடன் சண்டை சச்சரவு இல்லாம, ஒத்துமையா இருப்போம்’’ என்று சொல்லி, கடுவெளி சித்தர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுவிட்டு சென்றார்கள்.



ஆகாய கங்கை நீர்வீழ்ச்சிக்குச் செல்லும் வழி

அதன் பிறகு, தான் சென்ற இடமெல்லாம் கடுவெளி சித்தர் மக்களுக்கு நிறைய உபதேசங்களை செய்து வந்தார். அவற்றை மக்கள் பின்பற்றினாலே சுபீட்சமான வாழ்க்கை வாழ முடியும். கடுவெளி சித்தர் சொன்ன வாழ்க்கை தத்துவங்களில் சிலவற்றை பார்க்கலாம்..

'உன்னிடம் இல்லை என்றாலும்கூட பசியால் வாடும் ஒருவர் கையேந்தி நிற்கும்போது 'இல்லை' என்று சொல்லாதே. அவரின் பசியைப் போக்க, முடிந்ததை கொடுத்து உதவு. உன்னைவிட நலிந்தவரை நசித்து வாழாதே. அந்த வாழ்க்கை நிலைக்காது. கண்ணில் பட்டது, காதில் கேட்டது எல்லாம் உண்மை என்று நினைத்து நம்பிவிடாதே. தீர விசாரித்த பிறகே நீ கேட்டதையும் பார்த்ததையும் நம்பு.

கொலை, களவு, பொய் இந்த மூன்றையும் வாழ்க்கையிலிருந்து விலக்கி வை. பெற்றோரை எந்தச் சூழ்நிலையிலும் அவமதிப்பு செய்யாதே. நீ நலமோடு இருக்க வேண்டும் என, இந்த உலகத்தில் நினைக்கும் உண்மையான உள்ளங்கள் அவையே. வஞ்சனைகள் செய்யாதே; அதை செய்வாரோடும் சேராதே. ஞானம் என்பதை நீ கற்று அறிய முடியாது. பட்டுதான் அறிந்துகொள்ள முடியும்.

உனக்குள் இருக்கும் 'தான்' என்ற அகங்காரத்தைத் தூக்கி எறி; கோபத்தை விட்டொழி. மோகத்தை அடக்கி மனதை ஒருநிலைப் படுத்து. நீ கேட்பதெல்லாம் கிடைக்கும்' என்று வழி காட்டுகிறார் கடுவெளி சித்தர்.

# 20

# *கல்லுளிச் சித்தர்*

*கல்லுளிச் சித்தர் நடந்துவந்தால், எதிரே இருக்கும் மலைகளும் பாறைகளும்கூட பயந்து விலகி வழி விடுமாம். அந்த அளவுக்கு சக்தி மிகுந்த கோபக்காரர் கல்லுளிச் சித்தர். இவரது வாயிலிருந்து அவ்வளவு சீக்கிரம் வார்த்தைகள் வராது. வந்தால் ஒவ்வொன்றும் பொருள் பொதிந்ததாகத்தான் இருக்கும்.*

*கல்லுளிச் சித்தன் போன வழி, காடு மேடு*

*எல்லாம் தவிடு பொடி..!*

*- என்று கல்லுளிச் சித்தரைப் பற்றி, சில இடங்களில் குறிப்புகள் உள்ளன.*

*கொல்லிமலையான சதுரகிரியில், கல்லுளிச் சித்தர் கால் தடம் படாத இடங்களே இல்லை. தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் என்பதைப்போல கல்லுளிச் சித்தர் சுற்றித் திரிந்த இடங்களில் சதுரகிரிக்கும் முக்கிய இடம் உண்டு. எவ்வளவு பெரிய பாறையாக இருந்தாலும், அதை ஒற்றை ஆளாக நகர்த்திவிட்டு நடப்பார் கல்லுளிச் சித்தர். தன்னை நம்பியவர்களுக்கு ஓர் ஆபத்து என்றால், முதல் ஆளாக வந்து நிற்பார்.*

*கொல்லிமலையில் உள்ள ஒரு கிராமத்தில் கல்லுளிச் சித்தர் போய்க்கொண்டு இருந்தார். அங்கே ஒரு வீட்டில், முதியவர் ஒருவரின் இறப்புச் சடங்கு நிகழ்ந்துகொண்டு இருந்தது. அவரது பிள்ளைகளும் உறவினர்களும் ஒன்றுகூடி அழுதுகொண்டு இருந்தார்கள். இறந்துபோனவருக்கு அருகே சென்றார் கல்லுளிச் சித்தர். இறந்துபோனவரின் பேரன் மனைவி, நிறைமாத கர்ப்பிணியாக பிணத்துக்கு பக்கத்தில் உட்கார்ந்து அழுதுகொண்டு இருந்தார்.*

*"இப்போ எதுக்குடா எல்லோரும் அழுறீங்க. மனுஷனா பொறந்தா*

எல்லோரும் இறந்துதான் ஆகணும். பிறப்பு என்று வரும்போது எப்படி எல்லோரும் சந்தோஷமா ஏத்துக்குறீங்க. இறப்பையும் அதுபோலவே ஏத்துக்கோங்க. இறந்தவர்கள் எல்லாம் அப்படியே போய்டமாட்டாங்க. இறந்தவர் மீண்டும் பிறந்தே ஆக வேண்டும். இன்னைக்கு செத்துப்போன உங்க தாத்தா, நாளைக்கு உன் மனைவியோட வயித்துல குழந்தையாக வந்து பிறக்க போறாரு. நாளைக்கு பிறக்கப் போற உங்க தாத்தாவை நல்லபடியாக பார்த்துக்கோ. தாத்தா பிறப்பதற்காகத்தான் இறந்திருக்காருன்னு நினைச்சுகிட்டு, எல்லோரும் சந்தோஷமா அவரை கொண்டுபோய் அடக்கம் செய்திட்டு வாங்க. இந்த உலகத்துல காலையில தோன்றும் சூரியனே மாலையில மறைந்துடுது. அப்புறம் மனுஷன் மட்டும் மறையாம இருக்கணும்னா, முடியுமா?" என்று சொல்லிவிட்டு புறப்பட்டார்.

இழவு வீட்டில் இருந்த அத்தனை பேருக்கும் அப்போதுதான் உண்மை உறைத்தது. இறந்துபோன தாத்தாவை சந்தோஷமாக அடக்கம் செய்துவிட்டு வந்தார்கள். அடுத்த வாரமே அந்த வீட்டில் ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. அதற்கு, இறந்துபோன தாத்தாவின் பெயரைச் சூட்டி மகிழ்ந்தனர்.

‘நல்ல விஷயங்களை மட்டுமே நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். கெட்டதை முடிந்தவரை சீக்கிரம் மறந்துவிட வேண்டும். அதற்காகத்தான் மறக்கும் ஆற்றலை மனிதனுக்கு அளித்துள்ளான், இறைவன். எல்லாவற்றையும் மனதுக்குள் வைத்துக்கொண்டு இருந்தால், கடைசியில் இந்த உலகத்தில் இருக்கும் ஒவ்வொருவரும் பைத்தியக்காரனாக மட்டுமே இருக்க முடியும். ஒரு தாயும்-தந்தையும் சேர்ந்தால் மட்டுமே குழந்தை உருவாகும். அந்தக் குழந்தை வளர்ந்த பிறகு, அது இன்னொருவரோடு புணர ஆரம்பிக்கும். அப்போது இன்னொரு குழந்தை உருவாகும். இதுதான் வாழ்க்கையின் நியதி’ - இது அத்தனையும் கல்லுளிச் சித்தர் உணர்ந்து சொன்ன வாழ்க்கையின் மாற்ற முடியாத நெறிகள்.

21

# கொல்லிமலை மருத்துவங்கள்!

*'கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி'- என்று தமிழினத்தை சொல்வார்கள். மற்ற நாடுகளில் வைத்தியம் பார்ப்பதற்கு ஆரம்பித்த காலத்திலேயே இங்கு சித்த மருத்துவம் முழுமை பெற்றிருந்தது.*

*விஞ்ஞானமும் மெய்ஞானமும் சேர்ந்ததுதான் சித்த மருத்துவம். உடலுக்கும் உள்ளத்துக்கும் சிகிச்சை அளிப்பதே சித்த மருத்துவம். மனிதனின் உடலில் 4,448 வியாதிகள் இருக்கிறது. இவ்வளவு நோய்களையும் வாதம், பித்தம், கபம் என மூன்றாக பிரிக்கப்பட்டு இருக்கின்றன.*

*மருத்துவத் துறையில், தற்போது ஏராளமான கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் உறுப்புகளுக்கும் தனித்தனி மருத்துவர்கள் இருக்கிறார்கள். ஆனால், இவை எதுவுமே இல்லாத காலத்திலும், அனைத்து வியாதிகளையும் தீர்க்கும் வல்லமை பெற்ற வைத்தியமாக சித்த மருத்துவம் விளங்கியது.*

*சித்த மருத்துவத்தால் தீர்க்க முடியாத நோய்களே இல்லை என்று சொல்லும் அளவுக்கு, எல்லா நோய்களுக்கும் பக்கவிளைவு இல்லாத மருந்துகளை கண்டுபிடித்து இருக்கிறார்கள். அவர்கள் கண்டுபிடித்திருக்கும் மருந்துகளை பார்க்கும்போது ஒவ்வொரு சித்தர்களும் ஓராயிரம் மருத்துவ ஆராய்ச்சி விஞ்ஞானிகளுக்கு சமம் என்றே சொல்லலாம்.*



மூலிகைகளைத் தேடி...

கொல்லிமலையில், நோய் தீர்க்கும் மூலிகைகள் 1,008 இருப்பதாக சித்தர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆனால், எந்த நோய்க்கு எந்த மூலிகை என்பது போன்ற குறிப்புகள் பல அழிந்துவிட்டன.

சித்த மருத்துவத்தின் அடிப்படையே, 'உணவே மருந்து; மருந்தே உணவு' என்பதுதான். 'முதலில் நோய் எப்படி வந்தது? அந்த நோய்க்கான காரணம் என்ன... போன்றவற்றைக் கண்டுபிடித்து, சிகிச்சை அளிக்க வேண்டும். அப்போதுதான் நோய் முழுமையாக குணமாகும்' என்பது பாம்பாட்டிச் சித்தரின் வாக்கு.

சித்தர்கள், ஆராய்ச்சி செய்து அனுபவபூர்வமாக உணர்ந்த விஷயங்களையே மருத்துவக் குறிப்புகளாக கொடுத்திருக்கிறார்கள். கொல்லிமலை மக்கள், கொல்லிமலையைப் பற்றிய ஆராய்ச்சியாளர்கள், சித்தர் வழியைப் பின்பற்றுபவர்கள்... என பல தரப்பிலும் நாம் விசாரித்த தகவல்களின் அடிப்படையில்தான் சித்த மருத்துவக் குறிப்புகளை எழுதி இருக்கிறோம்.

**சளியை விரட்டிய பாம்பாட்டி...!**

கொல்லிமலை மக்களை வாட்டி வதைத்த நோய்களில் மிக முக்கியமானது, சளி. கொல்லிமலை, எப்போதுமே ஜில்லென்று இருக்கும் மலைப்பகுதி என்பதால், குழந்தைகளுக்கு சளி பிடிப்பதும், அதை கவனிக்காமல் விடுவதால் சளியின் தாக்கம் அதிகமாகி நுரையீரல்

பாதிப்பு உண்டாவதும் வழக்கமாக இருந்தது. பாம்பாட்டிச் சித்தரிடம் மக்கள் இந்த விஷயத்தைச் சொன்னார்கள்.

"நாளைக்கு காலையில வாங்க.." என்று சொல்லி அனுப்பினார் பாம்பாட்டிச் சித்தர். மறு நாள் சளி பாதித்த குழந்தைகளோடு மக்கள் அவரை சந்தித்தனர். வந்திருந்த அத்தனைக் குழந்தைகளையும் வாயைத் திறக்கச் சொல்லி பச்சை நிறத்திலான ஒரு திரவத்தை குழந்தைகளின் வாயில் ஊற்றி அனுப்பினார். "இன்றிலிருந்து மூன்று நாட்கள் காலை மாலை தினமும் இதை குழந்தைகள் குடிக்க வேண்டும். வந்து என்னை பாருங்க" என்று சொல்லி அனுப்பினார். மூன்று நாட்கள் குழந்தைகள் அதை குடித்ததும், சளி வந்த சுவடு தெரியாமல் ஓடிவிட்டது.

‘சாமி.. ஏதோ மந்திரம் செய்து கொடுத்திருக்காரு..’ என்று ஊரே பேச.. "மந்திரமும் இல்ல.. தந்திரமும் இல்ல.. உங்க வீட்டுக்கு பக்கத்தில் இருக்கும் துளசியையும் வெற்றிலையும் எடுத்து நன்றாக அரைத்து சாறு பிழிஞ்சி வச்சிக்கோங்க. குழந்தைகளுக்கு எப்போ சளி பிடிச்சாலும் அந்தச் சாறை மூனு நாளைக்கு கொடுங்க போதும். இதுக்காக என்னை நீங்க தேடி வர வேண்டாம்" என்று சொல்லி அனுப்பினார் பாம்பாட்டிச் சித்தர்.

மலைகளில் உள்ள வயதானவர்கள் பலருக்கு சுவாசிக்க முடியாமல் மூச்சுத் திணறல் ஏற்பட, அதற்கும் மருந்தைக் கொடுத்தார் பாம்பாட்டிச் சித்தர். "கண்டங்கத்தரி சாறு எடுத்து அத்தோடு சுக்கு, மிளகு, திப்பிலி சேர்த்து சூடுபடுத்தி மூன்று வேளையும் குடிச்சிடுங்க. மூச்சுத் திணறலாக இருந்தாலும் சரி.. வரட்டு இருமலாக இருந்தாலும் சரி.. காணாம போயிடும்" என்று மருத்துவம் சொல்லிக் கொடுத்தார். தனக்குத் தெரிந்த மருத்துவ முறைகள் அத்தனையும் மக்களுக்கு பயன்பட வேண்டும் என்பதில் பாம்பாட்டிச் சித்தர் உறுதியாக இருந்தார்.

மலைப்பகுதியான கொல்லிமலையில் பாம்பு மட்டும் இல்லாமல் தேள், பூரான் போன்ற விஷ ஜந்துகளும் ஏராளமாக இருந்தன. இதற்கு பாம்பாட்டிச் சித்தர் சொல்லிக் கொடுத்த வைத்திய முறைதான் இன்றுவரை கொல்லிமலையில் பின்பற்றப்பட்டு வருகிறது.



மூலிகைத் தண்ணீர்

*சிறியா நங்கை, பெரியா நங்கை என இரண்டு வகையான செடிகள் இருக்கின்றன. இதில் சிறியா நங்கை இலையைப் பறித்து அம்மியில் அரைத்து, சிறிய வகை பாம்புக் கடித்தவர்களுக்கு கொடுத்துச் சாப்பிட வைக்க வேண்டும். அந்த இலையில் கசப்பு சுவை உணரும் வரை சாப்பிட்டுக்கொண்டே இருக்க வேண்டும். அப்படிக் கசப்புச் சுவையை உணர்ந்தால் விஷம் இறங்கிவிட்டது என்று அர்த்தமாம்.*

*இதேபோல, பெரியா நங்கை இலையை நன்கு அரைத்து, காலை மாலை இரண்டு வேளையும் சின்ன திராட்சை அளவில் சாப்பிட்டால் எத்தகைய கொடிய விஷ பாம்பு, விஷ பூச்சிகள் கடித்திருந்தாலும் தப்பித்துக் கொள்ளலாம் என்று பாம்பாட்டிச் சித்தர் குறிப்பிட்டதாக கொல்லிமலையில் நம்பப்பட்டு வருகிறது.*

*பாம்புக் கடிக்கு இப்படி ஒரு மருந்தை மட்டும் இல்லை.. பல மருந்துகளை பாம்பாட்டிச் சித்தர் குறிப்பிட்டிருக்கிறார். வாழை மரத்தின் மட்டையை பாம்புக் கடித்த இடத்துக்கு பக்கத்தில் இறுக்கமாக கட்டிவிட்டு கடிக்கப்பட்ட இடத்தை சுத்தி இருக்கும் ரத்தத்தை வெளியேற்ற வேண்டும். உடனடியாக ஒரு டம்ளர் அளவு வாழைத்தண்டு சாறு கடிபட்டவரை குடிக்க வைக்க வேண்டும். பாம்புக் கடிக்கு எளிய வைத்தியமாக இதை குறிப்பிட்டிருக்கிறார்.*

*தேள் அல்லது பூரான் கடித்தால், கடித்த இடத்தில் தும்பை பூ செடியை பறித்து நன்றாக அழுத்தமாக தேய்க்க வேண்டும். அத்துடன் ஒரு கையளவு தும்பை செடியை மென்று சாப்பிட்டுவிட்டால் விஷம் உடனடியாக முறிந்துவிடும்.*

# 22

# தாம்பத்தியத்துக்கு உதவும் தண்ணீர் விட்டான் கிழங்கு!

*மனிதனின் உடலில் ஏற்படும் முதுமைக்கும் தளர்ச்சிக்கும் என்ன காரணம் என்பதுதான், கோரக்கர் சித்தரின் மிக முக்கியமான ஆராய்ச்சி. 'காயகல்பம்' என்று சொல்லப்படும் மருந்தை முதன்முதலில் கண்டுபிடித்தது கோரக்கர்தான். அதேபோல, குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந்தை பேறு கிடைக்கும் மருந்துகளையும் கண்டுபிடித்தார்.*

*'வெட்டி வேரும் நன்னாரியும் நன்கு அரைத்து தேய்த்துக் குளித்தால், உடலில் சுருக்கம் மறையும்' என்று சொன்ன கோரக்கர், தண்ணீர் விட்டான் கிழங்கை வேக வைத்தோ, பச்சையாகவோ தினமும் சாப்பிட்டு வந்தால் தாம்பத்ய சந்தோஷம் நிலைத்திருக்கும் என்றும் கோடிட்டுக் காட்டினார்.*

*செக்ஸ் உணர்வை தூண்டக்கூடிய ஆற்றல் கொண்ட கிழங்கு இது. புதிதாக திருமணம் ஆக இருக்கும் ஆண்களுக்கு, கொல்லிமலை பகுதியில் இந்தக் கிழங்கை அதிகமாக கொடுக்கிறார்கள். வயதானவர்கள்கூட இந்தக் கிழங்கை சாப்பிட்டால் இளைஞர்களைபோல உறவு வைத்துக்கொள்ள முடியுமாம்.*



இதுதான் அந்த 'வயாகரா கிழங்கு'

தற்போது அந்தக் கிழங்குக்கு ‘வயாகரா கிழங்கு’ எனப் பெயர் வைத்து, கொல்லிமலையில் அமோகமாக விற்பனை செய்யப்படுகிறது. கொல்லிமலையின் பல இடங்களில் வயாகரா கிழங்கு சூப்பும் சுடச்சுட கிடைக்கிறது. சித்த மருத்துவத்தில் இந்தக் கிழங்கை வெயிலில் உலர்த்திப் பொடியாக செய்து, தாம்பத்திய சுகத்துக்கான மருந்தாக விற்பனை செய்கிறார்கள்.

கொத்தமல்லி இலையைச் செடியிலிருந்து பறித்ததும் கையில் கசக்கி தினமும் முகத்தில் தடவி வந்தால், முகம் எப்போதும் பள பளப்பாக இருக்கும். மகிழம்பூ மரத்தின் பட்டையை அரைத்து, அத்துடன் தேன் கலந்து தினமும் காலை வேளையில் பெண்கள் சாப்பிட்டு வந்தால், குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்கு அந்த பாக்கியம் கிடைக்கும்.

தூதுவிளை இலைகளையோ அல்லது அதன் பழங்களையோ தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், சளி தொல்லை நீங்கும். அதுமட்டும் இல்லாமல் ஆண்மை குறைவுப் பிரச்னை உள்ளவர்களுக்கு தூதுவிளை ஓர் அருமருந்து.

ஆண்மை குறைபாட்டை நீக்க.. அரச மரம்

‘அதிமதுரம்’ எனப்படும் வெள்ளைக் குண்டுமணி செடி, கொல்லிமலையில் பல இடங்களில் படர்ந்து இருக்கிறது. இந்தக் கொடியின் இலை, வேர் இரண்டையுமே மருந்தாக பயன்படுத்துகிறார்கள், கொல்லிமலையில் உள்ள வாழவந்தி கிராமத்து மக்கள். அதிமதுரம் வேரை வெயிலில் காயவைத்து பொடியாக்கி தினமும் சாப்பிட்டு வந்தால் ஆஸ்துமா தொல்லை, சளி, மூக்கடைப்பு, இதய நோய்கள் போன்றவை தீரும். அதே பொடியைக் கர்ப்பமாக இருக்கும் பெண்கள் பாலில் கலந்து சாப்பிட்டால், பிறக்கப் போகும் குழந்தை அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும் என்பது இந்தக் கிராமத்து மக்களின் நம்பிக்கை.

அதேபோல, அரச மரத்தின் பழங்களையும் இங்கே மருந்து பொருளாக பயன்படுத்துகிறார்கள். ஆண்மை குறைபாடு உள்ளவர்களும், குழந்தை பாக்கியம் இல்லாதவர்களும் இந்தப் பழத்தை உலர்த்தி பொடியாக்கி தினமும் ஆட்டுப்பாலில் கலந்து இரு வேளை சாப்பிட்டால், ஆண்மை குறைபாடு நீங்கும். ‘அரச மரத்து பிள்ளையாரை சுத்தி வந்தால் குழந்தை பிறக்கும்’ என அந்தக் காலத்தில் விளையாட்டாக சொல்லி வைத்ததற்கு இதுதான் காரணம் என்கிறார்கள். வாழவந்தி நாட்டு மக்கள், நோய் நொடி இல்லாமல் ஆரோக்கியமாக இருக்க முக்கிய காரணமே, அரச மரம்தான் என்று அடித்துக் சொல்கிறார்கள்.

கொல்லிமலையில் எளிதாக கிடைக்கும் பலா, பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டதாம். பலா மரத்தின் பிஞ்சும், பூவும் சேர்த்து அரைத்துச் சாப்பிட்டால், பெண்களுக்கு உள்ள வெள்ளைப்படுதல் பிரச்னை தீருமாம். பலா பழத்தின் கொட்டையைச் சாப்பிட்டால் உடல் எடை கூடும்.

# 23

# ஐந்து கீரைகள்.. அற்புத பலன்கள்..!

*சித்தர்களால் அடையாளம் காட்டப்பட்டதாக சொல்லப்படும் ஐந்து வகை கீரைகள், கொல்லிமலை மக்களால் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கீரை, சத்து மிக்கது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், ஒவ்வொரு கீரையும் நமது உடலுக்கு எந்தெந்த வகையில் பயன்படுகிறது என்பதை, கொல்லிமலையில் வசிக்கும் மக்கள் மிகத் தெளிவாக தெரிந்து வைத்துள்ளனர். அவர்கள் சொன்ன பயனுள்ள தகவல்கள் இதோ..*

***முளைக் கீரை***

*நம் ஊரில் சர்வ சாதாரணமாக கிடைக்கும் கீரைகளில் முக்கியமானது இது. இதை 'தண்டுக் கீரை' என்றும் அழைக்கிறார்கள். இந்தக் கீரையில் உள்ள மருத்துவ குணங்களை, சித்தர்கள் அந்தக்காலத்திலேயே கண்டுபிடித்துக் கூறியுள்ளனர். முளை கீரையைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், மூளை சுறுசுறுப்பு அடைவதோடு, உடலில் உள்ள சொரி, சிரங்கு... போன்ற தோல் வியாதிகளும் குணமாகும். குழந்தைகளுக்கு இந்தக் கீரையைக் கொடுப்பதால் அவர்களுக்கு நல்ல பசியைத் தூண்டும்.*

***கரிசலாங்கண்ணி கீரை***

*மூலிகை, ஆராய்ச்சி என்று இறங்காமல் சாதாரணமாக பக்கத்தில் உள்ள சந்தைகளில் கிடைக்கும் கீரை, கரிசலாங்கண்ணி. சங்க இலக்கியங்களில்கூட இந்தக் கீரையைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. 'கரிசல்' என்பதற்கு 'தங்கம்' என்று ஒரு பொருள் உண்டாம். இந்தக் கீரையைச் சாப்பிட்டு வருபவர்களின் உடல், எப்போதும் தங்கத்தைப்போல மினுமினுப்பாக இருக்குமாம். ரத்தத்தை சுத்தப்படுத்தும் ஆற்றல் கொண்ட இந்தக் கீரை, கண் பார்வையைக் கூர்மையாக்கி, உடல் பருமனையும் தொப்பையையும் குறைக்கும் என்று*

கூறுகின்றனர் சித்தர்கள்.

**அகத்திக் கீரை**

'அகத்தி' என்றாலே, முதன்மையானது; முக்கியமானது. அகத்திய மாமுனிவர், இந்தக் கீரையை 'வக்ர புஷ்பம்' என்று குறிப்பிடுவார். மனிதர்களுக்கு, குடலில் ஏற்படும் சகல வியாதிகளையும் தீர்த்து வைக்கும் அபூர்வ மூலிகை என்றே அகத்திக் கீரையைச் சொல்லலாம். தொண்டை வலி, காய்ச்சல்... போன்றவற்றுக்கும் அகத்திக் கீரை அருமருந்து. காடு, மலைகளில் சுற்றித் திரிபவர்களும், நேரம் காலம் பார்க்காமல் வேலை செய்பவர்களும் வாரத்துக்கு இரண்டு முறையாவது அகத்திக் கீரையைத் தவறாமல் சேர்த்துக்கொள்வது நல்லது.

**அறு கீரை**

அறு கீரைக்கு, அரை கீரை, கிள்ளுக் கீரை, அரக் கீரை என்று பல பெயர்கள் உண்டு.

அத்திப்பழமும் அறு கீரை நல்வித்தும்

கொத்தி உழப்பெய்து கூழட்டு வைத்தனர்

என்று திருமந்திரத்திலேயே அறு கீரையைப் பற்றிய அரிய தகவல்கள் இடம் பெற்றுள்ளன. மருத்துவ குணங்கள் அதிகம் நிரம்பியதாக அறு கீரையைக் குறிப்பிட்டுள்ளார்கள். காய்ச்சல், ஜன்னி, வாதம், நடுக்கம் ஆகிய நோய்களை, அறு கீரை குணமாக்கும் தன்மை கொண்டது.

பிரசவமான பெண்களுக்கு இந்தக் கீரையை அதிகம் கொடுப்பார்கள். பிரசவத்தின்போது ஏற்பட்ட இழப்புகளை சரியாக்கும் சக்தி, அறு கீரைக்கு உண்டு. எந்த நோய் உள்ளவர்கள் சாப்பிட்டாலும் கெடுதலை உண்டாக்காத கீரை இது.

**சிறு கீரை**

ஒவ்வொரு வீட்டுத் தோட்டத்திலும் அவசியம் இருக்க வேண்டியது சிறு கீரை. உடம்புக்குத் தேவையான இரும்புச் சத்தும், புரதச் சத்தும் அதிகம் நிரம்பியது. எப்போதாவது உடலும் மனதும் சோம்பலாக இருக்கின்றன என்கிற எண்ணம் வந்தால், சிறு கீரையைச் சாப்பிட்டு பாருங்கள். உங்களை கண்டாலே சோம்பல் தலைதெறிக்க ஓட ஆரம்பித்துவிடும். அத்தகைய ஆற்றல் சிறு கீரைக்கு உண்டு. கல்லீரலுக்கு

நன்மை செய்யக்கூடிய கீரை இதுதான்.

பூக்களில் ஏராளமான மருத்துவ குணங்கள் இருப்பதாக, சித்தர்கள் பல்வேறு குறிப்புகளை சொல்லி இருக்கிறார்கள். கொல்லிமலையில் உள்ள கிராமத்து மக்கள், மருந்துகளாக பயன்படுத்தி வரும் பூக்களை பற்றியும், அதன் மருத்துவ குணங்களை பற்றியும் பார்ப்போம்.

**வேப்பம் பூ**

வேப்பம் பூவை பச்சையாகவோ கசாயம் வைத்தோ தினமும் இரண்டு வேளை குடித்தால், அறிவு விருத்தியாகும். மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்டவர்களுக்கு இது அருமருந்து.

எருக்கம் பூ

எருக்கம் பூவோடு கிராம்பு, மிளகு சேர்த்து அரைத்து, தினமும் இரவில் மட்டும் சிறிய அளவு சாப்பிட வேண்டும். இருமலுக்கும் மூச்சுத் திணறலுக்கும் இது நல்ல மருந்தாக பயன்படும்.

**மதனகாமப் பூ**

மதனகாமப் பூவும் முருங்கை பூவையும் சமஅளவு அரைத்து, நிழலில் உலர்த்தி காலையும் மாலையும் பசும்பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால், உடலுறவின்போது சோம்பல் இல்லாமல் இருக்கும். ஆண்களுக்கு விரைப்பு தன்மை நீண்ட நேரம் நீடிக்கும்.

**முல்லைப் பூ**

முல்லைப் பூவின் வாசத்தை முகர்ந்தாலே மன நலம் தொடர்பான பிரச்னைகள் தீரும். மனம், தெளிவான ஒரு நிலைக்கு வரும். முல்லைப் பூவின் சாறை எடுத்து, மூக்கில் சில துளிகள் விட்டால் தலைவலி குணமாகும்.

**எள் பூ**

செலவு எதுவும் இல்லாமல் காடுகளில் கிடைக்கக்கூடியது எள் பூ. இந்தப் பூவை மருந்துபோல முழுங்கி வந்தால் கண்களுக்கு வரும் பாதிப்புக் குறையும். பார்வை குறைபாடு நீங்கும். வயதானவர்கள், இந்தப் பூவை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், கண்களின் பார்வை திறன் கூடும்.

பழங்களில் நிறைய வைட்டமின்கள் இருப்பதையும், அவை உடலுக்கு நல்லது என்பதையும் இன்றைய அறிவியல் ஆராய்ச்சிகளில் கண்டுபிடித்துள்ளனர். ஆனால் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே, பழங்களில் உள்ள சக்தியைப் பற்றியும், பழங்கள் தீர்க்கும் நோய்களைப் பற்றியும் கண்டுபிடித்துள்ளனர் சித்தர்கள்.

கொல்லிமலையில், ஏராளமான பழங்கள் விளைகின்றன. இதில் ஒவ்வொரு பழத்துக்கும் என்ன மருத்துவ குணம் உள்ளது என்பதை கொல்லிமலையில் வசிக்கும் ஒவ்வொருவருக்கும் தெரியும். அந்தக் குறிப்புகளையும் பார்ப்போம்...

**மாம்பழம்**

மாம்பழம் சாப்பிடுவதால், உடலில் ரத்த ஓட்டம் அதிகரிக்கும்; எப்போதும் சுறுசுறுப்புடன் இருக்கலாம்.

**பப்பாளி**

கொல்லிமலையில் வருடம் முழுவதும் கிடைக்கக்கூடியது பப்பாளி பழம். மூத்திரப்பையில் வரும் கல்லை கரைக்க, பப்பாளி சாப்பிடலாம். பல் நோய்க்கு, இது சிறந்த மருந்து. பெண்களுக்கு வரும் உடல் ரீதியான பிரச்னைகள் தீர, தினமும் இரவில் பப்பாளி சாப்பிடுவது நல்லது. ஞாபக சக்திக்கும் பப்பாளிதான். ஆண்களுக்கு தாம்பத்ய சந்தோஷம் நீடித்து இருக்கவும் பப்பாளி பயன்படும்.

**கொய்யா பழம்**

கொய்யா பழம் சாப்பிட சாப்பிட எலும்பு உறுதியாகும். எவ்வளவு பாரத்தைத் தூக்கினாலும் எலும்பு தாங்கும். மலச்சிக்கல் பிரச்னை இருப்பவர்களுக்கு இந்தப் பழம் நல்லது. ரத்தத்தில் உள்ள தேவையில்லாத கிருமிகளை அழிக்கும் ஆற்றல் கொய்யாவுக்கு உண்டு.

**அன்னாசி**

கொல்லிமலையில், திரும்பிய பக்கமெல்லாம் கிடைக்கக்கூடியது பழம் அன்னாசி. உடலின் ரத்த ஓட்டம் குறைவா இருப்பவர்கள் இந்தப் பழத்தை சாப்பிட்டு வந்தால், ரத்தம் விருத்தியாகும். பெண்களுக்கு வெள்ளைப்படுதல் இருந்தால், அவர்கள் அன்னாசி சாப்பிட்டால் ஒரு வாரத்துக்குள் பிரச்னை இருக்கிற இடம் தெரியாமல் ஓடிவிடும்.

**மாதுளம் பழம்**

மலச்சிக்கல் உள்ளவர்கள் தொடர்ந்து மூன்று நாட்கள் மாதுளம் பழத்தை சாப்பிட்டு வந்தால், மலச்சிக்கலில் இருந்து குணம் பெறலாம். வறட்டு இருமல் உள்ளவர்களுக்கும் மாதுளம் பழம் அருமருந்து. சீதபேதியைக் குணமாக்கும் ஆற்றல் மாதுளம் பழத் தோலுக்கு உண்டு.

**விளாம் பழம்**

பல வியாதிகளுக்கு நல்ல மருந்தாக பயன்படுவது விளாம் பழம். தலை வலி, கண்பார்வை மங்கல், காலையில் மஞ்சளாக வாந்தி எடுத்தல், சதா வாயில் கசப்பு, பித்த கிறுகிறுப்பு, கை-கால்களில் அதிக வேர்வை, பித்தம் காரணமாக இளநரை போன்றவற்றை விளாம் பழம் குணப்படுத்தும். அத்துடன் பசியைத் தூண்டும் ஆற்றல் பெற்றது விளாம் பழம்.

**வாழைப் பழம்**

கொல்லிமலையின் வரம் என்றால், அது வாழைப் பழம்தான். மூல நோய்க்கும் மலச்சிக்கலுக்கும் வாழைப் பழத்தைவிட நல்ல ஒரு மருந்து கிடையாது. ஜீரண சக்திக்கு வாழைப் பழத்தைப் பயன்படுத்தலாம். குழந்தை இல்லாத பெண்கள் செவ்வாழைப் பழத்தை தொடர்ந்து சாப்பிட்டால், கர்ப்பம் தரிக்கலாம் என்று சித்தர்களின் மருத்துவ குறிப்புகள் சொல்கின்றன.

**எலுமிச்சை**

எல்லா கடவுளுக்கும் பிடித்த ஒரே பழம், இதுதான். கொல்லி மலையில் வீட்டுக்கு வீடு எலுமிச்சையின் ஆதிக்கம் இருக்கிறது. உடல் களைப்புக்கு, உடனடியாக தீர்வை கொடுக்கக்கூடியது எலுமிச்சைதான். தண்ணீரில் எலுமிச்சை சாறை கலந்து குடித்தால் வயிற்று வலி தீரும்.

# 24

# வியாதிக்கு என்ன மருந்து?

**கீ**ழா நெல்லி இலை, கரிசலாங்கண்ணி இலை, தும்பைச் செடி இலை மூன்றையும் சரி விகிதத்தில் எடுத்து அரைத்து, ஆட்டுப்பாலில் கலந்து தினமும் இரண்டு வேளை சாப்பிட்டு வந்தால், மஞ்சள் காமாலை இருக்கிற இடம் தெரியாமல் போய்விடும்.

வேர்க்குரு, பெரும்பாலும் நம்மில் பலருக்கும் வரும். இதற்காக இப்போது சில பிரத்தியேக பவுடர்கள் வந்துவிட்டன. ஆனால் அதற்கு முன்பு, இள நுங்கை எடுத்து வேர்க்குரு இருக்கும் இடத்தில் பூசினால், அப்படியே பொடிந்து போய்விடும்.

சிலருக்கு, உடம்பில் சின்னக் கட்டிகள் வரும். அதற்கு பதட்டப்பட வேண்டிய அவசியம் இல்லை. அந்திமல்லி செடியின் இலையை அரைத்து, கட்டியின் மேல் பகுதியில் பூசினாலே போதும். கட்டிகள் பழுத்து உடைந்து அமுங்கிவிடும்.

காயம்பட்ட இடத்தில் காட்டாமணக்கு செடியின் பாலை இரண்டு சொட்டு விட்டால், ரத்தப்போக்கு உடனடியாக நிற்கும்; காயமும் ஆறும். தாழம்பூவின் சுட்ட சாம்பலை புண் மீது பூசினாலும் புண் ஆறும்.

செம்பருத்தி இலையை காயவைத்து பொடியாக்கி, காலை மாலை என இரு வேளை சாப்பிட்டு வந்தால், மலச்சிக்கல் தீரும். வெள்ளைப்பூண்டையும் வெற்றிலையையும் ஒன்றாக சேர்த்து அரைத்து உடம்பில் தேமல் உள்ள இடங்களில் தேய்த்து வந்தால், எப்படிப்பட்ட தேமலாக இருந்தாலும் மறைந்துவிடும்.

மருத்துவ உலகுக்கே ஒரு காலத்தில் பெரும் சவாலாக இருந்த காச நோய்க்கு, சித்த மருத்துவத்தில் எளிய முறையில் வைத்திய குறிப்புகளைக் கூறியுள்ளனர் சித்தர்கள்.

அந்தக் காலத்தில், காச நோய் தாக்கியவரை ஊரைவிட்டு ஒதுக்கிவைக்கும் கலாசாரம்கூட நம் நாட்டில் இருந்ததுதான். அதற்கு காரணம், காச நோய் என்பது ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு எளிதில் பரவும் தன்மை கொண்டது என்பதுதான். நோய் பாதித்த

ஒருவர், கண்டிப்பாக முதல் முப்பது நாட்களாவது மற்றவர்களிடம் இருந்து விலகி இருக்க வேண்டும்.

சரி, அதற்கு என்னதான் மருத்துவம்?

வேப்பிலை, வில்வம், அத்தி, அருகம்புல், துளசி, கண்டங்கத்தரி, தும்பை, குப்பைமேனி இலை, கீழாநெல்லி, தூதுவிளை ஆகியவற்றை வெயிலில் உலர்த்தி, பொடி செய்து வைத்துக்கொள்ள வேண்டும். இதில் கைப்பிடி அளவு எடுத்து தண்ணீரில் கலந்து மூன்று வேளையும் குடிக்க வேண்டும்.இப்படி தொடர்ந்து ஆறு மாதங்கள் சாப்பிட்டால் நோய் முற்றிலுமாக குணமாகும்.

நோய் தீர்க்கும் மருத்துவ குறிப்புகளை, பாடல்கள் வாயிலாகவும் சொல்லி இருக்கிறார்கள் சித்தர்கள்.

வாதம் உடற்கடுப்பு வன்சூலை காதிரைச்சல்

ஓதமிகு பினிசம் ஓடுங்காண் - போதெறிந்து

காய் வேளைக் காயும் விழிக் காரிகையே

நாய் வேளையுண்ண நவில் வையமிதில்!

- முடிகிறது ஒரு சித்தரின் பாடல்.

காட்டு கடுகு இலையை சுடு தண்ணீரில் வேகவைத்து, அதன் சாறை பிழிந்து இரண்டு சொட்டு காதுகளில் விட்டால், எத்தகைய காது வலியாக இருந்தாலும் காணாமல் போய்விடும். வாதம், கடுப்பு, பித்தம் ஆகிய நோய்களையும் குணமாக்கும் தன்மையை கொண்டது இந்தச் செடி என்பதுதான், மேலே குறிப்பிட்டுள்ள சித்தர் பாடலின் பொருள்.

கிராமங்களில் சாதாரணமாக கிடைக்கும் புளிச்ச கீரையிலும் மிகச் சிறந்த மருத்துவ குணம் இருப்பதாக, சித்தர்கள் தங்கள் பாடல்களில் எழுதி இருக்கிறார்கள்.

தேக சித்தியாகுஞ்சிறு காசம் மந்தமுறும்

யோகமுறும் விந்துவிநற்புஷ்டியுண்டாம் - வாகாம்

வெளிச்சிறுமான் நோக்கு விழிமென் கொடியே நாளும்

புளிச்சிறு கீரையிணும் போது!

- என்கிறது அந்தப் பாடல்.

புளிச்ச கீரையைச் சாப்பிட்டு வருவதன் மூலம், இருமலும் மந்தமும் சரியாகும். செக்ஸில் ஈடுபடும் எண்ணம் அதிகரிக்கும். நீண்ட நேரம் உறவுகொள்வதற்கு, புளிச்ச கீரை நல்ல மருந்து. புளிச்ச கீரையைக் 'காச்ச கீரை' என்றும் சொல்வார்கள்.

# 25

# எப்படிப் போகலாம்?

நாமக்கல்லில் இருந்து 54 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது, கொல்லிமலை. சேலத்தில் இருந்தும் பஸ் வசதிகள் இருக்கின்றன. அடிவாரத்தில் இருந்து மலைப்பாதையில் மட்டும் 27 கிலோ மீட்டர் தூரம் பயணிக்க வேண்டும்.

சென்னையிலிருந்து போகிறவர்கள் சேலம் வரை ரயிலில் சென்று, அங்கிருந்து பஸ்ஸிலோ காரிலோ செல்லலாம். புதிதாக காரிலோ டூவீலரிலோ போகிறவர்கள், மிகவும் கவனத்தோடு செல்ல வேண்டியது அவசியம்.

சித்தர்கள் வாழ்ந்த குகைகளை பார்க்க வேண்டும் என்றால், அறப்பளீஸ்வரர் கோயில் அருகே உள்ளூரை சேர்ந்த கைடுகள் நிறைய இருக்கிறார்கள். அவர்கள், சித்தர்கள் வாழ்ந்த இடங்கள் வரை அழைத்துப் போக, ஐநூறு முதல் ஆயிரம் ரூபாய் வரை வாங்குகிறார்கள். அவர்களின் துணை இல்லாமல் காட்டுக்குள் போவது நல்லதல்ல.

காட்டு வழியில் நீண்ட நேரமும் தூரமும் நடக்க வேண்டும் என்பதால், குழந்தைகள் மற்றும் வயதானவர்களை இங்கு அழைத்துவருவதைத் தவிர்க்கலாம். நாம், சித்தர்கள் குகைக்குச் செல்லும்போது தண்ணீர், சாப்பாடு, ஜூஸ் வகைகளை கையோடு கொண்டுபோக வேண்டும். வழியில் எதுவும் கிடைக்காது. மதியத்துக்கு பிறகு காட்டுக்குள் பயணம் மேற்கொள்ள வேண்டாம்.




கொல்லிமலையில் தங்குவதற்கு ஐநூறு ரூபாயிலிருந்து ரூம்கள் கிடைக்கின்றன. முடிந்தவரை முன்பதிவு செய்துவிட்டு போவது நல்லது.

வாழ்நாளில் ஒரு முறையாவது எல்லோரும் கொல்லிமலைக்கு சென்று, இயற்கை அன்னையின் வரமான ஆகாய கங்கையில் குளித்து, அறப்பளீஸ்வரரை வணங்கிவிட்டு வந்தால் எல்லா நலமும் கிட்டும்.

## வி.ஐ.பி-க்கள் பார்வையில்...



இந்த நூல், கொல்லிமலையில் வாழ்ந்த சித்தர்கள் பற்றிய விரிவான விஷயங்களைத் திரட்டிச் சொல்கிறது. அவர்கள் செய்த அற்புதங்கள், காட்டிய மூலிகைகள், கீரை, பழ வகைகளில் உள்ள மருத்துவ குணங்கள்... என எளிமையாக விளக்குகிறது. பாம்புக் கடிக்கு என்ன மருந்து, தேமலுக்கு என்ன தீர்வு, சளி, சொறி சிரங்கு போக என்ன வழி என்பதை சித்தர் விளக்கிய வண்ணமாக விளக்குகிறது.

தமிழ்நாட்டு மக்கள் அதிகம் போகாத உன்னதமான ஓர் இடத்துக்குப் போகும் ஆவலை அதிகப்படுத்துகிறது. சித்தர்களின் அறிமுகம் தெரிந்து இன்னமும் புரிந்துகொள்ள வேண்டும் என்கிற ஏக்கத்தையும் உருவாக்கும் இந்த நூல், மக்களுக்கான மிக நல்ல வழிகாட்டி.

இந்த நூலை படிக்கப் படிக்க, கொல்லிமலைக்கு போய்வர வேண்டும் என்கிற ஆர்வம் மேலெழுகிறது.

– பாலகுமாரன்



மாபெரும் மாளிகை ஒன்றை நாம் முழுவதுமாகப் பார்க்க முடியாது. வழி தெரியாமல் தவிப்போம். மாளிகை உரிமையாளரே ஒவ்வோர் அறையையும் திறந்து காட்டினால் எப்படி இருக்கும்? அப்படித்தான் இந்த நூலாசிரியரும் செய்திருக்கிறார்.

தற்கொலை செய்துகொள்ளப் போனவரைத் தடுத்து, மலைகளின் பெருமைகளைச் சொல்லி அருளியது கொல்லிப்பாவை வரலாறு, குள்ளனைத் தருவதாகச் சொல்லும் கள்ளனிடம் உஷார், கொல்லிமலை மக்களின் திருமண முறைகள், சித்தர்களின் உபதேசங்கள்... என வரலாற்றுத் தகவல்களும் கருத்துக் குவியல்களும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன.

சதுரகிரியைப் பற்றியும் இந்த நூல் சொல்கிறது. 'சதுர' என்றால் அளவிட முடியாத, ஆச்சரியமான, புதிது புதிதாக என்றெல்லாம்கூடப் பொருள் உண்டு. அந்த வகையில் இந்த நூலில் ஏராளமான தகவல்கள் இடம் பெற்றுள்ளன.

– பி.என்.பரசுராமன்

KOLLIMALAI SITHARGAL

₹ 75

விகடன் பிரசுரம்

ISBN 978-81-8476-406-2

9788184764062